மஞ்சரி

MAHARAJAH SERFOGI'S SARASWATHI

விக்ருதி - மாசி

சீனுவின் புது வாழ்வு

சினிமா தங்கச் சுரங்கமா?

பாம்புக்கடி வைத்தியம்

கணித மேதை சகுந்தலா

ஞானிகள் பரிசு (சிறுகதை)

பெனிஸிலின் (புத்தகம்)

-6-

பூலோக சொர்க்கம்

எல்லா வளங்களும் வாய்ந்த நாட்டைத்தான் சொர்க்கம் என்கிறோம். வளமான நாட்டில் உள்ளவர்கள் தரையில் நடக்கிறார்கள் என்பதைத் தவிர, அதற்கும் சொர்க்கத்துக்கும் வேறு வித்தியாசம் இல்லை.

—மகாகவி காளிதாஸர்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி — 'குமுதினி'
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி — 'ஆர்வி'
கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 4] [இதழ் 3

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

சீனாவின் புது வாழ்வு

தேவகி பணிக்கர்

சீனாவில் இந்திய சர்க்காரின் ஸ்தானிகராகப் பதவி வகிக்கும் பணிக்கரின் மகள் இந்தப் பெண். அங்கே கம்யூனிஸ்ட் சர்க்கார் அநேக சங்கடங்களைச் சமாளித்து, மக்களின் சுபிட்சத்துக்குப் பாடுபடுகிறது என்பதை இந்தக் கட்டுரையில் இவள் விவரிக்கிறாள். கம்யூனிஸ்ட் சீனாவிடம் நேரு சர்க்கார் காட்டும் மதிப்பின் நியாயம் இதைப் படிக்கும்போது புலனாகவில்லையா?

நான் இந்தியாவிலிருந்து பீக்கிங்குக்குப் புறப்படுவதற்கு முன், அமெரிக்கப் பத்திரிகைகளில், "பஞ்சத்தின் கொடுமை தாங்காமல் சீனப் பொது மக்கள் புதிய சர்க்காரிடம் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். சர்க்காரின் பாடு சங்கடந்தான்" என்றெல்லாம் செய்திகள் வெளியாகி வந்தன. புதிய சீன சர்க்கார் எப்படித்தான் இதைச் சமாளிக்கப் போகிறார்களோ என்று நான் அப்போது ஆச்சரியப்பட்டேன்.

உள்நாட்டுச் சண்டை, ஜப்பானியரின் ஆக்கிரமிப்பு, பழைய குவோமிண்டாங் (சியாங்) சர்க்கார் போகும்போது அணைகளையும் பாலங்களையும் உடைத்தெறிந்ததால் வெள்ளம் வந்து ஊரையும் பயிர்களையும் அழித்தது - இவை எல்லாம் சேர்ந்து சீனாவின் பொருளாதார நிலைமை மிகவும் சீர்குலைந்தது.

சீனாவில் சில மாகாணங்களில் விசேஷமாகத் தானியம் கிடைத்து வந்தது. இன்னும் சிலவற்றில் விளைச்சல் இல்லாமல் மக்கள் பட்டினி கிடந்தார்கள். உள்நாட்டில் பல இடங்களில் குறைந்த விலைக்கு அரிசி விற்பனையாகியும், சரியான போக்குவரத்து இராததால் ஷாங்காயில் இருந்தவர்கள் வெளிநாட்டிலிருந்து அதிக விலை

மூலம்: பிளிட்ஸ் (ஆங்கிலம்: 6-1-'51), பம்பாய்.

கொடுத்து அதைத் தருவிக்க வேண்டியிருந்தது.

சென்ற ஜூன் மாதம் நான் சீனாவுக்குப் போனேன். அப்போது புதிய சீன சர்க்கார் ஸ்தாபிதமாகி ஒன்பது மாசந்தான் ஆகியிருந்தது. எப்பேர்ப்பட்ட அநுபவமுள்ள சர்க்காராலும் அவ்வளவு சீக்கிரம் அந்தமாதிரி பெருத்த சீர்கேட்டைச் சமாளித்திருக்க முடியாது. நாம் சுதந்தரம் அடைந்து மூன்று வருஷத்துக்குமேல் ஆகிறது. 1947-இல் காங்கிரஸ் கட்சியார் பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரத்தை ஏற்றுக்கொண்டார்கள். அப்போது நம் நாட்டின் பொருளாதார நிலைமை எப்படி இருந்தது? சீனாவைச் சியாங் சர்க்கார் விட்டுச் சென்றதைவிட எத்தனையோ மடங்கு மேலாகத்தான் இருந்தது. போக்குவரத்து வசதிக்கு ஒரு குறைவுமில்லை. நாட்டை இரண்டாகப் பிளந்ததால் சில கஷ்டம் நேர்ந்தாலும் தென்னிந்தியாவையும் மத்திய இந்தியாவையும் அது பாதிக்கவில்லை. மலையாளத்திலோ உத்தரப் பிரதேசத்திலோ பயிர்களுக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை. அப்படியிருந்தும் நம்மால் அடிப்படையான பொருளாதாரப் பிரச்னைகளை இன்னும் சமாளிக்க முடியவில்லை! கண்ணெதிரே லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடி வருந்துகிறார்கள்!

சியாங் சர்க்காரின் இறுதிக் காலத்தில் நான்கிங் நகரில் என் தாயார் இருந்திருக்கிறாள். "அப்போது அங்கே முக்கியமான பொருள்களின் விலைவாசியெல்லாம் ஒரேயடியாக ஏறிவிட்டது. மாணவர்களாவது வேர்க்கடலையைச் சாப்பிட்டு எப்படியோ ஒருவிதமாகக் காலந் தள்ளி வந்தார்கள். புரொபஸர்களின் பாடுதான் திண்டாட்டமாகிவிட்டது. இதனால் 1948 அக்டோபரில் புரொபஸர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். மாணவர்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள். சியாங் சர்க்காரின் புதிய நாணயச் செலாவணி முறை 1948 ஆகஸ்டில் சட்டமாகி அமலுக்கு வந்தது. அதன் பலனைப் பொது மக்களின் கையில் உபயோகமற்ற வெறும் காகித நோட்டுக்கற்றைதான் மிஞ்சியது. உயர்தர மத்திய வர்க்கத்தினர் உள்பட எல்லாருக்குமே மனக் கசப்பு ஏற்பட்டுவிட்டது. 'எப்போதடா மக்கள் (கம்யூனிஸ்ட்) விடுதலைச் சைனியம் உள்ளே நுழையும்' என்று எல்லாரும் ஆவலோடு எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்" என்று அவள் சொன்னாள்.

கம்யூனிஸ்டுகள் வந்த பிறகு நான்கிங்கிலும் ஷாங்காயிலும் நிலைமை சீர்திருந்தியது. அவ்வளவு விரைவில் பண வீக்கத்தைச் சமாளிக்க முடியாவிட்டாலும் விலைவாசி அதிகமாக ஏறாமல் தடுத்து ஓரளவுக்கு நிறுத்திவிட்டார்கள்.

ஜூன் மாதத்துக்குள் நிலைமை அடியோடு மாறிவிட்டது. கடுமையான சிக்கன முறைகளை அநுஷ்டித்துச் சர்க்கார் தம் செலவினங்களை மிகுதியாகக் குறைத்துக்கொண்டார்கள். சீனா முழுவதற்கும் ஒரே விதமான வரிவசூல் முறையை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். இதனால் பண வீக்கத்தைச் சமாளிக்க முடிந்தது.

சியாங் சர்க்காரின் ஆட்சியில் பணக்காரர்கள் வரி கொடுக்காமல் பலவித உபாயங்களால் சர்க்காரை ஏமாற்றி வந்தார்கள். எத்தனையோ

தடை விதிகள் இருந்தும் டாக்டர் ஸூங் போன்ற கோடீசுவரர்கள் தங்கள் பணத்தை வெளி நாடுகளுக்கு அனுப்பிவிட்டார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இதற்கு உடந்தையாக இருந்து ஏராளமாகச் சொத்துச் சேர்த்தார்கள்.

அதிக அளவுக்குக் குத்தகை செலுத்தி வந்ததாலும் பண வீக்கம் காரணமாகவும் ஏற்கனவே திண்டாடி வந்தார்கள் சீனக் குடியானவர்கள். இதோடு வரிப் பளுவும் அவர்கள் தலையில் விழுந்தது. இதனால்தான் சீனுவின் நிலைமை பின்னும் மோசமாகி விட்டது.

பண வீக்கம் குறைவதற்காகக் கம்யூனிஸ்ட் சர்க்கார் செய்த மற்றொரு காரியம் இதுதான்: அறுவடைக் காலத்தில் உணவுப் பொருள்களின் விலை சரசமாக இருக்கும். இந்தச் சந்தர்ப்பம் பார்த்துச் சர்க்கார் தாங்களே முக்கியமான உணவுப் பொருள்களை நியாயமான விலை கொடுத்து ஏராளமாய் வாங்கி வைத்துக்கொண்டார்கள். இதனால் வழக்கத்தைவிடக் குடியானவர்களுக்குச் சற்று லாபமே கிட்டியது.

வருஷ முடிவில், 'முன்னே திண்டாடினோமே' என்ற திகிலில் மக்கள் தானியங்களைப் பதுக்க ஆரம்பித்தார்கள். உடனே தானிய விலை ஏறத் தொடங்கியது. கம்யூனிஸ்ட் சர்க்கார் தாங்கள் சேகரித்து வைத்திருந்த தானியத்தை இந்தச் சமயத்தில் நியாயமான விலைக்கு விற்க ஏற்பாடு செய்தார்கள். அது முதல் முக்கிய உணவுப் பொருள்களின் விலைவாசி ஏறுமல் ஒரே ரீதியாக இருந்து வருகிறது. இதனால் பொது மக்களுக்கு இருந்த திகில் நீங்கிவிட்டது.

சர்க்காரே இப்படிக் கொள்முதல் செய்து விற்கவே, கண்டவர்களெல்லாம் மனம் போனபடி வியாபாரம் செய்ய முடியவில்லை. சுமார் பன்னிரண்டு வருஷ காலமாகச் சீனப் பொருளாதாரத்தைக் குலைத்துவந்த கள்ள மார்க்கெட் அதோடு தொலைந்தது.

சீனுவில் பஞ்சக் கொடுமையைப் பற்றி வந்த பத்திரிகைச் செய்திகளுக்கு ஆதாரமே இல்லை என்று, அங்கே போனதும் தெரிந்தது. ஜூன் மாதத்தில் நான் சீனு போய்ச் சேர்வதற்கு முன்பே நான்கிங்கிலிருந்து காண்டன் நகருக்கு ரெயில், கால்வாய், தந்திப் போக்குவரத்தெல்லாம் சரியாகி விட்டன. ஜப்பானியர்களும் சியாங் சர்க்காரும் ஊரைவிட்டு ஓடும்போது அணைக்கட்டுகள், பாலம் எல்லாவற்றையும் உடைத்துச் சின்ன பின்னமாக்கிவிட்டுப் போய்விட்டார்கள். அவைகளையெல்லாம் கம்யூனிஸ்ட் சைனியத்தைச் சேர்ந்தவர்கள்தான் வெகு சிரமப்பட்டுத் திரும்பவும் கட்டி முடித்துக் கொண்டே முன்னேறினுர்கள். இதற்குக் காரணம், அவர்களிடையே இருந்த கட்டுப்பாடும் ஒற்றுமையுந்தான்.

பிறகு கம்யூனிஸ்ட் சர்க்கார் தங்கள் சொந்தச் செலவிலேயே மிகுதிப் பிரதேசங்களிலிருந்து பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கும் நகரங்களுக்கும் உணவுப் பொருள்களை எடுத்து வந்தார்கள். உணவுப் பிரச்னையால் எங்கே விபரீதம் நேர்ந்துவிடப் போகிறதோ என்ற திகிலினுல் சர்க்கார் ஏராளமாக உணவுப் பொருள்களை வாங்கிக் குவித்திருந்தார்கள். நிலைமை சீர் திருந்தின பிறகு பார்த்தால் அளவுக்கு மீறிக் கையிருப்பு இருந்

தது. ஆனால் இதுவும் ஒரு விஷயத்துக்கு நன்மையாகவே முடிந்தது. கள்ள உணவுப் பொருள்களின் விலை வாசி ஏறாமலும் கள்ள மார்க்கெட் ஏற்பட வழி இராமலும் சமாளிப்பதற்கு இது பயன்பட்டது.

இப்படிச் சங்கடமான ஒரு நிலைமையைச் சமாளித்ததற்குச் சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காரின் திறமையும் யுக்தியும் மட்டும் காரணமல்ல; இந்தப் பொறுப்புகளை ஏற்று நடத்திய அதிகாரிகளும் மக்களின் நலத்தையே நோக்கமாகக்கொண்ட உத்தமர்கள்; நம் நாட்டில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு இருந்துவரும் அவ்வளவு வசதியும் சௌகரியமும் அவர்களுக்கு இல்லை. அப்படி இருந்தும் ஓர் உன்னதமான லட்சியம் நிறைவேற அவர்கள் அரும்பாடு பட்டார்கள் என்றால் அதைப் பாராட்டத்தானே வேண்டும்!

'ஷாங்காய் நகரம் படுமோசமான நிலையில் இருக்கிறது' என்று அமெரிக்கர்கள் சொல்லுகிறார்கள். இதற்குப் புதிய சர்க்காரைக் குறை கூறிப் பயனில்லை. ஆசியாவுக்குள்ளேயே பெரிய நகரங்களில் ஒன்று ஷாங்காய். பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய எல்லா வல்லரசுகளும் சேர்ந்துதான் ஷாங்காயைச் சீர்குலைத்துவிட்டன. பிரிட்டிஷ் - அமெரிக்க வியாபாரமும் கூத்தடிக்கும் நைட்-கிளப்பும் மற்ற மேற்கத்தி நாகரிகங்களும் சேர்ந்து அந்த ஊரையே பாழாக்கிவிட்டன.

ஷாங்காயைச் சுற்றிப் பார்க்கப் போனால் மேல்நாட்டார் அங்கே நடத்திய ஆர்ப்பாட்டம் தெரியும். பிரிட்டிஷ், அமெரிக்க, பிரெஞ்சு வியாபாரிகள் பெரிய பெரிய மாளிகைகள் கட்டிக்கொண்டு அங்கே சுகபோகங்களில் ஈடுபட்டு வந்தார்கள். வார முடிவில் இவர்கள் அங்கே வந்து கோல்ப் ஆட்டம் ஆடிக்கொண்டே 'சுதேசி'களைப் பற்றி இழிவாகப் பேசுவார்கள். ஒரு பக்கம் கால்டெக்ஸ், ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனிகளின் பிரம்மாண்டமான கட்டிடங்கள் என்ன, இன்னொரு பக்கம் உடைந்துபோன படகுகளில் சீனக் கூலிகள் அவதிப்படுவதென்ன? ஷாங்காயில் இந்தக் காட்சி சர்வ சகஜம். ஆனால் இங்கேதான் சீனப் புரட்சியும் ஆரம்பமாயிற்று.

ஷாங்காயில் சுமார் 12,000 தொழிற்சாலைகளும் 1,00,000 கடைகளும் கம்பெனிகளும் இருக்கின்றன. மொத்தம் 9,00,000 தொழிலாளர் இருப்பார்கள். ஏகாதிபத்தியத்தின் பலவிதச் சூழ்ச்சிகளை நேரில்கண்டு அநுபவித்திருந்ததால் இங்கே இருந்த தொழிலாளர்களுக்கு மற்ற ஊராரைவிட அரசியல் அறிவு அதிகம் உண்டு. 1927-இல் இங்கே ஒரு பெரும் புரட்சி ஆரம்பித்தது. ஆனால் சியாங்-கை-ஷேக், சமயத்தில் கை நழுவவிட்டு அதைக் கெடுத்துவிட்டார்.

ஷாங்காயில் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் கிடைப்பது வெகு சிரமம். உள்நாட்டுக்குப் பயன்படாத பட்டு, பீதாம்பரம் போன்றவைகளின் வியாபாரந்தான் அங்கே ஓங்கியிருந்தது. ஷாங்காயிலும் டீண்ட்ஸீனிலும் காண்டனிலும் இருந்த சீனப் பிரபுக்களும் முதலாளிகளும் வெளிநாட்டு வியாபாரிகளும் தரகர்களும் இவைகளை வாங்கி வந்தார்கள்.

கம்யூனிஸ்ட் சர்க்கார் ஏற்பட்டதும் இந்த வியாபாரத்தின் வாயில் மண் விழுந்தது. இதனால்தான்

ஷாங்காயில் கொஞ்ச நாள் வரையில் நிலைமை சீர்திருந்தவில்லை. பொது மக்களுக்குத் தாங்கள் மிகுத்து வைத்ததைப் பட்டு, பீதாம்பரங்களில் போட்டுப் பாழாக்க மனமில்லை. எல்லா மக்களும் வாங்கி உபயோகிக்கக்கூடிய மலிவான பண்டங்களை இப்போது அங்கேயுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய முனைந்திருக்கிறார்கள்.

இந்த மாதிரி தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உதவ, புதிய சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள். நாட்டின் உட்புறமுள்ள வேறு பல நகரங்களிலும் இந்த மாதிரி தொழிலைத் தொடங்குபவர்களுக்கும் அதற்கு வேண்டிய வசதியெல்லாம் அளிக்கிறார்கள்.

பெருத்த முதலாளிகள், நாட்டின் நலத்துக்குகந்த முதலாளிகள் என்று இரண்டு வகையாகப் பாகுபடுத்தியிருக்கிறார்கள். முதல் வகையினரும் பெரிய நிலச்சுவான்தார்களும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் பணத்தை எந்தத் தொழிலிலும் போடாதவர்கள்; பழைய அரசாங்கத்தில் நிர்வாகம் செலுத்தி இன்னும் ஏராளமாகப் பணம் குவித்தவர்கள். சியாங், ஸூங், கூங், சென் இந்த நாலு குடும்பத்தாரும் இந்த் வகையைச் சேர்ந்தவர்கள் தான். இவர்களுக்குத் தொழில் வளர்ச்சியில் அக்கறை இல்லாததால் வெளிநாட்டுச் சரண்டலைத் தடுக்காமல் சும்மா இருந்தார்கள். இவர்களின் தொடர்புடைய தொழில் முயற்சிகளைப் புதிய சர்க்கார் ஆதரிக்கவில்லை.

நாட்டின் நலத்துக்கு உகந்த முதலாளி வகையைச் சேர்ந்தவர்கள் உள்ளூரிலேயே தொழில் நடத்தி வருபவர்கள். பழைய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கை தம் சொந்த நலனைப் பாதிக்கவே, இவர்கள் அந்த எதிர்த்து வந்தார்கள். நாளடைவில் கள்ள மார்க்கெட் வியாபாரத்தில் இவர்கள் இறங்கினாலும் சியாங்கின் பிற்போக்குக் கொள்கையை இவர்கள் அவ்வளவாக ஆதரிக்கவில்லை. ஆகவே, நாட்டுக்குக் கேடு செய்யாமல் இந்த வகையினர் செய்யும் தொழில் முயற்சிகளுக்குப் புதிய சர்க்கார் எல்லாவித உதவியும் செய்கிறது.

இப்போது இருக்கும் தொழில்களை அழியாமல் பாதுகாக்க வேண்டியிருப்பதாலும், தொழில் நுணுக்கம் அறிந்தவர்கள் போதிய பேர் இல்லாததாலும் சர்க்காரே எல்லாவற்றையும் ஏற்று நடத்துவது சாத்தியமில்லை. தனிப்பட்ட முதலாளிகளைச் சிறுசிறு தொழில்கள் நடத்தக் கம்யூனிஸ்ட் சர்க்கார் அநுமதித்திருக்கிறார்கள். அதே சமயம் தனிப்பட்ட முதலாளிகள் ஏராளமாய் லாபம் சம்பாதித்து நாட்டின் பொருளாதார நிலையைப் பாதிக்காதபடியும் கவனித்துக் கொள்கிறார்கள்.

யாருக்குப் பைத்தியம்?

ஜட்ஜி: எதிரியை விடுதலை செய்தீர்களே, இதற்கு என்ன காரணம் சொல்லுகிறீர்கள்?

ஜூரார் தலைவன்: பைத்தியம், ஸார்.

ஜட்ஜி: என்ன! உங்களில் பன்னிரண்டு பேருக்குமா?

கிரிக்கட்டில் குருட்டு நம்பிக்கை

★

கிரிக்கட் விளையாட்டு நிபுணர்கள் பலருக்கு விசித்திரமான குருட்டு நம்பிக்கைகள் இருக்கின்றன.

ஜாக் ஹாப்ஸ் என்பவர் எப்போது விளையாடப் போனாலும் சரி; முதலில் இடது காலுக்குத்தான் 'பாட்' அணிவார். பில் ஈட்ரிச் என்பவரும் இதே வழக்கத்தைக் கடைப்பிடித்தார்.

ஆட்டத்துக்கு முன் சுண்டிப் பார்ப்பதற்காக 'அதிருஷ்டசாலிக் காசு' ஒன்றைக் கப்பி ஆலன் என்பவர் எப்போதும் தம்மிடம் வைத்திருப்பார்.

இங்கிலாந்தில் லார்ட்ஸ் கிரிக்கட் நிலையத்தில் உள்ள உடுப்பறையின் ஒரே மூலைக்கு எப்போதும் சென்று உடுப்பணிவது பாட்ஸி ஹெண்ட்ரென் என்பவரின் வழக்கம். அதற்கு 'ஹெண்ட்ரென் மூலை' என்ற பெயரே ஏற்பட்டுவிட்டது.

ஹெர்பர்ட் ஸட்கிளிப் எப்போது விக்கட்டுக்குப் போனாலும் சரிதான்; சுவர் மாட்டிக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே போவார். உண்மையில் அது அங்கே இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவருக்கு ஒன்றுதான்; கற்பனைக் கடிகாரத்துக்குப் பஞ்சமேது?

ஹட்டன் என்பவர் எப்போது பார்த்தாலும் ஓர் ஐந்து ஷில்லிங் காசைத் தம் ஜேபியில் போட்டுக்கொண்டிருப்பார். அது 'அதிருஷ்டமுள்ள' காசாம்.

டபிள்யூ. ஜி. கிரேஸ் என்பவரின் பெயருக்கு 'பாட்டிங்' வரிசையில் இரட்டைப்படை எண் கொடுத்திருந்தால், தாம் எடுக்கப் போகிற ரன் மிகவும் குறைந்துவிடும் என்று பயப்படுவார். ஆனால் அவர் விஷயத்தில் இரட்டைப்படை எண் வருமோ என்ற சந்தேகத்துக்கு இடமே இல்லை. எங்கே அவர் போனாலும் 'பாட்' அடிப்பவர் ஜாபிதாவில் நம்பர் 1 என்றுதான் அவர் பெயரைக் குறிப்பார்கள்.

மாரிஸ் டேட் என்பவரின் ஒரு நம்பிக்கைதான் மகா விநோதமானது. அவருடைய புதிய தொப்பி ஒன்று ஒரு சமயம் ஹோட்டலில் களவு போய்விட்டது. திருடியவன் கொஞ்சம் தயா தாட்சண்ணியம் உடையவன்போல் இருக்கிறது. அந்தத் தொப்பி இருந்த இடத்தில் 'ட்ரில்பி ஹாட்' என்ற வகையைச் சேர்ந்த கிழிந்து நைந்த பழந் தொப்பி ஒன்றை வைத்திருந்தான். அன்று மழை பெய்ததால் அந்தப் பழந்தொப்பியை அணிந்தே அவர் விளையாடச் சென்றார்; ஒன்பது விக்கட்டுகளை வீழ்த்தினர். அதுமுதல் எங்கே போனாலும் அந்த 'அதிருஷ்டக்காரக் கிழிசல் தொப்பி'யை அவர் கைவிடவே யில்லை.

—ஹார்வி டே, 'டிட்பிட்ஸ்'.

ஜைன மதம் தழைத்தோங்கிய காலத்தில்
தோன்றிய கோவில்கள் நிறைந்த ஆபூ—

கலை மலிந்த மலை

ஆகுண்டி வேங்கட சாஸ்திரி

ராஜஸ்தான் பாலைவனத்தின் நடுவே ஆபூ மலை என்று ஒன்று இருக்கிறது. இது நிலமட்டத்திலிருந்து 5,000 முதல் 6,000 அடி உயரம் இருக்கும். பச்சென்று இயற்கையழகு நிறைந்த இடம் இது. இதன் சரிவுகளில் அருவிகளும் ஆறுகளும் கோணல் மாணலாக ஓடுகின்றன. விஷ்ணு புராணத்தில் இதை 'அற்புத பர்வதம்' என்றும் இதைச் சார்ந்த ஜனங்களைச் சௌராஷ்டிரர், னூரர், ஆபீரர், அற்புதர் என்றும் குறித்திருக்கிறது.

மகேந்திரம், பாரியாத்ரம் முதலிய ஏழு குலபர்வதங்களில் ஆபூ ஒன்று. தாலமி என்னும் சரித்திர ஆசிரியர் இதற்குத் தம் மொழியில் 'ஆபோகோபி' அல்லது தேவர்களின் தண்டனை என்று அழைக்கிறார். மெகஸ்தனீஸ் என்ற பழைய கிரேக்க யாத்திரிகர் அதே பெயரை, 'மலைகளிலிருந்து விடுபட்டது' என்னும் பொருளில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆபூ மலையில் காணும் சிலா சாசனத்திலிருந்து இந்தப் பிரதேசம் சைவ மதத்தின் கோட்டை



கோவில் விமானத்தின் உட்புறத்தில் காணும் சிற்ப வேலைப்பாடு

காப்பிரைட்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு), சென்னை.

யாக இருந்ததென்று தெரிகிறது. அவைகளில் மிகப் பழைய சாசனம் கி. பி. 671-இல் பொறித்தது. ஆபூ மலையில் இப்போது நாம் காணும் அதியற்புதமான கோவில்கள் ஜைனர்கள் குடைந்தவை. கி. பி. 1062-இல் விமலா ஸாஹா என்னும் வணிகர்தலைவன் கட்டிய கோவில் ஒன்றும் இங்கே இருக்கிறது. கி. பி. 1320-க்குப் பின் ஜைன மதம் சீர்கெட்டுச் சைவம் தலை தூக்கியது.

ஆபூ மலையைப்பற்றி வழங்கி வரும ஒரு கதை இது; அங்கே ஒரு கோவிலில் சிற்ப ரூபத்தில் இதைக் காணலாம். சிவ பக்தராகிய வசிஷ்டர் கொஞ்ச காலம் இமயமலையில் வசித்தாராம். பின்பு அவர் அந்த மலையின் ஒரு பகுதியை ஆபூ மலையில் சேர்த்து விட வேண்டுமென்று சிவ பெருமானை வேண்டிக்கொண்டாராம். அப்படியே சிவபெருமான், இமய மலையின் ஒரு பகுதியை ஆபூமலை இப்போது இருக்கும் இடத்தில் வைத்து விட்டாராம். 'இந்த மலையைச் சுற்றிலும் தேவர்கள் நடமாடுகிறார்கள். சுனைகளில் உல்லாசமாக ஜலக்கிரீடை செய்கிறார்கள்' என்று இங்கே உள்ள ஜனங்கள் நம்புகிறார்கள். மலைச் சரிவில் இருக்கும் குகைகளில் ஜைன முனிவர்கள் தவம் செய்வதாகச் சொல்லுகிறார்கள்.

மலையுச்சியில் நின்று பார்த்தால் அந்தக் காட்சி மனோரம்மியமாக இருக்கும். அங்கே உள்ள நக்கி தலாவு என்ற முத்துக்குளம் ஜைனர்களுக்குப் புனிதமான தீர்த்தம். தில்வாராவில் கலைக்களஞ்சியமாகத் திகழும் கோவில்களை அமைத்தவர்கள் ஜைனர்களே. கி. பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து 14-ஆம் நூற்றாண்டின் முன் பகுதிவரையில் ராஜஸ்தானில் ஜைன மதம் மிக உச்சநிலையில் இருந்தது. பிறகு சைவ மதம் தழைத்தோங்கியது.

1321-இல் தோன்றிய ஒரு சிலாசாசனத்தின் மூலம் ஸிரோஹி நாட்டு அரசன் மகதேவ் ஸிம்ஹா என்பவன் இந்தக் கோவில்களில் ஒன்றைச் சீர்திருத்தியதாகத் தெரிகிறது. தில்வாராவுக்குப் போகும் மார்க்கம் இன்னும் பிரயாணத்துக்கு ஏற்றதாக இல்லை. அங்கே இருக்கும் இரண்டு ஜைனக் கோவில்கள் சிறந்த சிற்ப வேலைப்பாடுள்ளவை; வெள்ளைச சலவைக் கல்லால் ஆனவை. சுற்றிலும் 300 மைல் தூரத்தில் சலவைக் கற்களே இல்லாதிருக்கும்போது இது எப்படிச் சாத்தியம் என்றுதான் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது.

தில்வாராக் கோவில்களில் ஒன்று தவிர, மற்ற எல்லாம் சுவேதாம்பர வகுப்பு ஜைனர் கட்டியவை. வெள்ளை வஸ்திரம் உடுப்பதால் இவர்களுக்கு இந்தப் பெயர் வந்தது. இவர்கள் தொழும் விக்கிரகங்களும் வெள்ளை வஸ்திரம் உடுப்பதுபோல் அமைந்திருக்கும். விக்கிரகங்களின் கண்களுக்கு, ஒளி மிகுந்த ஒருவகைக் கற்களைப் புதைத்திருக்கிறார்கள்.

ஜைனர்கள் தம் மதகர்த்தர்களைத் தீர்த்தங்கரர்கள் என்று அழைப்பார்கள். அவர்களைத் தெய்வத்திலும் மேலாக மதித்துக் கோவில் கட்டி ஆராதிப்பார்கள். தில்வாராக் கோவில்களில் பிரதானமாக விளங்குவது இந்தமாதிரி ஒரு கோவிலே. தேவால்வாடா (தேவாலயம் இருக்கும் இடம்) என்பதே இப்படித் தில்வாரா என்று மாறி விட்டது. ஆபூ மலைக்கு

ஒன்றரை மைல் தூரத்தில் இந்தக் கோவில்களைக் காணலாம். இவைகளில் நாலு முக்கியமானவை. முதல் கோவிலில் இருப்பவர் 'ஆதிநாதர்' என்னும் தீர்த்தங்கரர். இவருடைய சின்னம் எருது. இவர் பொன்னிறமானவர். இவர் பிறந்த சமயத்தில் ஆறுமாதகாலம் வைரம், வைடூரியம் முதலிய ரத்தினங்கள் மழைபோல் பெய்தனவாம். இவர் தாயின் கருவில் இருந்துகொண்டு தேவலோகக் கற்பகமரத்தின் கனிகளை உண்டாராம். இந்துக்களின் கோவிலைப்போலவே இதற்கும் சிகரம் இருக்கிறது.

இதில் 48 கால் மண்டபம் ஒன்று இருக்கிறது. இதன் தளம் வெள்ளைச் சலவைக்கல்லால் ஆனது. உட்புறம் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம். பதினாறு வித்தியாதரர்கள் கைகோத்து நாட்டியமாடும் பாவனையில் செதுக்கிய சிற்பம் அற்புதமானது. முன் மண்டபத்தில் சிற்பத்திறமையை வெளியிடும் தோரணமாலை இருக்கிறது. "இந்தக் கோவில் விமான உட்புறத்தில் காணும் வித்தியாதரப் பெண்ணின் வடிவம்போல் இந்தியாவிலே எங்கும் காண முடியாது" என்று பெர்குஸன் என்பவர் எழுதியிருக்கிறார். கோவில் முகப்பில் சிறிய அறைகளில் பல தீர்த்தங்கரர்களின் விக்கிரகங்கள் இருக்கின்றன. அந்த அறைகளின் மேல்தளத்தில் ஸத்ருஞ்ஜயஸ் மாகாத்மியம் என்னும் ஜைன மதநூலைக் கதையாகச் சித்திரித்திருக்கிறார்கள். கூரையின் உட்புறத்தில் விஷ்ணுவின் நரசிம்மாவதாரம், ஹிரணிய கசிபுவைக் கிழிக்கும் நிலையில் காட்சியளிக்கிறது. எங்கே பார்த்தாலும் கந்தர்வ பாடகர் பாடகிகளையும் மயில் கணங்களையும் சித்திரித்திருப்பதைக் காணலாம்.

இந்தக் கோவிலின் அறை ஒன்றில் 'நேமிநாத்' என்னும் தீர்த்தங்கரரைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இவர் மிகவும் பலசாலியாக இருந்தாராம். தம்முடைய கல்யாண விருந்துக்காக இவரைச் சேர்ந்தவர்கள் ஆடு, மாடுகளை மந்தை மந்தையாக ஓட்டிக் கொண்டு வந்ததைக் கண்டு இவர், "என் பெயரால் இத்தனை ஜீவன்கள் உயிரிழப்பதா?" என்று வருந்தி உடனே துறவு பூண்டுவிட்டாராம். இவர் கிர்நாரிலே வாழ்ந்தாராம் ஜைனர்களின் தெய்வம் போன்ற இவருடைய வாழ்க்கைச் சம்பவங்களை 39 அறைகளில் கண்ணையும் மனத்தையும் கவரும்படி சித்திரித்திருக்கிறார்கள்.

இந்தக் கோவில்களை வெளிப்புறத்திலிருந்து பார்த்தால் பகட்டாகத் தெரிவதில்லை. உள்ளே நுழைந்த பிறகே இவைகளின் அழகை அறிய முடியும். சிற்பிகள் தம் கைத்திறமை முழுவதையும் இங்கே காட்டிவிட்டார்கள் என்று தான் சொல்லவேண்டும். இவைகளில் 'சாவ்முகி' என்ற கோவில் ஒன்று உண்டு. இது சிற்பவேலையில் மற்றக் கோவில்களைவிடப் பின்னும் சிறந்து விளங்குகிறது.

ஓர் இடத்தில் கோபுரத்தின் உள் வளைவில் மாமரத்திலிருந்து பிரிந்த இலை ஒன்றைச் சித்திரித்திருக்கிறார்கள். முதலில் நாம் அதைப் பார்த்தவுடன் பசுமையாகத் தெரியும். மழை பெய்து பெய்து பாசி படர்ந்துதான் அப்படி ஆகிவிட்டது. மழை ஓய்ந்தபின்னும் அந்த நிறம் அப்படியே நிலைத்து நிஜமான மாவிலை என்றே தோன்றும்படி ஆகிவிட்டது.

சித்திரம் வரைவதிலே இப்படி ஒரு புதுமுறை தோன்றியது எப்படி? இதற்கு யார் காரணம் தெரியுமா?

மொத்தை உருவப் படம்

சகுந்தலா நாயுடு

படம் என்றால் எந்தக் குழந்தைக்குமே பிடிக்கும். அதில் சுலபமாக எழுதக் கூடியது 'ஸிலுவெட்' (Silhoutte) என்று சொல்லும் முழுமொத்தை உருவப் படந்தான். 'ஸிலுவெட்' என்ற பெயர் இதற்கு எப்படி வந்தது தெரியுமா?

பிரான்ஸ் தேசத்தில் பல வருஷங்களுக்கு முன் ஒரு பெரிய புரட்சி நடந்தது. அதற்குக் கொஞ்ச காலத்துக்கு முன் எடியன் டி'ஸிலுவெட் என்ற பெயருடைய ஒரு நிதி மந்திரி இருந்தார். அவர் பிரெஞ்சுச் சீமான்களின் தங்க வெள்ளித் தட்டுக்களையெல்லாம் உருக்கிப் பாளங்களாக்கி நாட்டின் செலாவணிக்குப் பயன்படுத்தினாராம். அது முதல் எந்தச் சாமானை அழித்து மொத்தையாக மாற்றினாலும் அதற்கு 'ஸிலுவெட்' என்று பெயர் வந்துவிட்டது. சில பேர், "இப்படிச் சுலபமாகச் சித்திரம் எழுதப் பழகுவது அவருடைய பொழுது போக்கு. அதனால்தான் மொத்தைப் படங்களுக்கு இந்தப் பெயர் வந்தது" என்று சொல்லுகிறார்கள்.

அது எப்படியானாலும் சரி; கறுப்பிலோ, வேறு ஏதாவது கெட்டி நிறத்திலோ முழு மொத்தையாகச் சித்திரம் எழுதும் முறைக்கு 'ஸிலுவெட்' என்ற பெயர் நிலைத்துவிட்டது. பெரியவர், சிறியவர் எல்லாரும் பொழுது போக்காக இந்த முறையில் சித்திரம் எழுதப் பழகலாம்.

இதற்கு வேண்டியவை: இவ்வளவுதான். (1) நல்ல 'டிராயிங்' காகிதம்; இந்தியன் இங்கியோ,

மூலம்: சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: குழந்தைகள் மலர்; டிசம்பர் '50), புது டில்லி.

கறுப்பு அல்லது வேறு நிறமுள்ள சாதாரண மசியோ, கெட்டி வர்ணக் கட்டிகளோ; (2) சற்றுப் பட்டையான ஒரு பேனு; கூர்மையான ஒரு பேனு; (3) ஒரு பிரஷ்; (4) முன்னுல் எழுதிப் பழகாதவர்களுக்கு 'டிரேஸிங்,' 'கார்பன்' - தாள்கள்; (5) பென்ஸில், ரப்பர்.

'ஸிலுவெட்' சித்திரத்தில் மொத்த" உருவந்தான் முக்கியம். ஆகவே, உருவத்தின் வெளிக் கோடு நாம் பார்க்கிற மாதிரி அப்படியே அமைய வேண்டும்.

ஆரம்பத்தில் பொம்மை உருவங்கள், மனிதர்கள், பனை, தேர் போன்ற தேவதாரு, வேறு வகை மரங்கள், கட்டிடம், மலை, கோபுரம் இந்த மாதிரி பொருள்களின் வெளித் தோற்றத்தை வரையவேண்டும். சரித்திர சம்பந்தமான பாத்திரங்களையும் இந்த முறையில் வரையப் பழகலாம்.

எதைப் பார்த்தாலும் எவரைப் பார்த்தாலும் 'ஸிலுவெட்' என்று எண்ணிக்கொள்ளுங்கள். இதற்குச் சரியான வழி ஒன்று சொல்லுகிறேன்; சுவரில் நாயின் நிழல் விழுகிறதே, அது ஒரு 'ஸிலுவெட்'; இதே மாதிரி மனிதர், மரம் முதலியவற்றின் நிழல் உருவங்களும் 'ஸிலுவெட்' தான்.

இந்த வகையான சித்திரங்களில் பொருளின் மொத்த உருவந்தான் முக்கியம். அதைத் தெளிவாக வரைந்துகொண்டால் போதும். ஆரஞ்சு, மஞ்சள், கருநீலம் இந்த நிறங்களில் ஏதாவது ஒன்றை உடைய காகிதங்களில் மாலை அல்லது இரவு நேரக் காட்சிகளை எழுதலாம். படத்திலுள்ள ஒரு மாடிவீடு, குடிசை இவைகளின் ஜன்னலுக்குப் பொன் நிறம் தீட்டி

விட்டால் இன்னும் எடுத்துக் காட்டும்.

உருவத்தின் வெளிக் கோட்டைத் தெளிவாக வரைந்துவிட்டால், அப்புறம் வெகு சுலபமாக இந்தியன் இங்கியையோ அல்லது வேறு ஏதாவது பலத்த வர்ணத்தையோ அதற்குள்ளே அப்ப வேண்டியதுதான். இந்தியன் இங்கியானுல் நிறைய ஜலம் உபயோகியுங்கள்; வேறு பலத்த வர்ணமாக இருந்தால் நிறைய வர்ணம் உபயோகியுங்கள். அப்போதுதான் சீக்கிரம் உலரும். 'ஸிலுவெட்'டில் உருவத்தை விரை

வில் எழுதிவிடலாம்; ஆனால் இந்தியன் இங்கியையும் வர்ணங்களையும் குழைப்பதற்குத்தான் நேரம் ஆகும். வர்ணத்தைக் காகிதத்தில் ஒட்டிக்கொள்ளும்படி அப்பிவிடக் கூடாது; லேசாகவும் வெளிக் கோட்டை மீறிச் செல்லாதபடியும் அப்பவேண்டும். அழுத்தித் தேய்க்கவும் கூடாது; தேய்த்தால் வர்ணம் உலர்ந்ததும் கரடுமுரடாகச் சொறசொறவென்று இருக்கும்.

உருவம், அளவு, சித்திர வேலைப்பாடு (டிஸைன்) இவைகளை நன்ருக வரையப் பழகவேண்டுமானுல் 'டிரேஸ்' எடுக்கக்கூடாது. ஆனல் குழந்தைகள் 'டிரேஸ்' செய்து பழகலாம்.

ஒரு படத்தில் பற்பல நுணுக்கங்களையும் காட்டிவிட ஆசைப்பட்டு, பல நுணுக்கங்களைத் திணிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் படத்தின் அமைப்பே கெட்டுவிடும். கூர்ந்து கவனித்து, பொருத்தமாகவும் சீராகவும் வரையப் பயில வேண்டும்.

முதல் முதலாக எழுத ஆரம்பிக்கிறவர்கள், பட்டை நுனியுள்ள பேனுவினுல் வெளிக்கோட்டை வரையப் பழகுவது அவசியம். முதலில் மிருகங்கள், பறவைகள், இயற்கைக் காட்சிகள் இவைகளை வரையப் பழகிக்கொண்டு கடைசியில்தான் மனிதரின் முகங்களை எழுத வேண்டும். இப்படிச் செய்துவந்தால் வெகு விரைவில் நமக்குப் பிடித்த ஏதாவது ஒரு பிராணி அல்லது வஸ்துவின் உருவத்தையோ நம் பெற்ருேர், உறவினர், நண்பர் இவர்களின் உருவங்களையோ அப்படி அப்படியே வரைந்து விடலாம்.

இது ஒருவிதத்தில் அற்புதமான பொழுது போக்காகவும் இருக்கும்; ரசமான பல பொருள்களைச் சேகரித்து வைத்தமாதிரியும் இருக்கும்.

வாழ்த்துக் கடிதத்தில் இப்படி ஒரு படம் வரைந்து அனுப்பினுல், யார்தான் அதை ரசிக்க மாட்டார்கள்?

ஆண் பொய்யும் பெண் பொய்யும்

பொய் சொல்வது, ஆண்களுக்குக் கடைசி மார்க்கம்; பெண்களுக்கு முதல் உதவி.

தன் காதலியைத் தவிர வேறு யாரிடமும் ஆண் பொய் சொல்ல மாட்டான். 'நீ கேட்க வேண்டியதில்லை' என்ற பதிலையே மற்றவருக்குச் சொல்லிவிடுவான்.

பொய்யை ஓர் ஒழுங்கீனம் என்று பெண் மதிப்பதில்லை. ஒரு கொண்டையூசியைப்போல் அதுவும் ஓர் 'உபயோகப் பொருள்' என்றே எண்ணுகிருள். எதிலும் கொஞ்சம் தொல்லையை விளக்கப் பொய்யை அவள் உபயோகிக்கிருள். ஆனுல், ஒன்றுதான் ஆண்களுக்குப் புரியவில்லை: அதாவது, எந்தப் பெண்ணும் மற்றப் பெண்களின் பொய்களுக்கு ஏமாறுவதில்லையே, அது ஏன்?

—கெலெட் பர்ஜஸ்

க்விஸ்

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 18-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

(1) அமெரிக்காவின் தேசிய விளையாட்டாகப் பிரபலமடைந்திருக்கும் பந்தாட்டம் (அ) கோல்ப், (ஆ) பேஸ்பால், (இ) கிரிக்கட் - இந்த மூன்றில் எது?

(2) கிரிக்கட் பந்தின் மேல் புறத்தைத் தோலினால் மூடித் தைத்திருப்பதைப் பலரும் பார்த்திருப்போம். அந்தப் பந்துக்கு உள்ளே என்ன வைத்திருக்கிறது?

(3) சமீபத்தில் காமன்வெல்த் டீமுக்கும் இந்திய டீமுக்கும் நடந்த நாலு கிரிக்கட் டெஸ்ட் மாட்சுகளில் ஹஜாரே மூன்று இடங்களில் ஸெஞ்சுரி எடுத்தது எல்லாருக்கும் நினைவிருக்கும். வேறு மூன்று பேர் இரண்டு இடங்களில் ஸெஞ்சுரி எடுத்தார்கள்; ஒருவர் ஒரே இடத்தில் ஸெஞ்சுரி எடுத்தார். அவர்கள் யார்?

(4) மேலே சொன்ன டெஸ்ட் மாட்சுகளில் இந்திய டீமைச் சேர்ந்த யாருடைய போலிங்கில் மிக அதிக விக்கட்டுகள் விழுந்தன? காமன்வெல்த் டீமைச் சேர்ந்த யாருடைய போலிங்கில் மிக அதிக விக்கட்டுகள் விழுந்தன?

(5) ஒரு யானை தன் முதுகில் தூக்கக்கூடிய பாரம் சுமார் (அ) 23 டன், (ஆ) $\frac{1}{2}$ டன், (இ) 3 டன் - இந்த மூன்றில் எது சரி?

(6) 80 தீவுகள் மீது 400 பாலங்களைக்கொண்டு இணைத்த அழகான நகரம் ஒன்று உலகத்திலே இருக்கிறது. அது எந்த நகரம்?

(7) குற்றம் புரிவோரைப் பற்றிப் பொதுவாக நிலவி வரும் சில அபிப்பிராயங்களைக் கீழே தந்திருக்கிறோம். இவைகளில் எது எது சரி, எது எது தப்பு என்று உங்களால் சொல்ல முடியுமா? (அ) குற்றவாளிகளில் பெரும்பாலோர் பித்துப் பிடித்தவர்; (ஆ) குற்றம் புரியும் குணம் பரம்பரையாய் வரும்; (இ) மணம் புரிந்தவரை விடப் பிரம்மசாரிகளே அதிகமாய்க் குற்றம் புரிகிறார்கள்; (ஈ) அதிகக் கடுமையான தண்டனை விதித்தால், குற்றங்கள் குறையும்; (உ) ஒருவருடைய விரல் ரேகைபோல் இன்னொருவருடைய விரல் ரேகை இருப்பதே கிடையாது.

(8) ஆங்கிலத்தில் பிரசித்தமான ஒரு நூல் பெபீஸ் என்பவரின் தினசரிக் குறிப்பு. அதில் உள்ளது இந்த நிகழ்ச்சி:

சார்லஸ் மன்னர் தம் கோச்சிலிருந்து இறங்கி, "நெல்லி, வியாபாரம் எப்படி?" என்று பழக்காரியைக் கேட்டார். அவள் குறும்புத்தனமாக, "தேவலை, பிரபு! இந்த ஆரஞ்சுகளை ஷில்லிங்குக்கு 4 விகிதம் 10 டஜன், 5 விகிதம் 10 டஜன், 6 விகிதம் 10 டஜன் வாங்கினேன். இவைகளை ஒரே விகிதத்தில் இப்போது விற்கிறேன். இத்தனையும் விற்றால் எனக்கு 16 ஷில்லிங் லாபம் கிடைக்கும்" என்றாள். மன்னர் பெபீஸைப் பார்த்துக் கண் சிமிட்டியபடி மூன்று ஆரஞ்சுகளை வாங்கிக்கொண்டார். மன்னர் கொடுத்த தொகை எவ்வளவு?

புதிய அட்லாண்டிஸ்

-பேக்கன் வர்ணிக்கும் நாடு-

★ பூலோகத்தை இன்ப உலகமாக மாற்றுவது எப்படி என்று இலக்கியச் சித்திரங்களில் சிலர் காட்டியிருக்கிறார்கள். அவைகளின் சாரத்தைத் தொடர்ச்சியாக இங்கே எழுதி வருபவர் ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன். சென்ற மாதம் ஸர் தாமஸ் மோர் என்பவரின் 'யுடோப்பியா'வை வெளியிட்டிருந்தோம். இது இரண்டாவது. ★

மிகக் கூர்மையான அறிவும் தீய ஒழுக்கமும் சேர்ந்து உறைந்த ஒரு மனிதனைச் சுட்டிக் காட்டு என்றால், நம் கண்முன் பேக்கனின் உருவந்தான் நடமாடும். அவருடைய அறிவு, பழுத்து ஞான மாய்க் கனியவில்லை; அது வானளாவி நின்றாலும் பிணத்தை நாடும் பருந்து போலக் கீழ்நோக்கித்தான் சென்றது. உயர்ந்த பதவியை அடைந்தால் என்ன?— இழிதொழிலையே பேக்கனின் மனம் நாடிற்று. லார்டு சான்ஸலராயிருக்கும்போது லஞ்சப் பேய்க்கு வசமானார். அவர் புரிந்த பெருங் குற்றத்துக்காக அவருக்கு 40,000 பவுன் அபராதம் விதித்தார்கள். அதை அரசன் மன்னித்தான். பிறகு, மானம் இழந்த பேக்கன் லண்டன் மாநகரை விட்டுத் தம் கிராமத்துக்குச் சென்றார். அந்தக் கிராமத்தில் அமைதி செறிந்த சூழ்நிலையில், இலக்கிய இன்பத்திலும் தத்துவ விசாரணையிலும் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியிலும் தம் வாழ்நாளைக் கழித்தார்.

வாழ்வின் நீர்க்குமிழி நிலையை உணர்ந்தார். இன்னல்களில்தானே ஞானம் உதயமாகும்? முதிர்ந்த வயதில் - 1622 - ஆம் வருஷத்தில் - புதிய அட்லாண்டிஸ் என்ற நூலை எழுதி, பேக்கன் வெளியிட்டார். மோரின் யுடோப்பியா, கிளரொளி இளமைக்கிடையே எழுந்தது. பேக்கனோ வாழ்க்கைக் கசப்பை முற்றப் பருகிய பிறகே, பௌதிக சாஸ்திரம் சித்திரிக்கும் பெருங் கனவைக் கண்டார். அந்தக் கனவில் மலர்ந்து விரிந்ததுதான் நாம் போற்றும் 'புதிய அட்லாண்டிஸ்.'

சிறந்த சரித்திராசிரியன், பழுத்த கட்டுரையாளன், கூர்மையான வழக்கறிஞன், அறிவு மிகுந்த தர்க்கநூல் புலவன், தத்துவ ஆராய்ச்சியாளன், பெருத்த பௌதிக பண்டிதன் இந்த அனைவரும் சேர்ந்து ஒரே உருவம் எடுப்பார்களானால், அந்தப் பேருருவந்தான் பேக்கன். பல துறைகளில் இவர் பெற்ற அநுபவம் இவருக்குத் துணை புரிய, அட்லாண்டிஸ் என்ற நூலைச் சமைத்தார். தென் அமெரிக்க நாட்டில் உள்ள பெரு என்ற நகரில் தொடங்கிய கற்பனை யாத்திரை ஒன்றைச் சித்திரிக்கிறது இந்த நூல்.

"நாங்கள் பெருவிலிருந்து சீனா, ஜப்பான் முதலிய நாடுகளை நோக்கிப் பிரயாணமானோம். எங்களிடத்தில் ஒரு வருஷத்துக்குத் தேவையான உணவு இருந்தது. ஐந்து மாத காலம் சரியான காற்று அடிக்கவே எங்கள் யாத்திரையும் இன்பமாய்த்தான் கழிந்து வந்தது.

ஆனால் புயல் காற்று மும்முரமாய் வீசத் தொடங்கவே திக்குத் திசை தெரியாமல் திகைத்துப் போனோம். கடைசியில் ஒரு தீவின் துறை முகத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். கப்பலை விட்டு நாங்கள் இறங்கப் பார்த்தோம். இறங்கக் கூடா தென்று அந்த நாட்டினர் கை ஜாடை காட்டிவிட்டார்கள். என்ன செய்வோம்? ஒன்றும் தோன்றாமல் செயலற்றிருந்தோம். இதற்கிடையே ஒரு படகு எங்களை நோக்கி வந்தது. அதில் எட்டுப் பேர் இருந்தார்கள். அவர்களில் ஒரு வன் தோல் சாசனம் ஒன்றை எங்களிடம் நீட்டினான். 'பதினாறு நாட்களுக்குள் இந்த இடத்தை விட்டு நீங்கள் போகவேண்டும். நாங்கள் அநுமதித்தால் மேலும் நீங்கள் தங்கலாம். உங்களுக்கு வேண்டிய வசதிகளைக் குறித்துக் கொடுங்கள். நோயாளிகள் இருந் தால் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து தரு வோம்'-இதெல்லாம் யூத, கிரேக்க, லத்தீன், ஸ்பெயின் முதலிய பல மொழிகளில் அந்தச் சாசனத் தில் எழுதியிருந்தது. 'எங்கள் நடுவே பல நோயாளிகள் இருக் கிறார்கள். எங்களை உங்கள் நாட் டுக்குள் விடாவிட்டால், அவர்கள் மடிந்து போய்விடுவார்கள்' என்று நாங்கள் சொன்னோம். எங்களுக் குத் தேவையான பொருள்களையும் குறித்துக் கொடுத்தோம். சாச னத்தை நீட்டிய அந்த ஆளுக்குப் பரிசளிக்க முயன்றோம். அவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

"மூன்று மணி நேரம் கழித்து மற்றொரு படகு வந்தது. அது எங்களுக்கு ஆறு கஜ தூரத்தி லேயே நின்றுகொண்டது. அதில் இருந்த சிலரில் ஒருவன், 'நீங்கள் கிறிஸ்துவர்களா?' என்று கேட் டான். 'ஆம்' என்றோம். 'அப்படி யானால் ஏசுநாதர்மீது ஆணை யிட்டுச் சொல்லுங்கள்: நீங்கள் கடற் கொள்ளைக்காரர்களா? நாற்பது நாட்களுக்குள்ளாக ரத்தஞ் சிந்தியதுண்டா? அப்படி ஒன்றும் செய்யாத நிலையில் எங்கள் நாட்டுக் குள் நுழையலாம்' என்றான். 'நாங்கள் குற்றமற்றவர்கள்' என்று ஆணையிட்டுச் சொன்னோம். இதைத் தன் புத்தகத்தில் அவன் குறித்துக் கொண்டான். மற்றொருவன் பின் வருமாறு சொன்னான்: 'எங்கள் தலைவர் உங்களுடைய கப்பலுக்குள் வராத காரணத்தை உணர்வீர்கள். உங்கள் கப்பலில் நோயாளிகள் இருப்பதாகக் குறித்திருக்கிறீர்க ளல்லவா? தொத்து நோய் இருக்கும் கப்பலுக்குள் நுழையக் கூடாதென்று எங்கள் சுகாதார அதிகாரி கட்டளையிட்டிருக்கிறார். அந்தக் கட்டளைப்படியே எங்கள் தலைவர் நடக்கிறார். தற்பெருமை யாலோ, கர்வத்தாலோ அல்ல; நோய்க்கு அஞ்சியே அவர் உங்களை அணுகாமல் தள்ளி நிற்கிறார்.' நாங்கள், 'எங்கள் நோய் தொத்து நோய் அல்ல' என்றோம். பிறகு அந்த அதிகாரி எங்கள் கப்பலுக்குள் வந்தார். நாரத்தை போன்ற ஒரு பழத்தைக் கையில் வைத்திருந்தார். அதை அடிக்கடி மோந்தார். அது தொத்து நோயைத் தடுக்கக் கூடிய பழமாயிருக்கலாம். மறுநாள் காலையில் வந்து தேசாந்தரிகளின் விடுதிக்கு (Strangers' House) எங்களை அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டு அவர் அகன்றார்.

"பொழுது விடிந்ததும் அந்த அதிகாரி மீண்டும் வந்தார். 'முத லில் சில பேர் என்னோடு வாருங் கள். பிறகு எல்லாரும் எங்கள்

தீவில் புகலாம்' என்ருர். 'நாங்கள் ஐம்பத்தொன்பது பேர். அதில் பதினேழு பேர் நோயாளிகள்' என்ரும். அழகான அறைகளுக்கு எங்களை அவர்கள் அழைத்துச் சென்ருர்கள். 'எங்களில் ஆறு பேர் உங்களைக் கவனிக்கச் சித்தமாயிருக்கிரும்' என்ருர்கள். எங்களுக்கு நல்ல உணவு கிடைத்தது. நோயாளிகளுக்கு ஆரஞ்சுப் பழங்கள் அளித்தார்கள். அவை வியாதிகளைக் கண்டிக்குமாம். மாத்திரைப் பெட்டிகளும் வந்து சேர்ந்தன.

"மூன்று நாட்கள் சென்றன. நோயாளிகளும் தங்கள் நோயிலிருந்து விடுபட்டார்கள். ஒரு பாதிரி வந்தார். எங்கள் உடல் நலத்தையும் அக உயிரையும் பாதுகாக்கத் தாம் கடமைப்பட்டிருப்பதாகச் சொன்னர்.

"பென்சலம் (Bensalem) என்ற தீவுக்கு வந்திருக்கிரும் என்று அப்போதுதான் நாங்கள் உணர்ந்தோம். பிறகு அந்தத் தீவில் அறிவுக் களஞ்சியமாய் நிற்கிற ஸாலமன் கழகத்தின் (Solomon's House) இயல்பு எங்களுக்குப் புலனயிற்று. இயற்கை அன்னையின் ரகசியங்களை அந்தக் கழகத்தவர் அறிய முயல்கிருர்கள். அறிவு விரியவேண்டுமென்ற கொள்கையை அந்த நாட்டினர் பின்பற்றுகிருர்கள். அதற்கேற்றபடி அங்கே அரசியல் அமைந்திருக்கக் கண்டோம்" என்கிருர் கதையைச் சொல்கிறவர்.

அந்த நாட்டில் அரசன் குடிகளின் நலத்தைக் கருதுகிருன். வெளியிலிருந்து சாமான்கள் வரவேண்டிய அவசியமில்லை. பிற நாட்டினரால் தங்களுக்குக் கெடுதி வராமல் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் தன்மை வாய்ந்தவர் அந்த நாட்டு மக்கள். அங்கே உள்ள அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறதில்லை என்று அடிக்கடி சொல்லுகிருர்கள். (பேக்கன் தமக்கு நேர்ந்த அவமானத்துக்கு வருந்துகிருர்போல் இருக்கிறது!) குடும்பப் பாதுகாப்புத்தான் அங்கே அரசியலின் முக்கிய அம்சமாயிருக்கிறது. குடும்பப் பாதுகாப்பு முறைகளை வளர்க்கத் தக்க திருவிழாக்களை மக்களும் சர்க்காரும் கொண்டாடுகிருர்கள். குடும்ப விருந்து ஒன்று நடந்தது. அதற்கு வேண்டிய செலவைச் சர்க்காரே ஏற்றுக்கொண்டார்கள். மூன்று வயதுக்கு மேற்பட்ட 30 குழந்தைகளைப் படைத்த குடும்பங்களை மிகவும் கௌரவிக்கிருர்கள். அப்படி மக்களைப் பெருக்கிய வீட்டுத் தலைவனுக்கு அரசன் பதக்கம் அளிக்கிருன். குடும்ப வழக்குகள் அந்தக் கொண்டாட்டத்தில் தீர்ந்து விடுகின்றன. தேசபக்தி, தெய்வ வழிபாடு, ஒழுக்கமுறைகள் இவற்றையெல்லாம் அப்போது கற்பிக்கிருர்கள். இவைகளைக் கற்பிக்கும்போது, தன் தகப்பனேடு கூடவே மகனும் இருப்பான். தகப்பன் இறந்தால் அவனுடைய பாரத்தை மகன் தானே தாங்கவேண்டும்? பொதுச் சாப்பாடு கொள்ளும் ஏற்பாடுகளில்லை. அந்த அந்தக் குடும்பங்கள் தனித்தனியேதான் உண்ணும்.

ஒருவன் பல பெண்களை அந்த நாட்டில் மணக்க முடியாது. விலைமகள் அங்கே இல்லை. கற்பு ஓங்கியிருந்தது. மணம் புரிவது வாழ்க்கையின் முக்கிய அம்சமாயிருந்தது. மணமகன், மணமகள் இருவருடைய குற்றங் குறைகளையும் அறிந்து கொள்ளுவதற்காக ஆதாம் குட்டை, ஏவாள் குட்டை என்ற இரண்டு குட்டைகளுண்டு. இந்தக் குட்டை

களில் உடையின்றி நீராடினால், ஆண் பெண்களின் உடல்குற்றங்கள் தெரிந்துபோய்விடும். மணமகனை ஆண்கள் கவனிப்பார்கள். மணமகளைப் பெண்கள் கவனிப்பார்கள். இந்தப் பரீட்சை நடந்த பிறகு, மணச்சடங்கு நடக்கும்.

சாலமன் கழகந்தான் இந்த நாட்டுக்கு ஞானதீபமாய்த் திகழ்கிறது. எதையும் அந்தக் கழகத்தினர் பரிசோதனை செய்து அறிவை வளர்க்கிறார்கள். மேலும் வெளிநாட்டுக்குச் சென்று அங்குள்ள கலைச் செல்வங்களையும் அவர்கள் தங்கள் தீவுக்குக் கொண்டு வந்து தங்கள் கலைகளைத் தழைக்கச் செய்கிறார்கள். இயற்கை அந்த அறிஞர்களுக்கு ஒரு கோயிலாகக் காட்சி அளிக்கவில்லை. அதை ஒரு பெருந் தொழிற்சாலையாகவே அவர்கள் மதிக்கிறார்கள்.

3,600 அடி (600 பாதம்) ஆழமுள்ள குகைகள் அந்தத் தீவில் இருக்கின்றன. பிணங்கள் அழுகாதபடி குளிரில் பாதுகாக்கப்படுகின்றன. சாலமன் கழகத்தினர் புதிய புதிய உலோகங்களைப் படைக்கிறார்கள். அரை மைல் உயரமுள்ளவான ஆராய்ச்சி நிலையம் ஒன்று அங்கே இருக்கிறது. நோய்களை அகற்றக்கூடிய நீர்நிலைகளும் காற்றோட்டக் கூடங்களும் அமைந்திருக்கின்றன. புதிய புதிய மலர்களும் பழங்களும் உற்பத்தியாகின்றன.

மனித உடம்பின் நிலையை அறியும்பொருட்டு, மிருகங்களை அரிந்து சோதிக்கக்கூடிய வசதிகளை அங்கே அமைத்திருக்கிறார்கள். சிறுநீரைப் பரீட்சிக்கும் முறையையும் கையாளுகிறார்கள். எதிலுமே மந்திரமுமில்லை, மாயமுமில்லை என்று காட்டத்தக்க கருவிகளை அமைத்திருப்பதால், போலி வைத்தியர்களுக்கும் மந்திரவாதிகளுக்கும் அந்த நாட்டில் இடமில்லாமல் போயிற்று. பிளேக், பூகம்பம், சீதோஷ்ண நிலை முதலியவைகளை முன்கூட்டியே அறிந்து மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்.

அறிவுச் செல்வர்கள் வாழ்கிற நாடு அது. ஜனங்களுக்கு நன்மை பயக்கத்தக்க ஆராய்ச்சிகளைப் பல துறையிலும் அங்குள்ள நிபுணர்கள் நடத்துகிறார்கள். பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை அறிவாளிகள் வெளிநாட்டுக்குச் செல்லுகிறார்கள். "பணம், தங்கம், வெள்ளி, பட்டு, வாசனைத்திரவியம் இவைகளில் எதற்காகவும் அல்ல; அறிவொளி பெறுவதற்காகவே அவனியை நாங்கள் சுற்றுகிறோம்" என்கிறார்கள்.

தண்ணீருக்கடியிலும் தடங்கலின்றிச் செல்லுகிறார்கள். ஆகாயத்தில் செல்லுகிறார்கள். கடல்மீது அவர்கள் ஆணை செலுத்துகிறார்கள். மண்ணையும் விண்ணையும் ஏவல் கொள்ளுகிறார்கள்.

"இவற்றையெல்லாம் கண்டு நாங்கள் வியந்தோம்" என்று அந்தத் தீவுக்குப் போனவர்கள் சொல்லுவதாக, பேக்கனின் நூல் முடிகிறது.

நூலின் குணங்குறைகளை இனி ஆராய்வோம். கால கர்ப்பத்தில் கிடந்தவற்றை முன்னதாகவே கண்டு சொல்வதற்கு எத்தனை பெரிய அறிவு வேண்டும், தீர்க்க தரிசனம் வேண்டும் பாருங்கள்! பேக்கன் கண்ட கனவெல்லாம் இன்று நம் கண்முன் உருவாகி வருவதை நாம் பார்க்கிறோம். பேக்கன் வகுத்த சமுதாயம் பொருளாதாரத்தின்மீது நிற்கவில்லை; அறிவென்ற அஸ்திவாரத்தின்மீதுதான் நிற்கிறது. பிளேட்டோவும் அறிவின் வலிமையைத்

தான் வற்புறுத்துகிறார். 'ஞானிகள் தான் உலகத்தை ஆளவேண்டும்; அவர்களின் அறிவொளிதான் மேலிருந்து கீழே யாவருக்கும் பாயவேண்டும்' என்ற கருத்தையே பேக்கனும் பின்பற்றுகிறார்.

அறிவுக்கு எல்லையில்லை. மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றியவராதலால், அந்தக் காலத்தின் லட்சியங்களுக்கு உருக்கொடுக்கிறார் பேக்கன். இப்படியே ஷேக்ஸ்பியரும் தம் 'ஹாம்லட்' என்ற நாடகத்தில், அறிவு வெள்ளத்தை மிகவும் கவின் பெறச் சித்திரித்திருக்கிறார்.

அரசியல், பொருளாதாரம் இந்தத் துறைகள் பற்றியமட்டும் பேக்கன் தம் காலவரம்பைத் தாண்டவில்லை. வெறும் அறிவு வளர்ச்சி மாத்திரம் உலகத்துக்கு இன்பம் அளிக்குமா? சமீபத்திலே இரண்டு உலக மகாயுத்தங்கள் தோன்றி மனிதனின் மிருகத் தன்மையை முரசடித்துவிட்டனவே! இன்று புறத்திலே ஓர் ஆடம்பரம் இருந்தாலும், அகத்திலே வறுமைதான் மண்டிக் கிடக்கிறது. அறிவு வளர்ந்ததேயொழிய உள்ளம் அதற்கேற்றபடி விரியவில்லை. வெறும் அறிவு நன்மை பயக்கத்தக்க எதையும் சாதித்து விடாது. குருட்டு அன்பினும் பயனில்லை. 'அன்பும் அறிவும் கைகோத்து இன்ப தாண்டவம் ஆடும்போதுதான், நாகரிகம் நிலைபெற்றிருக்க முடியும்' என்று ரஸ்ஸல் பலதரம் கூறக் கேட்டிருக்கிறோம். 'சும்மா இருக்கும் திறமரிது' என்று தாயுமானவர் மொழிந்திருக்கிறாரே அந்தத் தெய்வச்சொல்லில் எத்தனை பெரிய உண்மையிருக்கிறது என்பதை இப்போதுதான் நாம் உணருகிறோம். வெறும் அறிவையே தமக்குக் கண்களாகக் கொண்ட பேக்கன், தாயுமானவர் கண்ட பெருந்தத்துவத்தைக் கனவிலும் கண்டிருப்பாரா? இல்லை என்ற பதில்தான் அகமனத்திலிருந்து எழும்பி என் செவியில் ஒலிக்கிறது.

குறிப்பு: ஜிப்ரால்டர் ஜலசந்திக் கப்பால் மேற்கே அட்லாண்டிஸ் என்ற ஒரு தீவு இருந்ததாகக் கர்ணபரம்பரைச் செய்தி ஒன்று உண்டு. இயற்கை வனப்புத் தாண்டவமாடிய அந்தத் தீவு, செல்வர்கள் வாழ்ந்த நாடாம்; அவர்கள் மிகுந்த ஆற்றலுள்ளவர்களாம். ஒரு சமயம் ஐரோப்பாமீது படையெடுத்தார்கள். ஆனால் கிரேக்கர்கள் அவர்களைத் தோற்கடித்தார்கள். அந்த நாட்டு மக்களின் தீச் செயல்களால் ஒரு பூகம்பம் எழுந்து அந்தத் தீவை விழுங்கிவிட்டதாம். அட்லாண்டிக் மகா சமுத்திரம் அந்தத் தீவின் பெயராலேயே இப்போது விளங்குகிறது.

க்விஸ் விடை

(1) பேஸ் பால்; (2) 'கார்க்' என்ற நெட்டி; (3) உம்ரிகார், லேண்டு, ஐகின் மூன்று பேரும் இரண்டு இடங்களிலும், பிஷ்லாக் ஒரே இடத்திலும் ஸெஞ்சுரி எடுத்தார்கள்; (4) மன்காட் போலிங்கில் 17 விக்கட்டுகள்; வொர்ரெல் போலிங்கில் 13 விக்கட்டுகள். இவையே அதிகமானவை; (5) 3 டன்; (6) இதாலியில் உள்ள வெனிஸ் நகரம்; (7) (அ) பொய்; (ஆ) பொய்; (இ) உண்மை; (ஈ) பொய்; (உ) உண்மை; (8) நெல்லி வாங்கியது 74 ஷில்லிங்குக்கு 360 ஆரஞ்சுகள். ஒன்று மூன்று பென்ஸ் விகிதம் விற்றாள். மன்னர் கொடுத்தது 9 பென்ஸ்.

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

என் தம்பி பாலனை ராமு என்ற சிறுவன் ஒரு கேள்வி கேட்டான்.

"ஒரு மரத்தில் பத்துக் குருவிகள் இருந்தன. அவைகளைப் பார்த்து ஒரு வேடன் சுட்டான். ஒரு குருவி அடிபட்டுக் கீழே விழுந்



தது. அங்கே மீதி இருந்தது எத்தனை?"

இதை என் தம்பியிடம் நான் எத்தனையோ முறை கேட்டிருக்கிறேன். அதனால், "மீதி ஒன்றுமில்லை" என்று அவன் சரியாக விடை சொன்னான்.

ராமன், "அட முட்டாளே! மற்றக் குருவிகள் போனாலும், தரையில் விழுந்த குருவி அங்கே மிச்சமிருக்குமே?" என்று கேலி செய்தான்.

இந்த யுக்தியைக் கண்டு நான் வியந்துகொண்டிருக்கையில், "அது எப்படி அங்கே இருக்கும்? அதைத் தான் வேடன் எடுத்துக்கொண்டு போயிருப்பானே" என்று என் தம்பி சட்டென்று பதில் சொன்னான்.

—வி. எல். ஜயராமன்,
எழும்பூர், சென்னை.

எங்கள் பக்கத்து வீட்டில் கோபு என்ற ஒரு பையன் இருந்தான். ஒரு நாள் இரவு மழை பெய்தது.

கோபுவின் அப்பா அவன் அம்மாவிடம், "வீடு ஒழுகுகிறது. மூங்கிலையெல்லாம் கறையான் அரித்துவிட்டது. வீடே இடிந்து நம் தலையில் விழும்போல் இருக்கிறது" என்று கோபத்துடன் கத்தினாள்.

பக்கத்திலிருந்த கோபு, "ஏன் அம்மா, நாம்பதான் கொசுவலை கட்டிண்டு படுத்துண்டிருக்கமே. வீடு விழுந்தாலும், கொசுவலையின்

மேலேதானே விழும்; நம்ம தலை மேலே எப்படி விழும்?'' என்றான்.

—ஆர். ஜகந்நாதன், ஹோசூர்.

எங்கள் தோட்டத்தில் ஒரு பெரிய மண் குவியல் இருந்தது. அதை என்ன செய்வது என்று ஒரு நாள் யோசித்துக்கொண்டிருந்தேன்.

“இந்த மண் குவியலைத்தானே, அண்ணா? ஒரு குழி தோண்டறது; அதிலே இதைப் போட்டேடறது'' என்று என் தம்பி சொன்னான்.

நான் சிரித்துக்கொண்டே, “அது சரிதான்; ஆனால், அந்தக் குழி தோண்டிய மண்ணை என்ன செய்வது?'' என்று கேட்டேன்.

“மறுபடி ஒரு குழி தோண்டி அதிலே போட்டேடறது'' என்றான் சிறுவன்.

“இப்படி எத்தனை தடவை செய்தாலும் கடைசியில் ஒரு குழி மண் மிஞ்சுமேடா'' என்றேன் நான்.

“ஏன் மிஞ்சறது? அதையும் ஒரு குழி தோண்டி அதிலே போட்டேடறது'' என்று அழுத்தமாக அவன் சொன்னான்!

—எஸ். சம்பத்குமார், மயிலாப்பூர்.

என் தங்கை யமுனா, “எப்படி அண்ணா, பூமி தனக்குத்தானே சுற்றும்? அப்படிச் சுற்றும் போது நமக்கு ஏன் தெரியவில்லை?'' என்று கேட்டாள்.

என்ன என்னவோ பதில் சொன்னேன். அவளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவளுடைய தொண தொணப்புக் கேள்விகளுக்குத் தப்பித்துக்கொண்டால் போதும் என்று எண்ணி, “நாளைக்கு விவரமாய்ச் சொல்லுகிறேன்'' என்றேன். “சரி'' என்று அவளும் நகர்ந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும், குடு குடு என்று என்னிடம் ஓடி வந்து, “பூமி சுற்றுவதை நான் கண்டுபிடித்து விட்டேன், அண்ணா. ராத்திரி படுக்கும் போது மேற்குப் பக்கம் தலை வைத்துப் படுத்தேன். காலையிலே பார்த்தால், கிழக்குப் பக்கம் இருக்கிறது என் தலை'' என்றாள் சிறுமி.

எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, “தெரிந்துகொண்டாயோ, இல்லையோ; ரொம்பச் சந்தோஷம்'' என்று சொல்லி, என் பாடத்தைப் படிக்கத் தொடங்கினேன்.

“ஆனால், ஒரு சந்தேகம், அண்ணா: என் தலையணை மாத்திரம் மேற்குப் பக்கமே இருக்கே. அது எப்படி?'' என்று யமுனா கேட்டாள்.

—கே. பாலசந்திரன், தியாகராயநகர்.

உணவிலே சிறந்தது; குணத்தில் உயர்ந்தது; மலிவாய்க் கிடைப்பது.

சீமைத் தக்காளி

★

பழ உணவு சாப்பிடவேண்டுமென்றால் விலை அதிகமாக இருக்கிறதே என்று தயங்கலாம். ஆனால் சீமைத் தக்காளிப்பழம் (டொமாடோ) இருக்கும்போது அந்தமாதிரி கவலையே வேண்டாம். அது பழ உணவு வகையில் ஆரஞ்சு, ஆப்பிளைப்போல் சிறந்தது. விலையும் வெகு சரசம். சுவையாகவும் இருக்கும். கறி, கூட்டுச் செய்யலாம்; மற்றக் காய்கறிகளோடு சேர்த்துச் சமைத்தால் அவை பின்னும் ருசியாகவும் மணமாகவும் இருக்கும்.

“சாப்பிடும்போது பச்சைக் கறிகாய்க் கோசும்பரி செய்து சேர்த்துக் கொள்வது அவசியம்” என்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். அதெப்படிப் பச்சையாகச் செய்ய முடியும் என்று முதலில் தோன்றலாம். அந்தக் கவலையே வேண்டாம். சீமைத் தக்காளிப்பழம் இருந்தால் போதும்; ஜோரான கோசும்பரி தயார் செய்துவிடலாம். அதைப் பார்த்தாலே வாயில் ஜலம் ஊறும்.

சீமைத் தக்காளியில் எல்லா விடமின்களும் இருக்கின்றன. ஏ, பி, ஸி, ஜி இந்த விடமின்கள் பின்னும் அதிகம். ஆரஞ்சு, எலுமிச்சை இந்தப் பழங்களிலுள்ள ஸி விடமின் இதில் ஏராளமாக இருக்கிறது. காய்ச்சினால் இந்த விடமின் கெட்டுவிடும். அதனால்தான் பச்சையாகவே இதை உபயோகிக்க வேண்டும். செடியோடு பழுத்த சீமைத் தக்காளி என்றால் இன்னும் விசேஷம். சீமைத் தக்காளியில் உப்பு, இரும்பு, கால்ஷியம், பாஸ்பரஸ், பொடாஷியம் முதலிய சத்துக்கள் ஏராளம். இதன் விதைகள் சிவப்பாக இருக்கும். இந்த விதைகளில்தான் மேலே சொன்ன உப்புச் சத்துக்கள் இருக்கின்றன. வெறும் சாற்றில் அப்படி விசேஷமாக ஒன்றுமில்லை. எதற்கும் முழுப் பழத்தையும் அப்படியே உபயோகிப்பதுதான் நல்லது. சாறு மட்டுமே வேண்டும் என்றால் நன்றாகப் பிழிய வேண்டும். அப்போதுதான் விதையிலுள்ள சிவப்புச் சத்து அதில் கலந்து சாறும் சிவப்பாக இருக்கும். இதிலுள்ள கால்ஷியம் சத்தின் விசேஷம் என்னவென்றால், மற்ற உணவுகளில் இருக்கும் அதே மாதிரி சத்துப்பொருளைக் கிரகிக்க இது மிகவும் பயன்படுகிறது.

பெருங்குடலில் ஒரு வித உயிரணுக்கள் இருக்கின்றன. ஜீர்ண சக்தி ஏற்படவும் கழிவுப்பொருள்களை நீக்கவும் அவை உதவுகின்றன. சீமைத் தக்காளியில் இந்தமாதிரி உயிரணுக்கள் இருப்பதால் அதை உபயோகித்து, குடல் சம்பந்தமான கோளாறு நேராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

மூலம்: தி லைப் நேச்சுரல் (ஆங்கிலம்: ஜனவரி ’51), புதுக்கோட்டை.

பொதுவாக எல்லா வகைப் பழங்களும் கறிகாய்களுமே மலச் சிக்கலைப் போக்க உதவும். சீமைத் தக்காளிக்கும் இந்தக் குணம் உண்டு. மற்றப் பழங்களில் ஸெல்லுலோஸ் என்னும் பொருள் அடங்கியிருப்பதே இதற்குக் காரணம். இந்த ஸெல்லுலோஸுக்குக் குடலில் இருக்கும் கழிவுப்பொருளை அழுத்தி வெளியே கொண்டுவரும் சக்தி உண்டு. இதே குணமுள்ள வேறு பொருள்களும் சீமைத் தக்காளி போன்ற பழங்களில் இருக்கின்றன. தக்காளிச் சாற்றில் ஸெல்லுலோஸ் இராவிட்டாலும் மலச்சிக்கல் நீங்குவதற்குக் காரணம் இதுதான். பச்சையாக உபயோகித்தால்தான் இந்தக் குணம் மிகுதியாக இருக்கும். சமைத்தால் இவ்வளவு குணம் இராது. அதற்கு மாருக மலச்சிக்கலேகூட ஏற்பட்டுவிடலாம்.

சீமைத் தக்காளி உணவாகவும் அதே சமயம் மருந்தாகவும் பயன்படுகிறது. உடல்நிலை சீர்குலைந்திருந்தால் அதைச் சரிப்படுத்தி ஆரோக்கியம் தருகிறது. ஆரஞ்சு, எலுமிச்சை இவைகளில் இருப்பது போலவே இதிலும் எளிதில் உடலுக்குப் பிராணவாயுவை ஊட்டும் ஒரு வகையான திரவம் இருக்கிறது. இது ரத்தத்துக்கு விறுவிறுப்பூட்டி அதைச் சுத்தப்படுத்துகிறது. சத்துக் குறைவினுல் வற்றிய உடலுக்கு உறுதி தருகிறது. இரும்புச் சத்து இருப்பதால் சோகையைப் போக்கப் பெரிதும் உதவுகிறது. பல், எயிறு இவைகளைப் பலப்படுத்துகிறது. எயிற்றில் ரத்தம் கசிந்தால் விடியற்காலை எழுந்ததும் வெறும் வயிற்றில் கொஞ்சம் தக்காளிப்பழம் சாப்பிடுவது நல்லது.

சில ரசங்களை உடலில் சுரக்கும்படி தூண்டுவதால், இது அஜீர்ணத்துக்குக் கைகண்ட மருந்து. மூத்திரம் போன்ற கழிவுப் பொருள்கள் உடலில் சேருவதால் கீல்வாயு ஏற்படுகிறது. தக்காளிக்கு இந்தப் பொருள்களை வெளியேற்றும் சக்தி உண்டு. ஆகவே, கீல்வாயுவுக்கும் இது சிறந்த மருந்துதான்.

நீரிழிவுக்காரர்கள் பொதுவாகப் பழங்களில் சர்க்கரை இருப்பதால் அவைகளைச் சாப்பிட அஞ்சுவார்கள். தக்காளிக்குத் தோஷமில்லை. உணவில் பழம் சேர்த்துக்கொள்ளாததால் அவர்களுக்கு ஏற்படும் கோளாறுகள், தக்காளி சாப்பிட்டால் நீங்கிவிடும்.

ஜுரத்தின்போது பட்டினி போடுவது சகஜம். ஆனல் இந்த மாதிரி சந்தர்ப்பங்களிலும் வெயிலில் நன்ருகப் பழுத்த தக்காளியின் ரசத்தை நீரில் கலந்து குடித்தால் உடம்புக்கு நல்லது.

பருவம் அறிந்து தக்காளியைச் சாப்பிட வேண்டும். டப்பிகளில் அடைத்துப் பத்திரப்படுத்திவரும் தக்காளியைச் சாப்பிடுவதைவிடச் சும்மா இருப்பதேமேல். உள்ளூரில் கிடைத்தால் வாங்கிச் சாப்பிடலாம். அப்படிப் பருவம் சரியாக இராமல் நல்லதாகக் கிடைக்காவிட்டால் வேறு ஏதாவது பச்சைக் காய்கறியோ, பழமோ இருக்கவே இருக்கிறது. அதை வாங்கிச் சாப்பிடலாம்.

தக்காளி 4 பங்கு; காரட், பீட் கிழங்குகள், வெள்ளரிக்காய் 2 பங்கு; காபேஜ், லெட்டூஸ், புளிச்சைக் கீரை இவை ஒரு பங்கு இவைகளைச் சேர்த்துக் கோசுப்பரி செய்தால் வெகு ருசியாக இருக்கும். முதலில் இவைகளை நறுக்கிக்கொள்ள வேண்டும். தக்காளியைமட்டும் ஜாக்கிரதையாகச் சீவவேண்டும். அதை இடது கையில் இலேசாக வைத்துக்

கொண்டு துருப்பிடிக்காத கூர்மை யான கத்தியால் வெட்ட வேண்டும். பிறகு கொஞ்சம் எலுமிச்சம் பழச் சாறு பிழிந்து இரண்டு கொத்த மல்லி இலையைப் போடுங்கள்; மண மாக இருக்கும். இன்னும் ருசியாக இருக்க, இரண்டு உப்புக்கல் சேர்க்க லாம். சாதம் சாப்பிடுவதற்கு முன் இந்தக் கோசும்பரியைக் கொஞ்சம் எடுத்துச் சாப்பிடுவது நல்லது. நன்ருக மலசுத்தியாகும். மந்தமான ஈரலாக இருந்தால்கூடச் சுறுசுறுப்பு ஏற்பட்டு வேலை செய்யும். நல்ல ஜீர்ணசக்தி ஏற்படும்.

இப்படித் தக்காளி பலவகையில் உடலுக்கு ஆரோக்கியமும் உள்ளத் துக்கு இன்பமும் தருகிறது. அதனால் இனிமேல் நிறையத் தக்காளி பயிரிடுங்கள்; நிறைய நிறைய அதைச் சாப்பிடுங்கள்.

ஒன்றுக்குப் பல நூறு

ஐக்கிய அமெரிக்காவில் பென்வில்வானியா மாகாணத் தைச் சேர்ந்த பிட்ஸ்பர்க் நகரத்தில் போன நூற்றாண்டில் கர்னல் ஆண்டர்ஸன் என்ற ராணுவக்காரர் ஒருவர் இருந்தார். அங்கே சில ஏழைக் குழந்தைகள் படிக்கப் புத்தகமின்றித் தவிப்பதைக் கண்டார். கர்னல் பெரும் பணக்காரர் அல்ல. அந்தக் குழந்தைகளுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுக்க அவரால் முடியவில்லை. என்ருலும், பல புத்தகங்கள் அவருடைய சொந்த உபயோகத்துக்கு இருந்தன. அந்தக் குழந்தைகள் எப்போது வேண்டுமானலும் தம் புத்தகங்களை இரவல் வாங்கிக் கொள்ளலாம் என்று அவர்களிடம் சொன்னர்.

புதிதாய்க் குடியேறிய ஆண்டி என்ற ஒரு சிறுவன் வாரம் 4 டாலர் சம்பளத்துக்கு டெலிகிராப் குமாஸ்தாவாக வேலை பார்த்துக்கொண்டிருந்தான். கர்னல் சொன்னதைக் கேட்டு அவன் மகிழ்ச்சியடைந்தான். வாரத்துக்கு வாரம் ஒரு புத்தகம் இரவல் வாங்கிச் சென்ருன். இரவு சாப்பாடு முடிந்ததும் தாயும் மகனுமாக அதை ஒருவருக்கொருவர் உரக்கப் படிப்பார்கள்.

கர்னல் செய்த இந்த நன்றியை அந்தச் சிறுவன் ஒரு நாளும் மறக்கவில்லை. இந்தப் புத்தகங்களால் அறிவு வளரப் பெற்ற அவன் பின்னல் பெருஞ் செல்வனுனன். அவனுடைய பரோபகாரத்தால்தான் அமெரிக்காவெங்கும் இன்று நூற்றுக் கணக்கான இலவச லைப்ரரிகள் ஏற்பட்டிருக்கின்றன.

அந்தச் சிறுவன் யார் என்று நினைக்கிறீர்கள்? ஆண்ட்ரூ கார்னீஜி என்ற குபேரர்தான்; வேறு யாரும் அல்ல.

—ரூத் வெல்டி, 'கைடு போஸ்ட்ஸ் மகஸீன்.'

திருவிழாவில்

கலில் கிப்ரான்

ஒரு தடவை திருவிழாவுக்குப் பட்டிக்காட்டுப் பெண் ஒருத்தி வந்திருந்தாள். வெகு அழகி! அவளுடைய முகத்தைத் தாமரையும் ரோஜாவும் எனலாம். அவளுடைய கூந்தலுக்கு ஈடு அந்தியழகுதான். வைகறையின் இளநகை அவள் இதழ்களில் விளையாடியது. அந்த அழகியைக் கண்டதும் இளைஞர்களின் கூட்டமொன்று அவளைச் சூழ்ந்து கொண்டது. 'இவளோடு பழகும் வாய்ப்பு நமக்குக் கிடைக்குமா?' என்று ஒவ்வொருவனும் நினைத்தான். 'நாட்டியமாட வருவாயா?'' என்று ஒருவன் அவளை ஆவலோடு கேட்டான். 'எங்களோடு வன போஜனத்துக்கு நீ கட்டாயம் வரத்தான் வேண்டும்' என்று மற்றொருவன் வற்புறுத்தி அழைத்தான். அவளுடைய இதழமுதைப் பருக எல்லாருக்கும் ஆசை. நாலு பேர் கூடும் திருவிழாத்தானே அது!

ஆனால் அந்த இளம் பெண்ணுக்கு இதையெல்லாம் கேட்டு மிகுந்த சினம் பொங்கியது. உதடு துடித்தது. 'இந்த இளைஞர்களுக்கு இவ்வளவு துணிச்சலா?' என்று எண்ணி, அவர்கள்மீது அவள் வசைமொழிகளைத் தொடுத்தாள்; இரண்டு பேரின் கன்னத்தைச் சிவக்கவும் வைத்தாள். சாயந்தரம் வீடு திரும்பியதும், 'சே! அவர்களை நினைத்தாலே வெறுப்பாக இருக்கிறது! எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றே சாவான்களுக்குத் தெரியவில்லை. சுத்தக் காட்டு மிராண்டிகள்! இவர்களிடம் எவ்வளவுதான் பொறுத்துக்கொள்வது?' என்று முணுமுணுத்தாள்.

ஒரு வருஷம் கடந்தது. இப்போது அந்த யுவதிக்குத் திருவிழாவைப்பற்றியும் அங்கே கூடும் இளைஞர்களைப்பற்றியுமே சிந்தனை. அந்த ஆண்டு அவள் மறுபடியும் திருவிழாவுக்கு வந்தாள். முகத்தில் முன் போலவே தாமரையும் ரோஜாவும் மலர்ந்திருந்தன. அந்தியொளி அவள் கூந்தலில் மிளிர்ந்தது. வைகறை முறுவல் அவள் இதழ்களில் நடமாடியது.

ஆனால் இந்தத் தடவை இளைஞர்கள் அவளைக் கண்டதுமே தூர விலகினார்கள். காலையிலிருந்து மாலைவரைக்கும் எவனும் அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவள் தன்னந்தனியே இருந்தாள்.

பொழுது சாய்ந்ததும், ஊருக்குப் போகும் ஒற்றையடிப் பாதையில் அவள் மெதுவாகச் சோர்வுடன் நடந்தாள். மனத்துக்குள் குமுறிக்கொண்டே, 'சே! அவர்களை நினைத்தாலே வெறுப்பாக இருக்கிறது! எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றே சாவான்களுக்குத் தெரியவில்லை. சுத்தக் காட்டுமிராண்டிகள்! இவர்களிடம் எவ்வளவுதான் பொறுத்துக்கொள்வது?' என்று அவள் முணுமுணுத்தாள்.

சினிமா தங்கச் சுரங்கமா?

எஸ். எஸ். வாஸன்

மகா அதிருஷ்டசாலி, தொழில் நிபுணர் என்றெல்லாம் கீர்த்திபெற்றவர் ஆசிரியர். தலை சிறந்த வாரப் பத்திரிகை ஒன்றைத் தமிழிலே வெளியிடுபவர். இந்தியாவிலேயே மிக அதிகமாய் ஓடிய சில சினிமாப் படங்களைத் தயாரித்த பட முதலாளி. தம் சொந்தப்படம் ஒன்றின் புள்ளிவிவரங்களைக் கொண்டே, படத்தொழிலின் லாப நஷ்டங்களை இங்கே விளக்குகிறார்.

சினிமா பிடிக்கும் தொழிலில் மிக ஏராளமான லாபம் கிடைக்கிறது என்று யாராவது எழுதினால், அதைப் பார்த்து எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. படத்தொழிலைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களே பெரும்பாலும் இப்படி எழுதுகிறார்கள். அவர்கள் எழுதுவதும் சரிதான். தியேட்டர்களில் டிக்கட் வாங்க 'க்யூ' வரிசையில் நெருக்கிக்கொண்டு ஜனங்கள் நிற்பதை அவர்கள் பார்க்கவில்லையா? 'டிக்கட்'டுகள் 'பிளாக்மார்க்கட்'டில் விற்பதைத்தான் அவர்கள் கேட்டதில்லையா? இதையெல்லாம் நோக்கும்போது அவர்களுக்கு அப்படித் தோன்றுகிறது. ஆனால், படத்தொழிலின் ஒரே ஓர் அம்சம் இது. மற்றோர் அம்சத்தை இங்கே விளக்குவதுதான் என் நோக்கம்.

வெற்றிகரமாக ஒரு படம் எடுத்து லாபம் அடைய ஒருவர் விரும்புவதாக வைத்துக்கொள்வோம். 'பிரமாதமான சரித்திரப் படமோ, ஆடம்பரமான ஆடையணிகளால் ஜொலிக்கும் படமோ எடுக்காமல், சாதாரணமான ஒரு படம் எடுத்தால் போதும்; ஆனால், அது வீணாகாமல் ஜனங்கள் விரும்பிப் பார்க்கக்கூடியதாயிருக்க வேண்டும்' என்று அவர் எண்ணுவதாகவும் வைத்துக்கொள்வோம். கதை, ஸினாரியோ, ஷூட்டிங், ஸ்டூடியோ வாடகை, நடிகர் சம்பளம் முதலிய எல்லாம் சேர்ந்து அந்தப் படத்தை எடுக்கும் செலவு, குறைந்தது 5 லட்ச ரூபாய் ஆகும். படத்தை விநியோகிப்பவர்கள், அதைத் திரையிடும் தியேட்டர்க்காரர்கள் - பத்திரிகைக்காரர்கள் கூடத்தான் - இப்படித் தொழிலில் உள்ள பலருக்கும் பொது ஜனங்களுக்கும் அதைப்பற்றி முன்னதாகவே பலத்த விளம்பரம் செய்தாக வேண்டும். அதற்கு மற்றொரு லட்சம் வேண்டும்.

அடுத்தபடியாக, படத்தைப் பற்பல இடங்களில் திரையிடப்போதிய பிரதிகளைத் தயாரிப்பதற்குப் பணம் வேண்டும். பிரதியொன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் அப்படி 50 பிரதிகள் எடுக்க ஒன்றேகால் லட்ச ரூபாய் ஆகும்.

இதுவரை $7\frac{1}{4}$ லட்ச ரூபாய்ச் செலவுக்கு 'பட்ஜட்' போட்டு விட்

காப்பிரைட்: ஆன்லுக்கர்ஸ் மன்த்லி ரெவ்யூ அவ் இண்டஸ்ட்ரி
(ஆங்கிலம்: டிசம்பர் '50), பம்பாய்.

டோம். இந்தப் பணத்தைக் கடும் வட்டிக்கு எங்கேயாவது பெற்றாக வேண்டும். எத்தனை காலத்துக்கு என்ன வட்டி வீதத்தில் இதைக் கடன் வாங்குவது என்ற கேள்வி இப்போது எழுகிறது.

அநேகம் படங்களின் விஷயத்தில் படத்தைப் பிடிக்க இரண்டு வருஷமும் விற்க மூன்று வருஷமும் ஆகின்றன; ஆகமொத்தம் ஐந்து வருஷ காலத்துக்குக் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. ஆனால், நம் படமுதலாளி ஒரே வருஷத்தில் படத்தைப் பிடித்து இரண்டே வருஷத்தில் விற்றுவிடுவதாக வைத்துக்கொள்வோம். இவர் மூன்று வருஷ காலத்தில் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடலாம்.

வட்டி வீதத்தை இனிப் பார்க்கலாம். 1950-ஆம் ஞு ஆகஸ்டு மீ 3-ஆம் உ 'ஹிந்து' பத்திரிகை எழுதியுள்ள ஒரு தலையங்கம் சொல்வது இது:

> "நிலைத்துப் போன ஒரு பட முதலாளி நூற்றுக்கு 10 முதல் 25 ரூபாய் வரை வட்டி வீதத்துக்குக் கடன் வாங்கக் கூடும். பெயர் பிரபலமில்லாத ஒருவருக்கு அவசரமாய்ப் பணம் வேண்டியிருந்தால், நூற்றுக்கு 60 ரூபாய் வரை வட்டி கொடுக்கும்படி அவரைக் கேட்கிறார்கள்!"

என்றாலும், முழுப் பணத்தையும் ஒரே மொத்தமாய்க் கடன் வாங்க வேண்டியதில்லை. அதனால், மூன்று வருஷ காலத்துக்குச் சராசரி நூற்றுக்கு 6 ரூபாய் வட்டி வீதத்தில் நம் முதலாளிக்குக் கடன் கிடைப்பதாக வைத்துக்கொள்ளலாம். இதன்படி 1,30,500 ரூபாய் வட்டி செலுத்த வேண்டும். இப்படியாகப் படத்தில் போடும் மொத்த மூலதனம் 8,55,500 ரூபாய்.

லாப நஷ்டத்துக்குப் பெரிதும் துணிந்து இறங்குகிற இந்தத் தொழிலில், நம் முதலாளி எவ்வளவு லாபத்தை எதிர்பார்க்கலாம்? பிலிம் விசாரணைக் கமிட்டியின் முன் வந்த சாட்சியங்களின்படி, நூற்றுக்கு முப்பது முதல் நாற்பது படங்கள் வரை, எதிர்பாராத இடைஞ்சல்கள் ஏற்பட்டு, பூர்த்தியாகாமலே அரை குறையாய் நின்றுவிட்டன என்று தெரிகிறது. ஒரு படம் பூர்த்தியானாலும், அதைச் சர்க்கார் அங்கீகரிக்காமல் தள்ளிவிடக்கூடும். தியேட்டர்க்காரர்கள் குறிப்பிட்ட கட்டணங்களுக்கே படத்தைக் காட்ட வேண்டும் என்று சர்க்கார் கட்டாயம் செய்ய முடியும். உயர்ந்த ரக விமர்சகர்கள் ஒரு படத்தைப் பாராட்டிவிட்டாலுங்கூட, அதனால் டிக்கட் வசூல் அபாரமாய்ப் போய்விடாது. படம் பார்க்கும் பல லட்சக்கணக்கான ஜனங்களின் அங்கீகாரத்தை அது பெற்றாக வேண்டும். இதனால்தான், பூர்த்தியான அநேகம் படங்கள் வெளிவராமல் பூட்டிய பெட்டிக்குள்ளே முடங்கி விடுகின்றன. குப்பை கூளமாகக்கூட அவைகளை விற்க முடியாது. அவைகளை வைத்துக்கொண்டு, தீ இன்ஷியூரன்ஸ் கட்டணமோ, பாங்கியில் இரும்புப் பெட்டிக்குள் பத்திரமாய் வைத்திருப்பதற்கான வாடகையோதான் தண்டத்துக்குச் செலுத்த வேண்டும். 'ஹிந்து' தலையங்கத்திலிருந்தே மற்றொரு மேற்கோள் தருகிறேன்:

> "சினிமா பிடிப்பதற்குப் பணம் சேகரிப்பதில் விசேஷ சிரமம் இருக்கிறது. சினிமா பிடிக்கும் தொழில் பெரிய

சூதாட்டம்போன்றது. சோப்பு அல்லது துணி தயாரிப்பது போன்றதல்ல சினிமா பிடிப்பது. படங்கள் இன்ன மாதிரி இருந்தால் போதும் என்று ஒரே விதமான லட்சணங்கள் வகுத்து வைக்க முடியாது. ஒவ்வொரு புதிய படத்தைத் தயாரிக்கும்போதும், அதை ஜனங்கள் அங்கீகரிப்பார்களா அல்லது நிராகரிப்பார்களா என்பதை ஊகிக்கத்தான் முடியும். ஸ்டுடியோக்கள் வைத்திருக்கும் பெரிய பிலிம் கம்பெனிகளுக்குச் சில படங்களில் பிரமாத லாபம் வந்து விடும்; மற்றப் படங்களில் ஏற்படும் நஷ்டத்தை இந்த லாபத்தைக் கொண்டு அவைகள் ஈடு செய்து கொள்ளலாம். ஸ்டுடியோ இல்லாத சாதாரணப் பட முதலாளிகளின் நிலைமையோ இப்படி இல்லை.''

ஆகவே, 8½ லட்சம் ரூபாய் கடன் வாங்கிய பணத்தை இந்தப் பிரம்மாண்டமான சூதாட்டத்தில் போடும் ஒருவர், குறைந்த பட்சம் நூற்றுக்கு 50 ரூபாய் வீதம் லாபத்தை எதிர்பார்க்கவேண்டும். இப்போது புள்ளி போட்டுப் பார்ப்போம்:

1. படம் தயாரிக்கும் செலவு	ரூ. 5,00,000
2. விளம்பரம் முதலியவை	ரூ. 1,00,000
3. 50 பிரதிகள் எடுக்கும் செலவு	ரூ. 1,25,000
4. வட்டி	ரூ. 1,30,500
ஆக	ரூ. 8,55,500
5. எதிர்பார்க்கும் லாபம்	ரூ. 4,27,750
6. அந்த லாபத்தைப் பெறுவதற்குச்செலுத்த வேண்டிய வருமானவரி	ரூ. 2,92,671
7. சம்பாதிக்க வேண்டிய மொத்தப் பணம்	ரூ. 15,75,921

இப்படியாக, ஒருவர் 5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு படம் எடுக்க விரும்பினால், அந்தப் படத்தைக் கொண்டு 15 லட்சம் ரூபாய்க்கு மேல் அவர் சம்பாதித்தாக வேண்டும்.

இனிமேல் வருமானத்தைப் பார்ப்போம். தியேட்டர்களில் வசூலாகும் அத்தனை ரூபாயும், படம் பிடித்த முதலாளிக்கு அப்படியே வந்து சேர்ந்து விடுவதில்லை. இடை நடுவிலே பல வெட்டுப்பட்டு, குற்றுயிரும் குலையுயிருமாய்த்தான் அவரிடம் அது வந்து சேர்கிறது. இந்த விநோதம் எப்படி நடக்கிறது என்பதை, என் படம் ஒன்றின் வருமானப் புள்ளி விவரங்களைக் கொண்டு விரிவாய் இங்கே விளக்கிக் காட்டுகிறேன்.

அந்தப் படம் முற்றும் வெற்றிகரமானது. அதற்குப் பல பாராட்டுக் கடிதங்கள் வந்தன; பத்திரிகைகளும் அதைப் புகழ்ந்தன. டிக்கட் பணமும் நன்றாய்த்தான் வசூலாயிற்று. சகல ஊர்களிலும் மிக நல்ல தியேட்டர்களிலேயே அதைத் திரையிட்டார்கள். முதல் தடவை ஓடியதில்மட்டும் அதற்குக் கிடைத்த பண வசூல் விவரத்தைக் கீழே காணலாம்:

ஊர்	ஓடிய நாள்	விற்ற டிக்கட்டுகள்	வசூலான பணம்
ஏ	130	2,19,685	ரூ. 1,07,142
பி	84	93,372	ரூ. 54,064

வி	42	57,770	ரூ.	24,212
டி	22	23,276	,,	5,742
இ	15	10,864	,,	5,215
எப்	11	11,435	,,	2,345
ஜி	8	7,195	,,	1,377
எச்	16	16,606	,,	2,860
ஐ	29	33,287	,,	6,701
மொத்தம்		4,73,489	,,	2,09,658

இதை மறுபடியும் பின் வருகிற படி கணக்கிடவேண்டும் :

1. கேட் வசூல்	ரூ. 2,09,658
2. தமாஷா வரி செலுத்தியது	ரூ. 40,652
3. தியேட்டர்க்காரர் எடுத்துக் கொண்ட பங்கு	ரூ. 80,938
4. 2,3 மொத்தம்	ரூ. 1,21,590
5. படம் பிடித்த முதலாளிக்கும் பட விநியோகம் செய்கிறவருக்கும் மிஞ்சுகிற தொகை	ரூ. 88,068
6. படவிநியோகம் செய்பவர் 5- இல் எடுத்துக் கொள்ளும் பங்கு	ரூ. 13,210
7. 5- இல் கழிக்க வேண்டிய விளம்பரச்செலவும் நிர்வாகச் செலவும்	ரூ. 4,403
8. 6,7 இரண்டின் மொத்தம்	ரூ. 17,613
9. படம் பிடித்த முதலாளிக்கு வந்து சேர்கிற நிகரத் தொகை	ரூ. 70,455

ஆகவே இந்தப் படம் சம்பந்தப்பட்ட மட்டில் படமுதலாளிக்கு, கேட் வசூலில் மூன்றில் ஒரு பங்கு தொகை கிடைக்கிறது. சராசரியாக ஒரு படத்தில் இந்த விகிதப்படி பணம் கிடைக்கும் என்று வைத்துக் கொண்டால், மேலே நாம் குறிப்பிட்டபடி செலவான 15,75,921 ரூபாய்க்கு ஈடுகட்ட 47 லட்சம் ரூபாய் கேட் வசூல் ஆகவேண்டும்.

மீண்டும் சுருங்கச் சொல்லுகிறேன்: படம் (என்னுடைய இந்தப் படத்தைப்போல) வெற்றிகரமாயிருக்கவேண்டும்; அதன் மேல் தியேட்டர்க்காரர்களிடம் கடுமையாய்ப் பேரம் செய்யப் படமுதலாளியால் முடிய வேணடும்; சர்க்கார் படங்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாய வாடகைத் தொகையைக் கணக்கிடாமல் தள்ளி விட வேண்டும்; படவிநியோகம் செய்பவருக்கு நூற்றுக்கு 15 விகிதத்துக்குமேல், பங்கு கொடுக்காதிருக்க வேண்டும்—அப்போது, 5 லட்சம் ரூபாயில் 'நெகடிவ்' எடுக்கக்கூடிய ஒரு படத்தினுல் 47 லட்சம் ரூபாய் வசூலாகக்கூடிய டிக்கட்டுகள் விற்பனை ஆக வேண்டும். அதாவது 4,73,489÷2,09,658×47 லட்சம் பேர், அதாவது ஒரு கோடியே ஆறு லட்சம் பேர் அந்தப் படத்தைப் பார்த்தாகவேண்டும்!

சந்தேகத்துக்கு இடமில்லை

அநீதா: அருணு, நான் உன்னை மணக்க மாட்டேன் என்ருல், நீ என்ன செய்வாய்? தற்கொலை செய்துகொண்டு விடுவாயோ?

அருணன்: ஆமாம்; அதுதான் என் வழக்கம்.

—'இல்லஸ்டிரேடட் வீக்லி அவ் இந்தியா'



வேதாந்த புத்தகங்களை யெல்லாம் கிழித்தெறிந்தார். அன்றிரவு வெகு நேரம் வரையில் அவருக்குத் தூக்கமே வரவில்லை. நடு நிசியில் சட்டென்று, 'தட்சிணேசுவரத்தில் அந்தப் பைத்தியக்காரப் பிராம்மணன் இருக்கிறானே, அவனைக் கேட்டுப் பார்ப்போம்' என்று அவருக்குத் தோன்றிற்று. எப்போது பொழுது விடியப் போகிறதென்று காத்திருந்தார். விடிந்ததும் நேராகப் பரமஹம்ஸரிடம் போய், "நீங்கள் கடவுளை நேரில் பார்த்திருக்கிறீர்களா?" என்றார். பரமஹம்ஸர் சிரித்துக் கொண்டே, "இதோ என் எதிரே நீ நிற்கிறாயே, அதே மாதிரி கடவுளை என் கண்ணால் பார்த்திருக்கிறேன். உனக்கும் அப்படியே காட்ட முடியும்" என்றார்.

இதுவரைக்கும் இந்தமாதிரி பதிலை யாரிடமும் கேட்டறியாத விவேகானந்தர் திகைத்து நின்றார். முதலில், 'இவருக்குப் பைத்தியம் முற்றிவிட்டதோ?' என்று கூட அவருக்குத் தோன்றியது. என்றாலும் இவருடன் பழகித்தான் பார்ப்போமே என்று பழகத் தொடங்கினார். காலக்கிரமத்தில் ராமகிருஷ்ணரின் பிரதம சிஷ்யராகி விட்டார். —(வாழ்வு)

வேறும் ஜால வேடிக்கை: அப்போதுதான் சென்னையில் மன்மதநாத் பாபுவின் வீட்டில் தங்கியிருந்தேன். என் நண்பர்கள் நான் சர்வமத மகாநாட்டுக்குப் போவதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் இரவு என் தாயார் இறந்துவிட்டதாகக் கனவு கண்டேன். விழித்து எழுந்ததும் என் மனத்தில் நிம்மதியே இல்லை. அப்போதெல்லாம் நான் வீட்டுக்கோ மடத்துக்கோ கடிதம் எழுதுவதில்லை. ஆனால் கனவைப்பற்றி மன்மதநாத் பாபுவிடம் சொன்னேன். அவர் உடனே கல்கத்தாவுக்கு இது விஷயமாக விசாரித்துத் தந்தி கொடுத்தார். பிறகு அவர், "சமீபத்திலுள்ள ஓர் ஊரில் ஓர் ஆசாமி இருக்கிறார். அவர் திரிகால ஞானி; அவரிடத்தில் போய்க் கேட்கலாம், வாருங்கள்" என்றார். நானும் அதற்குச் சம்மதித்தேன். அந்த ஊருக்குப் போனோம். அங்கே சுடுகாட்டில் ஒல்லியாய்க் கன்னங்கறேல் என்று ஒருவர் உட்கார்ந்திருந்தார். அந்த ஆசாமி முதலில் எங்களை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. நாங்கள் திரும்பிப் போகப் புறப்பட்டோம். அப்போது அவர் எங்களைக் கூப்பிட்டார்; தரையில் சில உருவங்களைக் கீறினார். சிறிது நேரம் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். பிறகு என் பெயர், குலம், கோத்திரம், ஊர் எல்லாவற்றையும் சொன்னார். பரமஹம்ஸருடைய ஆத்மா என்னுடனேயே இருப்பதாகவும் என் தாய் சுகமாகவே இருக்கிறாள் என்றும் தெரிவித்தார். நாங்கள் திரும்பி வந்ததும் என் தாய் சௌக்கியம் என்று தந்தி கிடைத்தது.

மகாமாயையின் ராஜ்யத்தில் பிரபஞ்சமாகிய இந்திரஜாலத்தோடு இந்த மாதிரி இன்னும் எத்தனை

மந்திர ஜாலங்களைப் பார்த்திருக்கிறேன், தெரியுமா? எல்லாம் மாயை! வெறும் மாயைதான்!!

—(வாக்கு)

நிர்விகல்ப சமாதி: பரமஹம்ஸரின் சிஷ்யரான பிறகு விவேகானந்தருக்கு எப்போதும் தியானத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டுமென்று பித்துப் பிடித்துவிட்டது.

அவர் வேறு எதிலும் கவனம் செலுத்துவதில்லை. பரமஹம்ஸர் இதைத் தெரிந்துகொண்டார்; 'இப்படி இருந்தால் விவேகானந்தன் உலகத்துக்குப் பயன்படாமல் போய் விடுவானே!' என்று வருந்தினர். விவேகானந்தரை அழைத்து, "அப்பா, உனக்கு என்ன வேண்டும்?" என்றார். விவேகானந்தர், "நான் நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்து முக்தி அடையவேண்டும்" என்றார். பரமஹம்ஸர், "உன்னால் உலகத்துக்கு எவ்வளவோ நன்மை ஏற்பட வேண்டியிருக்கிறது. அப்படியிருந்தும் ஆத்ம சுகத்தையே பெரிதாக எண்ணிக்கொண்டிருக்கிறாய். இது சரியல்ல" என்றார். அப்படியும் விவேகானந்தர் பிடிவாதமாக இருக்கவே, "சரி, உன் இஷ்டப்படியே செய்" என்று சொல்லிவிட்டார் பரமஹம்ஸர்.

இப்படிச் சில தினங்கள் விவேகானந்தர் நிர்விகல்ப சமாதியில் ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் இரவு அவருடைய தியானம் கலைந்தது. தாம் விரும்பினதெல்லாம் கிட்டிவிட்டது போல் அவருடைய மனத்தில் ஒரு வித அமைதி ஏற்பட்டது. ஏதோ ஓர் அபூர்வ சக்தி, 'இனி நீ உலக நன்மைக்காகப் பாடுபட வேண்டும்' என்று அவரைத் தட்டி எழுப்புவது போல் இருந்தது. உடனே பரமஹம்ஸரிடம் போய் அவரை நமஸ்கரித்தார்; குரல் தழுதழுக்க, "ஸ்வாமி, தங்கள் கட்டளைப்படியே இனி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்" என்றார். பரமஹம்ஸர் அன்போடு அவரைத் தழுவிக் கொண்டார்.

—(வாழ்வு)

குட்டையும் நெட்டையும்

பெரிய மனிதர்களெல்லாம் பெரும்பாலும் குட்டையானவரே என்று புள்ளிவிவர நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு உதாரணமாக வால்டேர், கலிலியோ, மகா அலெக்ஜாந்தர், பாஸ்கல், ப்ளேட்டோ, லீப்னிட்ஸ், மாண்டேன், விக்டர் ஹ்யூகோ, தீர்ஸ், ஹோரேஸ், அரிஸ்டாட்டில், நெப்போலியன், மூர், வீஸர், மார்ஷல் போ, எடிஸன், பால்ஸாக், ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய பலர் குட்டையானவர் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால் மிராபூ, கெதே, ஸ்காட், பாஸ்டர், லமார்ட்டின், ப்ளாபர்ட், பீதோவன் ஆகியவர் நெட்டையானவர்கள். இவர்களை இந்த விதிக்கு விலக்காகவே கொள்ள வேண்டுமாம். —'இல்லஸ்ட்ரேட் பேமிலிப்ளாடு', ஆஸ்லோ.

'ஏது, ஏது? இந்தப் பழங்காலப் பெரியார்கூட ஒரு ஸோஷலிஸ்டா?' என்றே தோன்றுகிறது!

கௌடில்யர் காட்டும் வழி

கே. வி. எம்.

பழமை, புதுமை இந்த இரண்டுக்கும் எப்போதுமே முரண் இருப்பது சகஜம். பழமையை விரும்புகிறவர்கள் புராணங்களையும் சாஸ்திரங்களையும் புகழுவார்கள். புதுமையில் மோகம் கொண்டவர்கள், 'நவீன விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்பார்கள். சற்று ஆராய்ந்து பார்த்தால், 'இரண்டிலும் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு' என்று தெரியும். அவைகளில் நல்லதை ஏற்றுக்கொண்டு கெட்டதை விட்டு விடலாம்.

நம் நாடு சுதந்தரம் அடைந்த பிறகு பொருளாதாரம், அரசியல், விவசாயம், வியாபாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் சிக்கலான பல பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. 2,000 வருஷங்களுக்கு முன் வாழ்ந்த கௌடில்யர் எழுதிய 'அர்த்த சாஸ்திர'த்தில் இவைகளைத் தீர்க்கப் பல உபாயம் சொல்லியிருக்கிறது.

இன்று நம் நாட்டில் முக்கியப் பிரச்னை, பயிர்நிலங்களை எல்லாருக்கும் பகிர்ந்து கொடுப்பதுதான். நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள் இவர்களிடமிருந்து நிலங்களைக் கைப்பற்றி உழவர்களுக்கு எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்றுதான் அரசியல்வாதிகள் யோசித்து வருகிறார்கள். உழவர்களின் சௌகரியம், திறமை இரண்டுக்கும் ஏற்றபடி நிலத்தைப் பிரித்து அவர்களுக்குச் சொந்தமாக்கினால்தான் விவசாயம் வளர்ச்சி அடையும். இப்போது அரசாங்கத்துக்கும் உழவர்களுக்கும் இடையே நிலச்சுவான்தார் என்ற வகுப்பு இருப்பது இந்த வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது. இப்படி நிலங்களை அரசாங்கமே கைப்பற்றி எல்லா மக்களுக்கும் பகிர்ந்து கொடுப்பதை 'அர்த்த சாஸ்திரம்' ஆமோதிக்கிறது. நிலத்தைப் 'பண்பட்டது', 'பண்படாதது' என்று கௌடில்யர் இரண்டாகப் பிரித்திருக்கிறார். "பண்பட்ட நிலத்தை வரி செலுத்துவோருக்கு ஆயுள்வரை அநுபவிக்கும்படி விடவேண்டும். 'பண்படாத' நிலத்துக்கு வரி வாங்கக் கூடாது. கொடுத்த ஆளுக்கே அது சொந்தமாக இருக்க வேண்டும். அவர் பயிரிடாமல் அப்படியே கரம்பாகப் போட்டிருந்தால் அந்த நிலத்தை ஊரிலுள்ள ஏழை உழவர்களுக்குக் கொடுத்துப் பயிரிடச் செய்ய வேண்டும். பயிரிடுவதாக வாங்கிக் கரம்பாகப் போட்டிருப்பவர்களுக்குத் தக்க அபராதத் தொகை விதிக்க வேண்டும்" என்று 'அர்த்த சாஸ்திரம்' 2-ஆம் அதிகரணம் 1-ஆம் அத்தியாயத்தில் அவர் சொல்லியிருக்கிறார்.

பிறகு, "பயிரிடுவதற்கு வேண்டிய மூலதனத்தைக் கொடுத்ததவுவது அரசாங்கத்தின் கடமை" என்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 19-11-'50), கள்ளிக்கோட்டை.

கிருர். இந்த உதவியைத்தான் அவர் 'அநுக்கிரகம்', 'பரிகாரம்' என்று குறிப்பிடுகிருர். அதிக விளை வுக்காகக் கொடுக்கும் பண உதவி தான் 'அநுக்கிரகம்.' நிலத்தைப் பண்படுத்த அளிக்கும் உதவி 'பரி காரம்.' "விதை, ஆடு மாடு, உரம் முதலியவைகளைக் கடனுகக் கொடுத் துப் பின்னுல் பயிரிடுவோரின் சவு கரியத்துக்குத் தகுந்தாற் போல் திரும்ப வாங்கிக்கொள்வது அரசாங் கத்தின் கடமை. பொக்கிஷத்தின் நிலை தெரிந்து இந்தமாதிரி உதவி செய்யவேண்டும். புதிதாகக் குடி யேறும் மக்களுக்கு இப்படிப் பொரு ளுதவி செய்து அவர்களிடமிருந்து சிறிது சிறிதாக அந்தத் தொகையை வசூலிக்கலாம். இப்படிக் கடன் முழுவதையும் தீர்த்தவர்களுக்கு அரசாங்கம் வெகுமதி அளிக்கவேண் டும்" என்று வேருேர் இடத்தில் கௌடில்யர் சொல்கிருர்.

உணவுப் பொருள்களை விநியோ கிக்கவும் அதிகமாகப் பயிரிடவும் நம் அரசாங்கம் ஏராளமாகப் பணம் செலவழிக்கிறது. இந்த விஷயத் தில் கௌடில்யர் சொல்கிறபடி நடப்பதே நலம். மக்களுக்குப் பொருளுதவி செய்து அவர்களைப் பயிரிடும்படி தூண்டுவதுதான் உணவுப் பெருக்கத்துக்கு ஏற்ற வழி. அதை விட்டு அரசாங்கம் தானே முதல் போட்டுப் பயிர்த்தொழிலில் இறங்கினுல் பொக்கிஷம் காலி யாவதுதான் மிச்சம். இதை ஈடுகட்ட மக்களின்மேல் தாங்க முடியாத வரிப்பளுவைச் சுமத்த வேண்டி யிருக்கும். இதைக் கௌடில்யர் ஒப்பவில்லை.

விவசாயத்தைக் கவனிக்க முக் கிய அதிகாரி ஒருவன் இருக்கவேண் டும் என்று அவர் சொல்லுகிருர். இவனுக்கு அந்தக் காலத்தில் 'சீதாத்தியக்ஷன்' (கலப்பை அதி காரி) என்று பெயர். "இவன் அர சாங்க நிலங்கள் சிலவற்றைத் தானே முன்நின்று பயிரிட்டுக் காட்டுவான். இப்படி இவன் பயி ரிட்டு மிச்சமுள்ள நிலங்களை 'அர்த்த ஸீதிகர்கள்' என்னும் வாரக்காரர்களுக்கும் உழைப் பாளிகளுக்கும விட்டுப் பயிரிடச் சொல்ல வேண்டும். அதற்கு அவர் கள் ஒப்புக்கொண்டு பயிரிடாமல் இருந்தால் அந்த நிலத்தின் விளைச் சலுக்கு ஈடான தொகையை அவர் களிடமிருந்து அரசாங்கம் வசூலிக்க வேண்டும். பயிராகக் கூடிய ஒரு துண்டு நிலத்தைக்கூட வீணுக்கக் கூடாது" என்பது கௌடில்யரின் கருத்து.

"விளைச்சலில் ஒரு பகுதியை மட் டுமே நிலவரியாக வாங்க வேண் டும். இயற்கையினுல் ஏதாவது பாதகம் நேர்ந்து விளைவு குறைந் தால் தக்க முறையில் அதற்குப் பரி காரம் செய்யவேண்டும்" என்றும் ஓர் இடத்தில் சொல்லுகிருர். விளை பொருளைத் தவிர மற்ற ஏதாவது பொருளை வரியாகத் தரவேண்டி யிருந்தால் சிலசமயம் விளைபொரு ளின் விலையைவிட வரிப்பணம் அதிகமாகவே இருக்க நேரும். அத ஞல்தான் விளைபொருளில் ஒரு பகுதி என்று கௌடில்யர் சொல்லு கிருர். 'சில இடங்களில் பணமாக வும வசூலிக்கலாம்' என்று சொல்லி யிருக்கிருர். 'முடிந்தவர்கள் பண மாகவும் முடியாதவர்கள் தானிய மாகவும் கொடுக்கலாம்' என்றுதான் இதற்குப் பொருள் கொள்ள வேண் டும்.

கௌடில்யர் சில கிராமங்களை அவைகளின் தகுதிக்கு ஏற்றபடி, 'வரிவிலக்கு அளித்தது', 'தானி யத்தை வரியாகக் கொடுப்பது,'

'பசுவை வரியாகக் கொடுப்பது', 'தங்கத்தை வரியாகச் செலுத்துவது', 'படைகளைத் தருவது' என்று வகைப்படுத்தியிருக்கிறார்.

உணவுப் பஞ்சத்தைப் போக்க இப்போது நம் அதிகாரிகள் கையாளும் முறையில் குறை இருக்கத்தான் இருக்கிறது. அதிகாரிகள் என்னதான் அதைப் புகழ்ந்தாலும் மிராசுதாரர்களும் குடியானவர்களும், 'அரசாங்கம் முழு விளைச்சலையும் எடுத்துக்கொண்டு போய்விட்டதே' என்று வருந்துகிறார்கள். மற்ற மக்களோ வேண்டிய அளவு உணவுப் பொருள் இல்லாமல் தவிக்கிறார்கள். இதைப் போக்க, கௌடில்யர் சொல்லும் உபாயத்தைக் கவனிப்போம்.

இந்த மாதிரி பஞ்ச காலத்தில் ஒவ்வொரு பணக்காரரும் தம்முடைய நிலைக்கு ஏற்றபடி தம் தம் ஊரில் வசிக்கும் ஏழைகளுக்கு அன்னமிட்டுப் பாதுகாக்கவேண்டும். அரசாங்கம் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சரிவரச் செய்வது அவசியம். இதைக் காரியாம்சத்தில் நடத்திக் காட்டாதவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். பணம் இருந்தும் உணவுப்பொருள் இல்லாதவர்களுக்கு நியாயமான விலைக்கு அதைக் கொடுக்கலாம். பணங் கொடுக்கச் சக்தி இல்லாதவர்களிடம் அவர்கள் தகுதிக்கேற்றபடி வேலை வாங்கிக்கொள்ளலாம். உழைக்கச் சக்தி இல்லாதவர்களைக் காப்பாற்ற வேண்டியது பணக்காரரின் கடமை.

இதுதான் கௌடில்யர் சொல்லும் முறை. இது அமலுக்கு வந்தால் எவ்வளவோ நலம். ஆனால் ஜனத்தொகை ஏராளமாகப் பெருகியிருக்கும் இந்த நாளில் இது சற்றுச் சிரமமாக இருக்கலாம். இருந்தாலும், அதிக ஜன நெருக்கம் இல்லாத கிராமங்களில் இதைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஜனத்தொகையைக் கணக்கிடும் விஷயத்தில் அதிகாரிகள் இப்போது ஈடுபட்டு வருகிறார்கள். பத்து வருஷத்துக்கு ஒரு முறைதான் இப்படிக் கணக்கெடுக்க வேண்டும் என்பதைக் கௌடில்யர் ஒப்பவில்லை. அடிக்கடி தவறாமல் எடுக்கவேண்டுமென்றுதான் சொல்கிறார். அந்த நாளில் கிராமங்களிலும் நகரங்களிலும் இந்த வேலையைச் சரிவரச் செய்ய, 'கோபன்' என்ற ஓர் உத்தியோகஸ்தன் இருந்தான். கிராமத்தில் இவர்களுக்கு 'ஸமாஹர்த்தன்' என்றும் நகரங்களில் 'நாகரிகன்' என்றும் சில மேலதிகாரிகள் இருந்து வந்தார்கள். 5 முதல் 10 கிராமம் வரையில் கிராம கோபன் கவனித்து வருவான். 10 குடும்பம் முதல் 40 குடும்பம் வரையில் நகர கோபன் கவனித்து வருவான்.

அப்போது கிராம கோபன் அந்த அந்தக் கிராமத்தின் விஸ்தீர்ணம், பயிர்நிலம், கரம்பு, தோட்டம், காடு, மனை, கோயில், அணைக்கட்டு, சுடுகாடு, சத்திரம், மந்தை மேயும் இடம் இவைகளின் அளவு, எண்ணிக்கை முதலியவற்றைக் குறித்து வைத்துக்கொள்வான். இதோடு அங்கே உள்ள பல ஜாதி மக்கள், கோ சம்ரட்சணை செய்பவர்கள், வியாபாரிகள், சிற்பிகள், உழைப்பாளிகள் இவர்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தி எழுதி வைப்பான். ஒவ்வொரு குடும்பத்திலும் ஆடு மாடுகள், ஆண் பெண்கள், குழந்தைகள், கிழவர்கள் இவர்களின் எண்ணிக்கையையும் அவரவர் தொழில், வரவு செலவு எல்லாவற்றையும் தெளிவாகக்

குறித்து வைப்பது அவன் கடமை. நகர கோபர்களும் இதே மாதிரி நகரத்துக்கேற்றபடி கணக்கெடுப்பார்கள். ஜனன மரணத்தை யொட்டி இந்தக் கணக்கு அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கும்.

கிராமத்திலோ நகரத்திலோ புதிதாக ஒருவர் வருவதாக இருந்தால், அவர் தாம் எங்கிருந்து எதற்காக வந்தார், தம் தொழில், வருமானம் ஆகிய விவரங்களை 'ஸமாஹர்த்த'னிடமோ 'நாகரிக'னிடமோ சொல்லி அநுமதி பெற்ற பிறகுதான் அங்கே வசிக்க முடியும். கௌடில்யர் சொல்லும் இந்த மாதிரி கட்டுப்பாட்டு முறைகளால் அந்தக் காலத்தில் மக்கள் பயமின்றி வாழ்ந்தார்கள். இதே முறைகள் இன்றைய மக்களுக்கும் நிச்சயமாக நன்மை விளைவிக்கும்.

கிரிக்கட் பார்க்கச் சென்ற நிருபர்

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குவீன்ஸ்லந்தில் எம். வி. வி. கிரிக்கட் போட்டி ஒன்று நடந்தது. அதில் விளையாடிக் கொண்டேயிருந்த டெனிஸ் காம்டன் என்பவர் இடைநடுவில் வெளியேறினர். ஐம்பது கஜ தூரத்துக்கப்பால் பத்திரிகைக்காரர்களுக்கு ஆசனங்கள் போட்டிருந்தார்கள். அங்கே உட்கார்ந்திருந்த 'டெய்லி ஹெரால்டு' நிருபர் சார்லஸ் பிரே என்பவர், உடனே அந்தப் போட்டி விளையாட்டின் நிர்வாகிக்கு இந்தத் தந்தி அடித்தார்: "பிரிஸ்பேனில் உள்ள எம். வி. வி. காரியதரிசி அவர்களுக்கு: காம்டன் ஏன் பீல்டை விட்டு வெளியேறினர்?—பிரே" ஐம்பது கஜதூரத்தில் உள்ள காரியதரிசிக்கு நிருபர் இப்படித் தந்தியடிக்க நேர்ந்ததற்குக் காரணம் உண்டு. பலத்த கம்பி வேலிகளைப் போட்ட மைதானத்திலே ஆட்டக்காரர்கள் இருந்தார்கள். அந்த இடத்துக்கு எவரோ சில பெரிய மனிதர்களை அநுமதித்தார்களே யொழிய, மற்றவர்களைப் போக விடவில்லை.

நிருபர் பிரே அரைமணி நேரம் காத்திருந்த பிறகு, அவருடைய தந்திக்குப் பதிலும் ஒரு தந்தியிலேயே வந்தது. அது இதுதான்: "இயற்கை உபத்திரவங்களால்—கிரீன்."

—'ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்'

விரலிலே கட்டு

"விரலிலே கயிற்ருல் ஒரு கட்டுப் போட்டிருக்கிறீர்களே; ஏன்?"

"அதுவா? அது என் மனைவி போட்ட கட்டு. ஒரு கடிதாசை மறக்காமல் தபாலில் போட எனக்கு ஞாபகம் மூட்டத்தான் இந்தக் கட்டு."

"சரிதான். காகிதத்தைத் தபாலில் போட்டீர்களோ?"

"இல்லை; அதை அவள் என்னிடம் கொடுக்க மறந்துவிட்டாள்."

—'வெர்கென்ஸ் குக்', ஆஸ்லோ.

இவளைப்போன்றவர் எண்களை ஆட்சி செய்யும்
இந்த விந்தையின் ரகசியம் என்ன?

கணித மேதை சகுந்தலா

★



குமாரி சகுந்தலா என்ற 19 வயதுப் பெண் ஒருத்தி இருக்கிறாள். கேட்ட மாத்திரம் எந்தக் கணக்கும் போட்டு உடனே பதில் சொல்லி விடுகிறாள்; இதைப் பார்த்தவர்கள் இவள் மனிதப் பிறவியா என்றுகூட ஆச்சரியப் படுவார்கள்! சகுந்தலாவின் சின்னஞ்சிறு மூளையை ஆராய்ந்தால், மனித உள்ளத்தில் எவ்வளவு அதிசய சக்தி அடங்கியிருக்கிறது என்று அறிந்துகொள்ளலாம். பெரிய பெரிய நிபுணர்களெல்லாம் சகுந்தலாவை லண்டனில் பரீட்சித்துப் பார்த்தார்கள். பிளாக்போர்டில் 2,41,37,569 என்று ஒரு நிபுணர் எழுதி முடித்தாரோ இல்லையோ, அந்தத் தொகையின் கனமூலம் (க்யூப் ரூட்) ஆன 289 ஐ அவள் உடனே சொல்லிவிட்டாள். இப்படியே இன்னும் நீண்ட எண்களுக்கும் கன வர்க்க மூலங்களை வெகு சுலபமாகச் சட்டுச் சட்டென்று அவள் சொல்லிவிட்டாள்.

இதெப்படி என்றோ வழி என்ன என்றோ கேட்டால் இவளால் சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் வழி இருக்கத்தானே வேண்டும். விடையைச் சரியாகச் சொல்லும் சக்தி ஒருவருக்கு இருக்கலாம்; வழி எப்படி என்று விவரிப்பதற்குத் தனிச் சக்தி வேண்டும்.

மூலம்: ப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 31-12-'50), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

சகுந்தலா மிகவும் பயந்த சுபாவம் உடையவள். இவள் பதில் சொல்லும்போதுகூட உரக்கப் பேசமாட்டாள். இவள் சொல்வது அரைகுறையாகத்தான் நம் காதில் விழும். "விடை எதுவும் என் கண்ணிலோ காதிலோ வந்து தோன்றவில்லை; தானாகவே மூளையில் உதிக்கிறது" என்கிறாள். ஆனால் இந்த விஷயத்தில் இவளுடைய அபிப்பிராயம் தவறு என்று நிச்சயமாகச் சொல்லலாம். சகலவித ஒலிக் குறிப்பு அல்லது உருவக் குறிப்புகளையும்போலவே விடையும் ஒரு சின்னந்தான். அதைக் கண்டோ கேட்டோ உணர முடியுமேயொழிய, வேறு விதமாய் மனத்தில் அது உதிக்காது.

இந்த மாதிரி அதிசயப் பிறவிகளை ஆராயும்போது ஒரு விஷயம் நமக்கு நன்றாய்ப் புலனாகிறது: அதாவது இயற்கையான சக்தியால் மட்டும் ஒருவர் மேதையாக முடியாது; கடுமையான உழைப்பும் சேர்ந்தே அவர் மேதையாகிறார். இந்த மாதிரி கணிதமேதைகளுக்கெல்லாம் எண்கள் என்றால் ஒரு பித்து. ஒரு பெரிய எண்ணை நாம் பார்க்கிறோம். அதில் நமக்கு அப்படி ஒரு விசேஷமும் இருப்பதாகத் தோன்றாது. ஆனால் இவர்களுக்கோ அதில் பொருள் பொதிந்திருப்பது தெரியும். சின்னஞ்சிறு வயதிலேயே எண்களைப்பற்றிய அறிவு இவர்களுக்கு ஏற்பட்டு அவைகளின் பலவித இயல்புகளையும் இவர்கள் கண்டு பழகியிருப்பதுதான் இதற்குக் காரணம்.

பங்களூருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தவள் சகுந்தலா தேவி. இவளுடைய பெற்றோர்களுக்கு இவளைச் சேர்த்து மொத்தம் 12 குழந்தைகள். இப்போது சகுந்தலா பி. ஏ. பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கிறாள். இண்டர்மீடியட்டில் இரண்டுதரம் தேறவில்லை. இவளுடைய தங்கை ஒருத்தியும் சிறு வயதில் இவளைப் போலவே கணக்கில் கெட்டிக்காரியாகத்தான் இருந்தாள். ஆனால் அதில் அக்கறை செலுத்திப் பழகாததால் வரவர அந்தச் சக்தி அவளிடம் குன்றிவிட்டது.

ஆறு வயதாக இருக்கும்போதே பல இடங்களில் சகுந்தலா தன் திறமையைக் காட்டி எல்லாரையும் பிரமிக்க வைத்தாள் என்றால் பாருங்கள். அப்போது பெரிய பெரிய எண்களை மடமடவென்று பெருக்கி விடுவாளாம். இப்போது அப்படிச் செய்ய இவளால் முடியவில்லை. சற்றுப் பழக்கம் விட்டுப் போனது இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் அதற்குப் பதிலாக வர்க்க மூலம், கன மூலம் இவைகளைக் கண்டு பிடிப்பதில் அதிகக் கவனம் செலுத்தி வந்திருக்கிறாள். ஒன்பது ஸ்தானங்கள் உள்ள சரியான வர்க்க எண் ஒன்றைப் பார்த்ததுமே அதன் சதுர மூலத்தையோ கனமூலத்தையோ 4-ஆம் மூலத்தையோ சொல்லிவிடுவாள். அதே மாதிரி 14 ஸ்தான எண்களுக்குப் பற்பல மூலங்களையும் 12 ஸ்தான எண்களுக்கு 6-ஆம் மூலம் வரைக்கும் சொல்லி விடுகிறாள்.

இவளிருக்கட்டும். இவளுக்கு முன்னே டாம் புல்லர் (1710-90) என்ற நீக்ரோ அடிமை ஒருவன் வர்ஜினியாவில் இருந்தான். எழுதப் படிக்கத் தெரியாதவன். ஆனால் 9 ஸ்தானமுள்ள 73 கோடியே 16 லட்சத்து 58 ஆயிரத்து 209-ஐயும் 57 கோடியே 83 லட்சத்து 69

ஆயிரத்து 730-ஐயும் பெருக்கு என்ருல் உடனே பெருக்கி விடை சொல்லிவிடுவான். இங்கிலாந்தில் டெர்பிஷயர் தொழிலாளியான ஜெட்டேடியா பக்ஸ்டன் (1702-72) என்பவனும் எழுதப் படிக்கத் தெரியாதவன்தான். அவன் ஒரு சமயம் 39 ஸ்தானமுள்ள ஓர் எண்ணின் சதுரத்தை மனக்கணக்காகவே பத்து வாரத்தில் பெருக்கிச் சொல்லிவிட்டான். ஒரு வஸ்துவின் அகலம் 23,145 கஜம்; நீளம் 56,42,732 கஜம்; உயரம் 54,965 கஜம். இதில் எத்தனை அரைக்கால் கன அங்குலங்கள் இருக்கின்றன என்று பகிரங்கப் பரீட்சை ஒன்றில் அவனைக் கேட்டார்கள். ஐந்தே மணி நேரத்தில் அவன் விடை சொல்லிவிட்டான். அந்த விடை 28 ஸ்தானமுள்ள ஓர் எண்! அத்தனை நேரமும் பேசிக்கொண்டும் இயல்பாக வேலை செய்துகொண்டுந்தான் இருந்தான்.

ஜீரா கோல்பர்ன் (1804-40) என்ற அமெரிக்கன் ஆறு வயதில் சுற்றுப் பிரயாணம் செய்து லண்டனுக்கு வந்தான். 8 என்ற எண்ணை 8-ஐக் கொண்டே திருப்பத் திருப்பப் பெருக்கி, சதுரம், கனம், நாலாவது வர்க்கம் இப்படியே பதினாறுவது வர்க்கமான 2,81,47,497 கோடியே 67 லட்சத்து 10 ஆயிரத்து 656 என்ற தொகைவரைக்கும் சொல்லி விட்டான். 429 கோடியே 49 லட்சத்து 67 ஆயிரத்து 297 என்ற தொகை, எந்த இரண்டு எண்களைப் பெருக்கினல் வரும் என்று கேட்டதற்கு, 641 × 67,00,417 என்று சட்டென்று அவன் சொல்லிவிட்டான். பின்னுல் அவனைப் படிக்க வைத்தபோது அவனுடைய இந்தத் திறமை குறைந்து போயிற்று.

இந்த மாதிரி இன்னும் எத்தனையோ பேர் உண்டு. இன்று கூடச் சகுந்தலா தேவி மாத்திரம் அல்ல; வேறு சிலரும் இருக்கிருர்கள். உதாரணமாக, அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஸாலோ பிங்கெல்ஸ்டீன் என்பவர் இந்தத் திறமை பெற்றிருக்கிருர்.

இந்தத் திறமையைப்பற்றி நாம் என்ன சொல்வது? என்னவோ அதிசயமான சக்தி என்று சொல்லித் தள்ளி விடுவதா? அல்லது 'இவர்களுக்குப் பிரமாதமான ஞாபக சக்தி இருக்கிறது; 100 மடங்கு 100 வரைக்கும் பெருக்கல் வாய்பாடு மனப்பாடம் செய்து வைத்திருக்கிருர்கள்' என்பதா? அல்லது ஏதோ கணித தந்திரம் கற்றிருக்கிருர்கள் என்பதா?

இவர்களில் பெரும்பாலோருக்குப் பல எண்கள் நன்ருய் ஞாபகம் இருக்கின்றன. எண் என்ருல் இவர்களுக்கு அபாரப் பிரியம். இவர்கள் பெரும்பாலும் சில குறுக்கு வழிகளையும் கணித தந்திரங்களையுமே கையாளுகிருர்கள். இவர்களில் பெரும்பாலோருக்குச் சிறுவயதில் இந்தச் சக்தி இருந்து வந்து, பிற்காலத்தில் போய் விடுகிறது. வரவர இவர்களுக்கு எண்களில் மோகம் குறைந்து, வேறு விஷயங்களில் பற்று ஏற்பட்டு விடுவதே அதற்குக் காரணம். இதனுலேயே, படிக்கிறவர்களை விடப் படிக்காத பாமரரிடம் இந்தச் சக்தி அதிக காலம் நீடித்திருக்கிறது. இதுதான் ரகசியம்.

தலை சுழல்பவன் தரணியே சுழல்வதாக எண்ணுகிருன்.

—ஷேக்ஸ்பியர்.



பரசுராம கர்வபங்கம்

விசுவாமித்திர முனிவர், தசரதனின் மைந்தர்களுக்கு விவாகத்தை முடித்து வைத்தார். பிறகு அவர்களுக்கு ஆசி கூறி விட்டு இமயமலைக்குச் சென்றார்.

தசரதனும் ஜனகரிடம் விடை பெற்றுக்கொண்டு அயோத்திக்குப் புறப்பட்டான். அப்போது ஜனகர் லட்சக்கணக்கில் பசுக்களையும் சிறந்த பட்டு வஸ்திரங்களையும் கம்பளங்களையும் பற்பல அணிகளையும் யானை, குதிரை, தேர், காலாட் படைகளையும், தேர்ச்சி பெற்ற பணியாட்கள், பணிப்பெண்கள், விலையுயர்ந்த பொருள்கள் இவைகளையும் கணக்கில் அடங்காமல் சீராகக் கொடுத்தார். பிறகு தாமும் சிறிது தூரம் பின் தொடர்ந்து தசரதனை வழி அனுப்பினார்.

வசிஷ்டர் முதலிய ரிஷிகள் முன் செல்ல, தசரதன் தன் மைந்தர், அவர்கள் மனைவிமார் ஆகியவர்களோடு படைகள் பின் தொடர அயோத்தியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அப்போது சில துர்ச்சகுனங்கள் நேர்ந்தன. இதைக் கண்டு தசரதன் வசிஷ்டரிடம், "ஏன் இப்படி நேருகிறது? என் உள்ளம் நடுங்குகிறதே! மனம் சோர்வடைகிறத. பறவைகள் கொடுஞ் சொற்களைக் கொட்டுகின்றன. ஆனால் மான்கள் வலம் வருகின்றன. இது என்ன?" என்று கேட்டான்.

அதற்கு வசிஷ்டர், "பறவைகள் ஏதோ பயங்கரம் நேரப்

வால்மீகி ராமாயணம் மகோன்னதமான காவியம் என்பது உலகப் பிரசித்தம். அதன் முக்கியப் பகுதிகள் ஒவ்வொன்றாக மஞ்சரியில் வரும். இது மூன்றாவது பகுதி.

போவதாகச் சொல்லுகின்றன. மான்கள் வலம் வருவது அது நீங்கிவிடும் என்பதைக் காட்டுகிறது. ஆகவே வருந்த வேண்டாம்" என்றார். இந்தச் சமயத்தில் பூமி நடுங்கும்படி பெரிய மரங்களை வீழ்த்திக்கொண்டு கொடுங்காற்று ஒன்று கிளப்பிற்று. சூரியனையும் இருள் சூழ்ந்து கொண்டது. திசைகள் மறைந்து விட்டன. எங்கும் புழுதி சூழ்ந்து விட்டது. வசிஷ்டர், மற்ற முனிவர், தசரதன், ராஜகுமாரர்கள் இவர்களைத் தவிர எல்லாரும் நினைவிழந்தார்கள்.

அப்போது பரசுராம முனிவர் அங்கே தோன்றினார். தோளில் கோடரியும் கையில் மின்னல்கொடி போன்ற வில்லும், மறு கையில் பாணமும் ஏந்தி, திரிபுராசுரர்களைக் கொல்லக் கிளம்பிய பரமசிவன்போல் அவர் காட்சியளித்தார். வசிஷ்டர் முதலிய முனிவர்கள் முதலில் ஜபம் செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு, 'இவர்தான் க்ஷத்திரியர் எல்லாரையும் கொன்றுவிட்டு முன்பே மன அமைதி அடைந்துவிட்டாரே! தசரதனையும் அவர் குமாரர்களையும் கொல்லும் எண்ணத்தோடு வந்திருக்கமாட்டார் என்று தோன்றுகிறது. ஆனால் இப்போது ஏன் வந்திருக்கிறார்?' என்று தங்களுக்குள்ளேயே சொல்லிக்கொண்டார்கள். அர்க்கியத்தைக் கையில் எடுத்துக்கொண்டு 'ராம ராம' என்று இன்குரலில்



பரசுராமரை அழைத்து உபசரித்தார்கள்.

அதை ஏற்றுக்கொண்டதும் பரசுராமர் ராமனை நோக்கி, "தாசரதே, ராமா, உன் பராக்கிரமத்தையும், சிவதநுசை நீ முறித்ததையும் கேள்விப்பட்டேன். அது மற்றவர்களால் முடியாத காரியந்தான். இதோ இந்த வில்லைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை நாண் ஏற்றிப் பாணத்தைத் தொடுத்து உன் பலத்தைக் காட்டு. அதற்கு அப்புறம் நீயும் நானும் சண்டை செய்யலாம்" என்றார்.

இதைக் கேட்டுத் தசரதன் வருந்தி வாட்டமுற்றான். பிறகு கைகூப்பி, "க்ஷத்திரியரின் மேல் கோபம் தணிந்து சாந்தி பெற்றவர் தாங்கள். எனக்கும் என் புதல்வர்களுக்கும் சேனைகளுக்கும் அபயம் கொடுக்கவேண்டும். தாங்கள் வேதாத்தியயனம் செய்யும் சிறந்த அந்தணர் குலத்தில் பிறந்தீர்கள். இந்திரனிடம் சபதம் செய்து ஆயுதத்தை விட்டீர்கள். பூமி முழுவதையும் காசியப முனிவருக்குத் தானம் செய்துவிட்டுக் காட்டுக்குச் சென்றீர்கள். அப்படி இருந்தும் என் குலத்தை அழிப்பதற்காக இப்போது இங்கே தோன்றி இருக்கிறீர்கள். ராமன் ஒருவனை மட்டும் கொன்றாலும் நாங்கள் எல்லாரும் உயிர் தரிக்க மாட்டோம்" என்றான் தசரதன்.

இதைக் கவனியாமல் பரசுராமர் ராமனைப் பார்த்து, "விசுவகர்மா உலகப் புகழ் பெற்ற இரண்டு வில்களைச் செய்தார்; அவைகளில் ஒன்றைத் தேவர்கள் திரிபுராசுரர்களைக் கொல்லச் சிவபெருமானுக்குக் கொடுத்தார்கள்; மற்றொன்றை விஷ்ணுவுக்குக் கொடுத்தார்கள். பிரம்மா அப்போது அந்த இருவரின் பலத்தையும் சோதிப்பதற்காக அவர்களுக்குள்ளே விரோதம் மூட்டினார். சிவனும் விஷ்ணுவும் பார்ப்பவர் மயிர் சிலிர்க்கும்படி பயங்கரமாக யுத்தம் செய்தார்கள். அதில் சிவபெருமானுடைய வில்லை விஷ்ணு 'ஹூம்' என்று கூறித் தடை செய்துவிட்டார். சிவன் பயனற்ற அந்த வில்லைக் கோபத்தோடு விதேக மன்னனை தேவராதனிடம் கொடுத்தார். அதைத்தான் நீ ஒடித்தாய். ஆனால் என் கையிலுள்ள வெற்றி பெற்ற இந்த வில்லை விஷ்ணு என் பாட்டனாரான ரிசீகரிடம் கொடுத்தார். அவர் என் தந்தைக்கு அதை அளித்தார். கார்த்தவீரியன் என் தந்தையைக் கொன்றான். இந்த வில்லை எடுத்து அவனையும் மற்ற க்ஷத்திரியரையும் வென்று பூமி முழுவதையும் கைப்பற்றினேன்; காசியப முனிவருக்குத் தானம் செய்தேன். பகைவரை வெல்லும் திறமை பூண்ட இந்த வில்லை நீ நாண் ஏற்றினால் எனக்கு நிகரான பலம் படைத்தவன் என்று உன்னோடு சண்டை செய்வேன்" என்றார்.

ராமன் தந்தையைப் பேசாமல் இருக்கும்படி கேட்டுக்கொண்டு பரசுராமரைப் பார்த்துச் சொல்லலானான்: "பார்க்கவரே, தாங்கள் தங்கள் தந்தை விஷயத்தில் கடமையைச் செலுத்தியதை நான் கொண்டாடுகிறேன். ஆனால் நான் பராக்கிரமம் இல்லாத பேதை என்று எண்ணி இப்படிப் பேசுவது சரியல்ல. இதோ பாருங்கள் என் பராக்கிரமத்தை."

பிறகு வில்லை நாணேற்றி அம்பையும் தொடுத்து வைத்துக் கொண்டு பரசுராமரைப் பார்த்துக்

கடுஞ் சினத்தோடு கூறினன். "தாங்கள் அந்தணர். அதனால் இந்தப் பாணத்தை விட்டுத் தங்கள் உயிரைக் கவர நான் விரும்பவில்லை. ஆனால் தாங்கள் நடக்க முடியாத படி தடை செய்துவிடுகிறேன். இல்லாவிட்டால் தவத்தால் தாங் கள் தேடிய ஒப்பற்ற புண்ணிய லோகங்களை உங்களுக்குக் கிட்டாமல் செய்துவிடுகிறேன்; என்ன சொல் கிறீர்கள்? பகைவரின் பலத்தையும் கர்வத்தையும் அடக்கும் இந்த விஷ்ணுவின் பாணம் வீணாகாது" என்றான்.

இந்தக் காட்சியைக் காணப் பிரம்மா முதலிய தேவர் கள், ரிஷிகள், கந்தர்வர்கள் எல்லா ரும் ஆகாயத்தில் கூடிவிட்டார் கள். உலகமே அசைவற்றிருந்தது.

அப்போது பலம் குன்றி ஒளி இழந்த பரசுராமர் ராமனைப் பார்த்து மெதுவாகச் சொல்ல லானார்:

"நான் காசியப முனிவருக்கு இந்தப் பூமியைத் தானம் செய்த போது அவர், 'என்னுடைய பூமியில் நீ இருக்கக் கூடாது' என்று சொல்லிவிட்டார். நானும், 'இனிமேல் பூமியில் வசிக்க மாட் டேன்' என்று வாக்குக் கொடுத்து விட்டேன். நான் மனோவேகமாக மகேந்திர பர்வதத்துக்குப் போகப் போகிறேன். ஆகவே, என்னுடைய நடையைத் தாங்கள் தடுக்க வேண் டாம். நான் தவம் செய்து ஒப் பற்ற புண்ணிய லோகங்களைத் தேடி இருக்கிறேன். அவைகளை வேண்டுமானால் இப்போதே இழந்து விடுகிறேன். இந்த வில்லை நாண் ஏற்றியதால் தாங்கள் மதுவை வென்ற விஷ்ணு பகவான் என்று தெரிகிறது. தேவர்கள் இதோ தங் களைப் பார்க்கக் கூடியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் என்னை வென்றால் நான் வெட்கப்பட வேண்டிய தில்லை. ஆகவே, பாணத்தை விடுங் கள். என் புண்ணிய லோகங்கள் பாணத்துக்கு இரையாகட்டும். நான் மகேந்திர பர்வதம் போகி றேன்" என்றார்.

அப்படியே ராமன் பாணத்தை எய்தான். தாம் தவம் செய்து தேடிய உலகங்கள் அழிவதைக் கண்டுவிட்டு, பரசுராமர் ராமனைப் புகழ்ந்து வலம் வந்து மகேந்திர பர்வதம் சென்றார். பிறகு ராமன் அந்த வில்லை வருணனுக்குக் கொடுத் தான்; பரசுராமர் போய்விட்ட தைத் தந்தையிடம் தெரிவித்து அவரைத் தேற்றி அயோத்திக்குத் திரும்பினன்.

•••○◎○•••

அவளாயிருக்க முடியாது

கதவிலே அழுக்கு விரல் பதிந்த அடையாளம் இருந்தது. தாய் அதைத் துடைத்துக்கொண்டே, தன் சிறு மகளைப் பார்த்து, "ஆனீ, அழுக்கு விரலைக் கதவிலே பதித்தது யார்? நீதானே?" என்று கேட்டாள்.

சிறுமி மிகவும் அழுத்தமாக, "நான் இல்லை, அம்மா. நான் ஒருபோதும் கதவைக் கையால் தொடுவதேயில்லை. எப்போதும் காலால் உதைத்துத்தான் திறப்பது வழக்கம்" என்று பதிலளித்தாள்.

—ஜீன் பாப்லிட்

கார்ட்டூன் கதம்பம்

“காங்கிரஸ்காரர் தங்கள் நிழலைக் கண்டே அஞ்சுகிறார்கள்” என்கிறார் கிருபலானி.

—‘ஓரியெண்ட்’

கொரியாவில் சமாதான இயக்கம்!

—‘ஸெயிண்ட் லூயி போஸ்ட் டிஸ்பாச்.’



சரே, தாரா சிங், டால்மியா மூவரும் ஹிந்து மகாசபையின் வீர கர்ஜனை புரிந்தார்கள்.

—'அமிர்தபஜார் பத்திரிகை'



திபேத்துக்கு உதவ முடியாது என்று அமெரிக்கா பதிலளித்து விட்டது.

—'ப்ரீ இந்தியா'

பேச்சும் எழுத்தும் முக்கியமானால், அழகும் அலங்காரமும் எப்படி?

அலங்காரச் சுதந்தரம்

வி. சுப்பிரமணியன்

டில்லியில் வியாபார மந்திரியைப் பெண் தூதுக் கோஷ்டி ஒன்று பேட்டி கண்டது. அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அலங்காரப் பொருள்களின் (டாய்லட்) மீது சர்க்கார் ஒரு கண்ட்ரோல் ஏற்படுத்தியிருக்கிறார்களே, இதை எடுத்துவிட வேண்டும்; அவற்றின் மேலுள்ள வரி விகிதத்தையும் குறைத்துத்தான் ஆக வேண்டும் என்று அவரை அந்தத் தூதுக் கோஷ்டி வற்புறுத்தியது. "அலங்காரப் பொருள்கள் என்ன, அவ்வளவு அவசியமா? அப்படித் தோன்றவில்லையே?" என்று அந்த மந்திரி கேட்டார். "நீங்கள் முகக்ஷவரம் செய்துகொள்ளுகிறீர்களே; அந்த 'ஸேப்டி ரேஸர்' மட்டும் அவசியமா?" என்று பெண்கள் திருப்பிக் கேட்டார்கள். "அது போகட்டும். சுதேசிப் பொருள்களை வாங்கி உபயோகியுங்களேன்" என்று மந்திரி சொன்னார். பதிலுக்கு அவர்கள் அவரை நன்றாய்த் தீட்டிவிட்டார்களாம். அலங்காரப் பொருள்கள் மிகமிக அவசியம் என்று பெண்கள் தீவிரமாய் வாதித்ததில் இதுவே முதல் தடவை அல்ல. ஏறக்குறைய ஒரு வருஷத்துக்கு முன்பு அமெரிக்கச் சட்ட சபையான காங்கிரஸுக்கு அபேட்சகராய் நின்று வெற்றி பெற்ற மிஸஸ் எட்னா கெல்வி என்னும் பெண்மணி தேர்தலுக்குப் பிறகு ஒரு பிரசங்கம் செய்தாள். "முகப்பவுடர்கள், வாசனைத்திரவியங்கள், லிப்ஸ்டிக் போன்ற அலங்காரப் பொருள்களின் மீது வரி விதிப்பது சரியல்ல. நான் இதைக் காங்கிரஸில் ஆண் மக்களுக்கு எடுத்துச்சொல்லி, அவர்களை ஒப்புக்கொள்ளும்படி செய்யப் போகிறேன்" என்று அவள் அப்போது சொன்னாள்.

ஏறக்குறைய இதே சமயத்தில் எகிப்தில் ஆமத் மூர்ஜ் பேக் என்பவர் தம் மந்திரி பதவியிலிருந்து நீங்கினார். அதைக் கண்டு டோரியா ஷாபிக் என்ற எகிப்துப் பத்திரிகையாசிரியை மகிழ்சசி அடைந்தாள். "அவருக்கு உடம்பு அசௌக்கியம் என்பது பொய். லிப்ஸ்டிக் என்பது போன்ற வாசனைத் திரவியம் அலங்காரப் பொருள்களின் மீது தடை விதித்தவுடன் பெண்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்ததும் பதவியை விட்டார். இதுவே உண்மை" என்று அவள் பெருமை அடித்துக்கொண்டாள்.

கம்யூனிஸ்ட் ருஷியாவில்கூட அரசியல் விவகாரங்களில் இந்த அலங்காரப் பொருள்களைப்பற்றி எல்லாரும் ஜாக்கிரதையாய் இருப்பதாகவே தெரிகிறது. மந்திரி மாலடாவின் மனைவி அழகு மந்திரி (Beauty Commissar) என்ற பத

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 6-1-'51), சென்னை.

வியை வகித்துத் திறமையுடன் வேலை செய்ததற்குப் பலனாக முதல் முதல் 'ஆர்டர் அவ் லெனின்' என்ற உயர்ந்த பட்டத்தைப் பெற்றாள். அந்த வரலாற்றைப்பற்றி ராபர்ட் மல்லாஞ்ஜ் என்பவர் இப்படிக் கூறுகிறார்:

“1931-ஆம் வருஷ ஆரம்பத்தில் பாலின் மாலடாவின் திறமையைக் கண்டு அவளுக்கு நல்ல வேலையாக ஒன்று அளிக்கவேண்டும் என்று ஸ்டாலினுக்குத் தோன்றியது. அப்போது அலங்காரப் பொருள் டிரஸ்ட் மூலம் ஒவ்வொரு வருஷமும் சுமார் நூறு லட்சம் பவுன் நஷ்டம் ஏற்பட்டு வந்தது. அந்த டிரஸ்டுக்கு டைரக்டராக இருந்த டெட்ஜே என்பவரை நீக்கிவிட்டு அவர் ஸ்தானத்தில் பாலின் மாலடாவை ஸ்டாலின் நியமித்தார். முகச்சாயம், லிப்ஸ்டிக், மஸ்காரா போன்றவைகளைக் கம்யூனிஸ்டுகள் நாகரிகக் குறைவாக நினைத்தார்கள். ஆகவே, அந்த அலங்காரங்களுடன் எந்தப் பெண்ணும் ருஷியாவில் வெளியே வரத் துணிய மாட்டாள். அப்படியிருந்தும், மே தின அணி வகுப்பு (மே டே பரேடு) நடந்தபோது, லிப்ஸ்டிக்கும் முகச்சாயமும் அணிந்து பாலின் மாலடாவே சகஜமாய் வந்து நின்றாள். அப்போது அங்கே இருந்தவருக்கெல்லாம் ஏற்பட்ட வியப்பும் பரபரப்பும் கொஞ்ச நஞ்சமல்ல. லிப்ஸ்டிக், மஸ்காரா இரண்டுக்கும் லெனின், மார்க்ஸ் இருவர் கொள்கைகளுக்கும் விரோதமில்லாமல் இப்படி அவள் சமரசத்தை ஏற்படுத்திவைத்தது பிரமாத வெற்றியை அளித்தது. பாலின் மாலடாவ் அழகு மந்திரியான மறு வருஷம் அலங்காரப் பொருள்களின் உற்பத்தித் தொழிலில் இருநூறு லட்சம் பவுன் லாபம் கிடைத்தது. அந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மெஷின்களைப் பிரிட்டனிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் பாலின் மாலடாவ் வரவழைத்தாள். நாட்டின் தொழில் உற்பத்திப் பெருக்கின் பொருட்டுத் திட்டமிட்டு வைத்திருந்த லட்சக்கணக்கான ரூபிள்களை அவள் இந்த வழியில் செலவழித்தாள். எந்த லிப்ஸ்டிக், முகப்பவுடர், வாசனைத்தைலம் ஆகிய அலங்காரப் பொருள்களை வீண் செலவு என்றும் உபயோகமற்றவை என்றும் கம்யூனிஸ்டுகள் பழித்தார்களோ அவைகளே, பெண்கள் வேலை செய்த ருஷியத் தொழிற்சாலைகளில் எல்லாம் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பேருதவியாயின. ஸ்டாலின் இதை உணர்ந்தார். சகல பட்டங்களிலும் மிக உயர்ந்த ஆர்டர் அவ் லெனின் என்ற அரிய பட்டத்தைப் பாலின் மாலடாவுக்கு வழங்கினார்.”

ஆகவே முதலாளித்துவ நாடுகளிலும் சரி, கம்யூனிஸ்டு நாடுகளிலும் சரி; அது மேல்நாடோ அல்லது கீழ்நாடோ எதுவாயிருந்தாலும் பேச்சும் பிரசாரமும் தங்களுடைய அடிப்படையான உரிமைகள் என்று எப்படி ஆண்மக்கள் கருதுகிறார்களோ அப்படியே பெண்களும் அலங்காரப் பொருளை - கூடுமானால் வரியில்லாமலே-உபயோகிப்பது தங்கள் முக்கிய உரிமைகளில் ஒன்றெனக் கருதுகிறார்கள். ராணி க்ளியோபாட்ராவின் காலத்திலிருந்தே பெண்கள் இதை எடுத்துக் கூறி வருகிறார்கள். பெண்களின் உரிமைகளைக் குறித்து ஒரு சாசனம் ஏற்பட்டால் அதில் அலங்காரப்பொருள்களை அவர்கள் இஷ்டப்படி உபயோகிக்கும் உரிமை கட்டாயம் அடங்கியிருக்கும்.

ஆயினும் பெண்களின் இந்த அடிப்படை உரிமையைப்பற்றி ஆண்கள் வேறு விதமாய் நினைக்கிருர்கள். புருஷர்கள் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருந்தும் பெண்களின் வெளி அலங்காரத்தைக் கண்டு மயங்கிப்போய் அவர்களைக் கல்யாணம் செய்துகொண்டு விடுகிருர்கள் என்று அநேகம் பேர் புகார் செய்கிருர்கள். என்ருலும் அலங்காரப்பொருள்களை உபயோகிக்கும் விதத்தைப்பற்றிப் பிரபலமான ஒரு புத்தகத்தை எழுதிய ஆசிரியர் பௌச்சர் போன்றவர்கள் அலங்காரத்தில்தான் தாம்பத்திய வாழ்க்கையின் இன்பமே உண்டாகிறது என்று கருதுகிருர்கள்.

1770-ஆம் வருஷம் இங்கிலாந்தில் 'ப்யூரிட்டன் என்ற தூய்மைவாதிகள், ஒரு சட்டத்தைத் தயாரித்து அமலுக்குக் கொண்டு வந்தார்கள். பல பெணகள் முகச்சாயமும் வாசனைப்பவுடரும் பூசி அந்தப் பகட்டினுல் புருஷர்களை மயக்கி மணம் செய்துகொண்டு விடுவதாக அந்தத் தூய்மைவாதிகள் எண்ணிஞர்கள்; அந்த அபாயத்தைத் தடுப்பதற்காக ஒரு சட்டமே செய்துவிட்டார்கள்.

இதுதான் அந்தச் சட்டத்தின் சுருக்கம்: "எந்த வயது, அந்தஸ்து, தொழில் இவைகளைச் சேர்ந்த பெண்களாயிருந்தாலும் சரி; அவர்கள் கல்யாணம் ஆகாதவர்களாயினும் சரி, ஆனவர்களாயினும் சரி; அல்லது விதவைகளாயிருந்தாலும் சரி; இந்தச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு, முகச்சாயம், வாசனைத்திரவியங்கள், பொய் மயிர், பொய்ப் பற்கள், ஸ்பேனிஷ் உல், இரும்புப் பட்டை, ஹூப்ஸ் என்ற கச்சுக்கள், உயர்ந்த குதிகால் வைத்த பாதரட்சைகள், ஆசன உபபுசங்கள் போன்ற வெளி வேஷங்களைக் கொண்டு புருஷர்களை ஏமாற்றி மணம் செய்து கொள்ளும்படி செய்வார்களாஞல் அந்தப் பெண்கள், ஒழுக்கக்கேடும் சூன்யம் வைப்பதும் போன்ற குற்றங்களுக்கு விதித்துள்ள தண்டனைக்கு உள்ளாவார்கள்; அப்படிச் செய்துகொண்ட கல்யாணமும் உடனே ரத்தாகிவிடும்."

விளம்பரம்

ஒருவருடைய தோட்டத்தில் நிறைய மாதுளமரங்கள் இருந்தன. ஆண்டுதோறும் அவர் ஒரு வெள்ளித்தட்டில் மாதுளங் கனிகளை வைத்து, "இவற்றில் உங்களுக்கு விருப்பமான கனியை விலை கொடுத்து வாங்கிப் போகலாம்" என்று பலகை தொங்கவிடுவது வழக்கம். ஜனங்கள், 'ஹூம்!' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே போய்விடுவார்கள்.

'இனிமேல் இப்படிச் செய்யக்கூடாது' என்று அவர் யோசித்தார். அடுத்த வருஷம் அவர் வெள்ளித்தட்டில் கனிகளை வைக்காமல், வெளியே ஒரு பெரிய பலகையை மாட்டி, "இப்படிப்பட்ட மாதுளங்கனி இந்த நாட்டில் வேறெங்கும் கிடையாது. ஆஞல் நாங்கள் விலையும் அதிகமாகத்தான் வைத்திருக்கிருேம்" என்று கொட்டை எழுத்தில் எழுதினுர்.

அவ்வளவுதான்; அக்கம் பக்கத்து ஊர்களிலுள்ள ஆண் பெண்களெல்லாம் மாதுளம் பழம் வாங்க ஓடிவந்தார்கள்!

—கலீல் ஜிப்ரான்

புதிய சரித்திர ஆராய்ச்சி

யதுநாத் சர்க்கார்

இந்தக் கட்டுரையின் ஆசிரியர் இந்திய சரித்திர ஆராய்ச்சிக்கென்றே வாழ்நாளை அர்ப்பணம் செய்தவர். சமீபத்தில் இவருடைய 81-ஆம் பிறந்த ஆண்டை வங்க நாட்டார் கொண்டாடிக் கௌரவித்தார்கள். அப்போது சரித்திர ஆராய்ச்சி எப்படி இருக்கவேண்டும் என்று இவர் விளக்கிக் கூறினார்.

நான் பி.ஏ. தேறியதும், "இந்திய சரித்திர சம்பந்தமாக நாமே சொந்தமாக ஆராய்ச்சி செய்ய வேண்டும்" என்று எனக்கு ஓர் ஆசை ஏற்பட்டது. 1891 ஏப்ரலில் 'திப்பு சுல்தானின் வீழ்ச்சி' என்பதைப்பற்றி முதல் முதலாக ஒரு கட்டுரை எழுதினேன். அது 'சுஹ்ருத்' என்ற ஒரு பத்திரிகையில் வெளியாயிற்று. எனக்குத் தெரிந்த வரையில் ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கும் விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அவைகளை அப்படியே சுருக்கித் தொகுக்காமல் சொந்தமாகவே எழுதினேன். சமீபத்தில் முகல் சாம்ராஜ்யம் (1650-1803) சீர்குலைந்ததைப்பற்றி விவரமாக ஆராய்ந்து எழுதி முடித்தேன். சென்ற 60 ஆண்டுகளாக நம் நாட்டில் நடந்த சரித்திர ஆராய்ச்சியைப்பற்றிக் கவனிப்போம்.

ஆரம்பத்திலிருந்து பார்த்தால் இந்தத் துறையில் நம் சரித்திர ஆராய்ச்சியாளர் எவ்வளவெல்லாம் பாடுபட்டு வெகு தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்று தெரியும். அந்த நாளில் பௌத்தகால சம்பந்தமாகக் கிருஷ்ணவிஹாரி ஸேன், ராமதாஸ் ஸேன் முதலியவர்கள் ஆராய்ந்து வெளியிட்டதையும், இப்போது வேணீமாதவ் பருவா, பிரபோத் பாக்சி போன்றவர்கள் ஆராய்ந்திருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டுக்குமுள்ள தாரதம்மியம் தெரியும். இதே மாதிரி இந்திய சரித்திர சம்பந்தமாக ரஜனீகுப்த, அக்ஷய மைத்ர போன்றவர்கள் ஆதியில் ஆராய்ந்ததற்கும், சமீபகாலத்தில் விரஜேந்திரநாத் பானர்ஜி முதலியவர்கள் ஆராய்ந்திருப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருப்பதைக் காணலாம். ராஜேந்திரலால் முதல்முதல் வெளியிட்ட 'ப்ருஹத் தேவதா', 'லலித விஸ்தரம்' இந்த மாதிரி ஸம்ஸ்கிருத நூல்களுக்கும் பின்னால் புரொபஸர் மக்டானல் கொண்டு வந்த அதே நூல்களின் மறு பதிப்புக்கும் எவ்வளவு வித்தியாசம்!

ஆதியில் இப்படி ஆராய்ச்சி நூல்களைப் பதிப்பித்த வங்க ஆராய்ச்சியாளர் சிறந்த அறிஞர்கள் தான்; அரும்பாடு பட்டவர்கள் தான். என்றாலும் பின்னால் வந்தவர்கள் அவர்களைப் பல விதத்திலும் மிஞ்சி விட்டார்கள். இதற்கு முக்கியமாக இரண்டு காரணம் உண்டு: ஒன்று,

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (இங்கிலீஷ்; ஜனவரி '51), கல்கத்தா,

ஆராய்ச்சி முறையிலே வித்தியாசம்; அடுத்தபடியாகச் சரித்திர சம்பந்தமாகத் தக்க ஆதாரம் வரவர ஏராளமாகக் கிடைத்து வந்தது.

தற்காலச் சரித்திர ஆராய்ச்சியை இரண்டு பிரிவுகளாக வகுக்கலாம்: (1) ஆராய்ச்சியாளர் தமக்கு வேண்டிய விஷயத்துக்கு மூல ஆதாரம் எங்கே இருக்கிறது என்று பார்க்க வேண்டும்; (2) இதுதான் சரி என்று ஒரு முடிவுக்கு வருவதற்கு முன் அதைப்பற்றி யார்யார் என்ன என்ன அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள் என்று நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். பௌத்தமத சம்பந்தமான ஆராய்ச்சியில் முதல் முதல் வங்காளிகள் ஈடுபட்டபோது இருந்த நிலைமை இதுதான். ஸம்ஸ்கிருதத்திலிருந்து பிரெஞ்சுப் பாஷையில் புர்னூப் மொழிபெயர்த்த பௌத்த இலக்கியங்களை ப்ரியான் ஹாட்ஜ்ஸன் என்பவர் அப்படியே எழுதி வைத்திருந்தார். அதையும் கவல், ரிஸ் டேவிட்ஸ் போன்றவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பாலி நூல்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டே அந்த நாளில் நம்மவர் இந்த ஆராய்ச்சியில் இறங்கினார்கள். ஆனால் இப்போது அதெல்லாம் சரிப்படாது; ஸமஸ்கிருத பாலி மூலத்தையும் மகாயான ஹீனயான நூல்களையும் படித்துப் பார்க்காமல் ஆராய்ச்சி செய்வதென்பது ஆகாத காரியம். இவைகளைத் தவிர, பௌத்தமதம், தந்திர மார்க்கம் சம்பந்தமான கையெழுத்துப் பிரதிகளையும், ஸ்டீன், லீ காக், கிரண்ட்வெடல், பீலியட் போன்றவர்கள் கோடான், மங்கோலியா முதலிய இடங்களில் தோண்டி எடுத்த ஏடுகளையும் ஆராய்ந்தாக வேண்டும். நம் நாட்டில் இப்போது கிடைக்காத பழைய நூல்களின் சீன திபேத்திய மொழிபெயர்ப்புக்கள் திரும்பவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன; இவைகளையும் படித்தாகவேண்டும். இப்படி ஆழ்ந்து கவனித்தால்தான் இந்த ஆராய்ச்சி உருப்படும்; இல்லாவிட்டால் கேலிக்கூத்தாகத்தான் முடியும்.

இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிக் கால சம்பந்தமாக நம் பழைய ஆராய்ச்சியாளருக்குக் கிடைத்த ஆதார நூல்கள்: (1) காபீகான் எழுதிய 'முகல் சரித்திரம்' (1734), 'ஸியார்-உல்-முடகாரின்' (1785) இந்த இரண்டுந்தான். வங்காளச் சரித்திர சம்பந்தமான விவரங்களுக்கு ஆதாரம் 'ரியா - உஸ்-ஸலாதீன்' (1788) என்ற நூல்தான். இவைகளெல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பெற்றிருந்தன. ஆனால் மேலே சொன்ன நூல்களை அசல் ஆதாரமாகக் கொள்வதற்கில்லை. காபீகான் தம் தந்தையிடமிருந்து கேட்டதையெல்லாம் எழுதியிருக்கிறார். குலாம் ஹூஸேன் என்பவர் தாம் நேரில் பார்த்ததை எழுதியிருக்கிறார். பாரசீக மொழியில் எழுதியிருக்கும் 'நாமா' என்னும் ராஜசபை விவரங்களைப் படித்துவிட்டு முகல் சாம்ராஜ்ய சம்பந்தமாக ஆராய்ந்துவிடலாம் என்று சொல்லிவிட முடியாது. அந்த அந்தப் பாதுஷாவின் காலத்தில் எழுதின விஷயங்களாக இருந்தாலும் அவைகளையே மூல ஆதாரமாகக் கொள்வதற்கில்லை. ஏனென்றால், உத்தியோக ரீதியில் சில சமயம் அன்றாடத் தகவல்களைத் தருவதுபோல் இவைகளை வெளியிட்டு வந்தார்கள்; டில்லியில் இருந்த தஸ்தாவேஜிச் சாலையில் அவைகளை வைத்திருந்தார்கள், பாதுஷாக்கள்

தம் சரித்திரத்தை எழுதச் சில பாரசீக அறிஞர்களை வரவழைத்து அவர்களிடம் அந்தத் தகவல்களைக் காட்டும்படி உத்தரவிட்டிருந்தார்கள். இந்த மாதிரி பழைய தஸ்தாவேஜிகளிலிருந்து தொகுத்தவை தான் இந்த 'நாமா'க்கள். சமீப காலத்தில் மேல்நாட்டில் ஒவ்வோர் அரசாங்கமும் உலக யுத்தத்தைப்பற்றித் தொகுத்து வெளியிட்டிருக்கும் உத்தியோக ரீதியான விவரங்களைப்போலத்தான் இது இருக்கும்.

அவுரங்கஜேபைப்பற்றியும் 18-ஆம் நூற்றாண்டில் முகல் சாம்ராஜ்யம் இருந்த நிலைபற்றியும் எழுதும்போது, முகல் பிரபுக்களும் சேனாதிபதிகளும் எழுதிய கடிதங்கள், ராஜசபை முகாம் சம்பந்தமான அன்றாடத் தகவல்கள் இவை எனக்கு மிகவும் பயன்பட்டன. இவை பாரசீக மொழியில் எழுதியவை; இன்னும் அச்சாகாதவை. இந்தமாதிரி ஆயிரக்கணக்கான தகவல்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். இவைகளோடு மராட்டி மொழியில் எழுதிய அரசாங்கத் தகவல்களும் தஸ்தாவேஜிகளும் எனக்குக் கிடைத்தன. 1730-முதல் உள்ள பல விவரங்கள் இவைகளிலிருந்து தெரிகின்றன. இவைகளில் முக்கால்வாசி அச்சாகி விட்டன. 18-ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் சுதேச மன்னர்களின் சபையில் இருந்த பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகள் எழுதிய கடிதங்களும் என் ஆராய்ச்சிக்கு உதவியாக இருந்தன. பம்பாய் சர்க்கார் கேட்டுக்கொண்டபடி இந்தக் கடிதங்களில் பெரும்பகுதியைத் தொகுத்துப் பதிப்பித்திருக்கிறேன்.

நம் பூர்விக சரித்திரத்தைப்பற்றிய உண்மையை ஆராய்வது, யாத்திரிகன் ஒருவன் கங்கை எங்கே உற்பத்தி ஆகிறது என்று தேடிக்கொண்டு போகிற மாதிரிதான். கூடியவரையில் பல இடங்களில், பல மொழிகளில் கிடைக்கும் தகவல்களைத் திரட்டி ஆராய வேண்டும். ஒருதலைப் பட்சமாகப் பார்த்துவிட்டு எதையும் முடிவு கட்டிவிடக் கூடாது. நாளடைவில் இந்தமாதிரி ஆராய்ச்சிக்கு மதிப்பே இராமல் போய்விடும். புதிய ஆராய்ச்சி முறையின்படி இந்தத் துறையில் ஈடுபட்டவர்கள் இங்கிலீஷைத் தவிர இன்னும் அநேக பாஷைகளைக் கற்றாக வேண்டும்; ஏதோ சில மொழிபெயர்ப்புக்களைப் படித்தால் மட்டும் போதாது. ஐரோப்பியர் இந்தமாதிரி அரைகுறை ஆராய்ச்சியில் இறங்கவே மாட்டார்கள். பாரசீகமும் மராட்டியும் தெரியாமல், 17-ஆம் நூற்றாண்டில் இருந்த டில்லி சாம்ராஜ்யத்தைப்பற்றி ஆராய்வதென்றால் அது முடியாத காரியம். நான் சிவாஜியின் வரலாற்றை எழுதும்போது இங்கிலீஷ், ஸம்ஸ்கிருதம், பிரெஞ்சு, பாரசீகம், மராட்டி இவைகளோடு கொஞ்சம் போர்த்துக்கீசிய பாஷையும் ராஜஸ்தானி ஹிந்தியும் கற்றுக்கொள்ளவேண்டியிருந்தது.

நம் நாட்டில் சரித்திர ஆராய்ச்சி எந்த முறையில் இருக்க வேண்டும் என்று இனிக் கவனிக்கலாம். மேல்நாட்டுக் கல்வி முறையினால்தான் நம் ஆராய்ச்சி இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது; இதை யாரும் மறுக்க முடியாது. இதனால்தான் சில சமயம் மேல்நாட்டார் முடிவாகக் கொண்ட சில கருத்துக்களையும் நாம் கண்டிக்க முடிந்தது. இப்போது இந்தியா

விடுதலை அடைந்துவிட்டது; நம் ஆத்திரத்தைக் கிண்டிவிடக்கூடிய விதத்தில் யாரும் எழுத மாட்டார்கள். ஆனால் அப்படிக் கிண்டிவந்ததும் ஒரு விஷயத்துக்கு அவசியந்தான் என்று தோன்றுகிறது. அரசியல் நிலைமை இப்போது மாறிவிட்டது. இப்போதுதான் நாம் உஷாராக இருக்கவேண்டும். தற்பெருமை பாராட்டிக் கொள்ளாமல் விடா முயற்சியோடு உழைத்துவர வேண்டும். விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியில் ஒய்ச்சல் ஒழிவுக்கு இடமே இல்லை; இந்தமாதிரி விஷயத்தில் தூங்கிவழிந்தால் நாம் அடியோடு அழிந்தமாதிரிதான். மீண்டும் அறிவுச் சுடரைக் கொளுத்துவதென்றால் அவ்வளவு லேசா?

ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் இந்த விஷயத்தில் நமக்கு வழிகாட்டினார்கள். அதைத் தொடர்ந்து நம் நாட்டைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சியாளர் கூட்டம் - குரு பரம்பரை நம்மிடையே தோன்ற வேண்டும். நம் நாட்டு அறிஞர்கள் இந்தப் பெரும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

அடுத்தபடி ஆராய்ச்சிக்கு உதவக் கூடிய நூல்களைத் தக்க அறிஞர்களின் துணை கொண்டு வாங்கி ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவவேண்டும்; அவைகளுக்குப் போதுமான பொருள் உதவியும் பெறவேண்டும். ஏட்டுச் சுவடிகளோடு அச்சாகியும் கிடைப்பதற்கரிய பழைய நூல்களும், இலக்கிய சம்பந்தமான சிறந்த பத்திரிகைகளும், 'இஸ்லாமிக் என்ஸைக்ளோபீடியா' (இது இப்போது ரூ. 2,500 கொடுத்தாலும் கிடைக்காது) போன்ற நூல்களும், ஐரோப்பிய சர்க்கார் புத்தகசாலைகளில் இருக்கும் சில புத்தக அட்டவணை ஜாபிதாக்களும், தேச படங்களும், நாணயங்களைப்பற்றிச் சித்திரம் அடங்கிய ஜாபிதாக்களும் இந்த மாதிரி ஆராய்ச்சிக்கு மிக மிக அவசியம். அந்த அந்தப் பிரதேசங்களில் அதற்கு ஏற்றபடி இப்படிச் சில புத்தகசாலைகள் ஏற்படுத்த வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஸைரக்யூஸ் சர்வகலாசாலையார், பிரபல பிரஷியச் சரித்திர ஆசிரியரான லியோபால்டு வான் ராங்க் என்பவருடைய புத்தகசாலையை விலை கொடுத்து வாங்கி, ஒரு துண்டு துணுக்குக்கூட விடாமல் தங்கள் நாட்டுக்கு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது இதற்கு அட்டவணை தயாராகி வருகிறது. உலகத்திலுள்ள சரித்திர ஆராய்ச்சியாளர் எல்லாரும் இனிமேல் அங்கே போய் வருவது நிச்சயம். அதே மாதிரி பிரபல மராட்டியச் சரித்திர ஆசிரியரான புரொபஸர் பாண்டார்கரின் இண்டோலாஜிகல் புத்தகசாலையைப் பம்பாய் சர்க்கார் ரூ. 32,000 கொடுத்து வாங்கிக் கல்கத்தாவிலிருந்து புனாவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். புனா சர்வகலாசாலை ஆரம்பித்து இரண்டு வருஷந்தான் ஆகிறது. அதற்குள்ளேயே பூர்விக இந்திய சரித்திர சம்பந்தமாக ஆராய இப்படி ஒரு வசதி ஏற்பட்டிருப்பது எவ்வளவு நல்லது பாருங்கள்! இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிபற்றி அநேக அரிய பாரசீக, பிரெஞ்சுக் கையெழுத்துப் பிரதிகளை நான் சேகரித்து வைத்திருக்கிறேன். இந்தியாவிலேயே இதைப் போல் கிடைப்பது அபூர்வம். பிரிட்டிஷ் - இந்திய சரித்திர சம்பந்தமான தகவல்கள், அதிலும் 'சிப்பாய்க்

கலகம்' பற்றிய முழு விவரம் என்னிடம் இருக்கிறது.

இந்தமாதிரி ஆராய்ச்சியின் போது உண்மையையே லட்சியமாகக் கொண்டு அதைத் தொடங்குவது அவசியம். பெயரையும் புகழையும் லாபத்தையும் கருதாமல் உழைக்க வேண்டும். நம் நாட்டில் இப்போது நாளுக்கு ஒன்றாகப் பல இடங்களில் பாஷா வாரியாகச் சர்வகலாசாலைகள் நாய்க்குடைபோல் முளைத்து வருகின்றன. நம் நாட்டார் நம்மைப் போற்ற வேண்டுமென்பதற்காகவோ, நாமும் இந்தமாதிரி ஒரு சர்வகலாசாலையில் பெயர் எடுக்க வேண்டுமென்றோ பாராமல் கருமமே கண்ணாக இருந்து உழைப்பவன்தான் உண்மை ஆராய்ச்சியாளன்; மாகாணம், நாடு, மொழி இந்த வேறுபாடுகளையெல்லாம் மீறியவனாக அவன் இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் அபிலாஷை நிச்சயம் நிறைவேறும்.

முன்னும்



பின்னும்



—'ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்'

எகிப்திலே பல முகம்

வயலெட் ஆல்வா

இந்தியாவைப் போலவே பிரிட்டனுடன் சுதந்தரப் போராட்டம் நடத்தியது எகிப்து. அந்த விஷயத்தில் மட்டும் அல்ல; இன்னெரு விஷயத்திலும் இந்தியாவை ஒத்திருக்கிறது அது. அங்கே தான் எத்தனை வித முகங்கள்! எத்தனை நிற மக்கள்!

இந்தியாவில்தான் பலவகை ஜாதியார், பலவிதமான முக ஜாடையும் நிறமும் உள்ளவர்கள் இருக்கிருர்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனல் எகிப்தில் கெயிரோ நகரிலும் அலெக்ஜாந்திரியாவிலும் போய்ப் பார்த்தபோது இதே மாதிரி அங்கேயும் பலவகை உண்டு என்று தெரிந்தது. நீளமும் குட்டையும் உருண்டையுமாய், சுருட்டைத் தலைமயிரோடும் நீண்ட மயிரோடும் வெள்ளை, ரோஜா, கறுப்பு இப்படி எல்லா விதமான நிறத்திலும் பலபேரை அங்கே காணலாம். இந்த மாதிரி பல ஜாதியார் சேர்ந்திருந்தும் எல்லாரும் மதவெறி, இனவெறி எதுவும் இல்லாமல் அமைதியாக வாழ்கிருர்கள் என்ருல் அது அதிசயந்தானே?

எப்போதுமே எகிப்தியர் விருந்தோம்பும் சிறந்த பண்பு உடையவர்கள். பழைய எகிப்திய சர்க்கார் அந்நிய நாட்டாருக்குப் பல சலுகைகள் அளித்து வந்தார்கள். அதனல் அக்கம் பக்கத்து நாடுகளிலிருந்தும் ஆர்மீனியா, இத்தாலி, துருக்கி முதலிய தூர நாடுகளிலிருந்தும் அநேகம் பேர் வந்து செழிப்பான

அசல் எகிப்தியர்

இந்திய எகிப்தியர்

காப்பிரைட்: பேகம் (ஆங்கிலம்), பம்பாய்.

எகிப்திய நைல் பிரதேசத்தில் குடியேறினார்கள். இவர்களில் பெரும்பாலோர் வியாபாரம் செய்ய வந்தவர்கள்.

துருக்கியிலிருந்து வந்த எகிப்திய அடிமைப் பெண்களை உள்ளூர் அராபியர்கள் அநேகம்பேர் மணந்து கொண்டார்கள். இப்போது எகிப்தின் ஜனத்தொகையில் பெரும்பாலோர் அவர்களுடைய சந்ததியார்தான். பெண்களுக்கு உரிய மதிப்புத் தராவிட்டாலும் வியாபாரிகள் அவர்களை அடிமைகளாக விற்று ஏராளமாகப் பொருள் சம்பாதித்தார்கள். எகிப்திலும் அதைச் சுற்றியுள்ள பாலைவனப் பிரதேசங்களிலும் வசிக்கும் ஜாதியாரிடையே பல தாரங்களை மணக்கும் வழக்கம் இருந்ததால், அங்கே இந்த வியாபாரம் நன்றாக ஓங்கியது. இந்தியாவுக்குப் போய் வரும் அராபியர்கள் அங்கிருக்கும் பேரழகிகளை மணந்து எகிப்துக்கு அழைத்து வருவது வழக்கம். அந்த நாளில் எகிப்தை ஆண்டுவந்த கேதிவ் வம்ச சுல்தான்களும் இப்படியே வெளி நாடுகளிலிருந்து பல அழகிகளை விலைக்கு



துருக்கியர்

வாங்கிப் பணிப் பெண்களாக அமர்த்திக்கொண்டார்கள். அடிமைகளாக இருந்தாலும் இவர்களை அந்தப்புரத்தில் அரசகுமாரிகளுக்குச் சேடிகளாக இருக்கும்படி பழக்கிவந்தார்கள். படிப்பிலும் சரி அழகிலும் சரி, இவர்கள் சிறந்து விளங்கினார்கள். இஸ்மெயில் என்ற சுல்தானின் காலத்தில் அவனுடைய அனுமதியின்மேல் ஏராளமான எகிப்திய வாலிபர்கள் இந்தப் பணிப் பெண்களை மணந்துகொண்டார்கள்.

எகிப்திய யூதர்

எகிப்திய அராபியர்

உள்ளூர் எகிப்தியப் பெண்கள் அது வரை மடமையில் ஆழ்ந்து புருஷன் மாருக்கு அடங்கி ஒடுங்கிக் கிடந்தார்கள்; இந்தப் பணிப்பெண்கள் வந்த பிறகுதான் அவர்களிடையே சற்று விழிப்பு ஏற்பட்டது.

இப்போது எகிப்தில் எல்லாச் சமூகத்தாருமே பெண்மக்களுக்கு உயர் தரக் கல்வி அவசியம் என்று உணர்ந்து, அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து வருகிறார்கள். சர்க்கார் நிர்வகித்து வரும் பள்ளிக்கூடங்களில் எந்த வித வேற்றுமையும் பாராட்டுவதில்லை. நீலக் கண்ணும் வெள்ளை முகமும் உள்ள துருக்க, கிரேக்கப் பெண்களோடு சூடானைச் சேர்ந்த கருநிறப்பெண்களும் சரிசமமாக உட்கார்ந்து அங்கே கல்வி பயின்று வருகிறார்கள்.

"வீடா! எதற்கு?"

ஓர் அமெரிக்கப் பெண்ணை, "உங்களுக்கு வீடு சௌகரியமாய்க் கிடைத்ததா?" என்று யாரோ கேட்டார்கள்.

அவள் சொன்ன பதில் இதுதான்: "வீடா! அது எதற்கு? நான் ஆஸ்பத்திரியில் பிறந்தேன்; சாப்பாட்டு விடுதியில் வளர்ந்தேன்; மோட்டார் காரில் காதலித்தேன்; சர்ச்சில் மணந்தேன். கணவரும் நானும் ஹோட்டலில் சாப்பிடுகிறோம்; கோல்ப் பந்தாட்ட கிரௌண்டில் காலை நேரத்தைக் கழிக்கிறோம்; பிரிட்ஜ் கிளப்பில் பகலைக் கழிக்கிறோம்; நாட்டியத்திலோ, ஸினிமாவிலோ மாலையைக் கழிக்கிறோம். எங்கள் குழந்தைகள் போர்டிங் கல்வி நிலையங்களில் இருக்கிறார்கள். எங்களுக்கு வேண்டியதெல்லாம் கூடி எங்கள் காரை நிறுத்த ஒரு காராஜ், அதன் மச்சிலே படுத்துத் தூங்க ஓர் அறை—இவ்வளவுதான்."

பயமுறுத்தும் கடிதங்கள்

தபாலாபீஸ் அதிகாரியிடம் ஒரு வாலிபன் வந்தான். "ஸார், ஒரு புகார் செய்ய வந்திருக்கிறேன். எனக்கு மகா மோசமான பயமுறுத்தல் கடிதங்கள் வருகின்றன. அவைகளை நிறுத்த என்ன வழி?" என்று கேட்டான்.

"அப்படியா? நான் உதவி செய்கிறேன். அப்படிப்பட்ட கடிதங்கள் சட்டவிரோதமாகும்" என்றார் அதிகாரி.

"பேஷ்!"

"அந்தக் கடிதங்கள் யாரிடமிருந்து வருகின்றன? ஏதாவது தெரியுமா?"

"ஆஹா! நன்றாய்த் தெரியும். தவணைக் கடனுக்குக் கார் விற்கும் ஒரு கம்பெனியாரிடமிருந்தே வருகின்றன" என்றான் வாலிபன்.

—'பூர்க்வா பாஸ்,' ப்ரஸ்ஸல்ஸ்.

வானசாஸ்திரம், ஜோதிஷம், புராணம் மூன்றிலும் வரும் வான மண்டலங்களின் இயல்பு என்ன?

கிரகமும் கிரகணமும்

வேலூரி சிவராம சாஸ்திரி

கிரகங்கள் என்றால் என்ன?

சூரியன் முதலியவைகளையே கிரகம் என்கிறோம். அப்படியானால் இவை எதைக் கிரகிக்கின்றன? 'ஆகாய வழியை' என்று வானசாஸ்திரம் சொல்லும். 'நம் பாக்கியத்தைக் கிரகிக்கின்றன' என்று ஜோதிஷம் சொல்லும்.

'கிரகம் என்று கிரகணத்துக்கும் சொல்லுவது உண்டு' என்று சூரிய சித்தாந்தம் சொல்லுகிறது. சூரிய கிரகணம் என்றால் சூரியனை வளைத்துக் கொள்ளல்; வளைத்துக்கொள்பவர் யார்? ராகு. அதனால் ராகு ஒரு கிரகம் ஆயிற்று.

முன் காலத்தில் சூரிய சந்திரர்கள் நீங்கலாக இருந்த கிரகங்களைத் 'தாரா' (நட்சத்திரம்) என்று குறிப்பிட்டார்கள். நட்சத்திரங்களிலிருந்து கிரகங்களை வேறு பிரித்தவுடன், 'ஜோதி' என்ற சொல் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் பொதுப் பெயராகிவிட்டது. இவை சம்பந்தப்பட்ட சாஸ்திரம் ஜோதிஷம் ஆயிற்று.

புதன்: வாயு புராணமும் வேறு சில புராணங்களும், "சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள், சுக்கிரன், புதன், செவ்வாய், குரு, சனி ஆகியவை முறையே ஒருவர் மேல் ஒருவர் இருக்கிறார்கள்" என்று சொல்லுகின்றன. புதன் முதலாக ஐந்து கிரகங்கள் ஈசுவராம்சம் என்று விஷ்ணு புராணமும் சொல்லுகிறது.

பிராம்மணத்திலும் புராணங்களிலும் தாரா சசாங்கக் கதை வருகிறது. அது அவ்வளவும் வானத்தைப்பற்றிய கதையே. "பிரம்மா எவ்வளவோ சொல்லியும் சந்திரன் தாரையை விடமாட்டேன் என்றான். குரு அவளை விடுவிக்க முயன்றார். அதன் பலனாகச் சண்டை மூண்டது. சுக்கிரன் சந்திரனுடைய கட்சியில் சேர்ந்துகொண்டான். இந்திரன் குருவின் கட்சியில் சேர்ந்துகொண்டான்" என்று விஷ்ணு புராணம் சொல்லுகிறது.

தாரா சசாங்கக் கதையில் வரும் தாரை எது? சந்திரன், குரு, சுக்கிரன், பிரம்ம நட்சத்திரம் இந்த நாலுக்கும் அடுத்தாற்போல் இருப்பதே தாரை.

கிருத்திகையில் ஆறு நட்சத்திரங்கள் பளிச்சென்று தெரிகின்றன. கிருத்திகைகளிடம் அக்கினிக்கும் சம்பந்தம் உண்டு. அவைகளுக்கு அக்கினி அதிதேவதை. அக்கினிக்கு அங்கிரரும், அவருக்குப் பிருகஸ்பதியும் பிள்ளைகள். பார்ஹஸ்பத்திய மானத்தில் கிருத்திகைகளுக்கும் பிருகஸ்பதிக்கும் சம்பந்தம் இருக்கிறது. அதனால் கிருத்திகையே தாரா சசாங்கத்தில் வரும் தாரை.

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு: 7-8-'50), சென்னை.

புதமண்டலம் வில் வடிவமானது. அதன் கிரணங்கள் ஒளி உள்ளவை. நிறம் நீலம்.

செவ்வாய்: அங்காரம் என்றால் நெருப்பு. "அங்காரகன் அக்கினிக்கும் விகேசிக்கும் பிறந்தவன்" என்று லிங்க புராணம் சொல்லுகிறது. பல புராணங்களும் இப்படியே சொல்லுவதால் செவ்வாயின் நிறத்துக்கும் குரூரத்தன்மைக்கும் காரணம் நெருப்பு என்று தெரிகிறது.

செவ்வாய்க்குக் குஜன் என்றும் வக்கிரன் என்றும் பெயர்கள் உண்டு. அவனுக்கு மங்கலன் என்றும் ஒரு பெயர் உண்டு. அமங்கலனாகிய செவ்வாய்க்குப் பெயர் மங்கலமாய் அமைந்தது விந்தையே. அவன் மங்களத் திரவியங்களாகிய குங்குமம், சிவப்புச் சந்தனம், செம்பொன் முதலியவற்றைப் போன்ற நிறம் உடையவனாகையால் அந்தப் பெயர் வந்திருக்கலாமென்று ஊகிக்கிறார்கள்.

உஷ்ணம், அச்ருமுகம், வியாலம், ருதிரானனம், நிஸ்த்ரிம்சம் எனனும் ஐந்து முகங்கள் செவ்வாய்க்கு உண்டென்று சித்தாந்தங்கள் சொல்லுகின்றன. முகங்கள் என்பது இங்கே வேறுவேறு நடைகளைத்தான் குறிக்கிறது. மற்றக் கிரகங்கள் வக்கிரிப்பது உண்டாயினும் செவ்வாயை மட்டுமே விசேஷமாக 'வக்ரீ' என்கிறார்கள். செவ்வாய் உதயமான பின் 780 நாள் வரையில் அஸ்தமிப்பதில்லை; மற்றக் கிரகங்கள் அப்படியில்லை. 780 நாட்களில் 710 நாட்கள் செவ்வாய் கிழக்கு நோக்கியே நகருவான். பாக்கி 70 நாட்கள் மேற்கு நோக்கி நகருவான். அதாவது, வக்கிரமாகப் போவான். 780 நாட்களில் சுமார் 120 நாட்கள் அவன் அஸ்தமித்துவிடுவான். ஒரு ராசியில் புகுந்து வக்கிரமாகப் போய், பின்பு வழியைப் பிடித்து அந்த ராசியைக் கடக்கச் செவ்வாய்க்கு வெகு காலம் பிடிக்கும். அதனால் செவ்வாயின் அசைவு தெரியாது. இதைக் 'குஜன் ஸ்தம்பித்தல்' என்று சொல்வார்கள்.

பிருகஸ்பதி (குரு): பல இடங்களிலே குருவை அக்கினி என்று ரிக்குகள் சொல்லுகின்றன. இவர் யாக எஜமானர்களுக்குப் புரோகிதர். தேவதைகளின் குரு; ரிஷி. ஸப்த ரிஷிகளில் ஒருவராகிய அங்கிரருக்குப் பிரம்மதேஜஸே குருவாகப் பிறந்ததென்று பராசரர் சொல்லுகிறார்.

அங்கிரருக்கும் சுபை என்பவளுக்கும் பிறந்தவர் குரு. இவருக்குத் தேஜஸ், அத்தியயனமாகிய சம்பத்து, கீர்த்தி, மந்திர சக்தி எல்லாம் அசாத்தியமாக இருப்பதாலேயே பிருகஸ்பதி என்று பெயர் வந்ததாம்.

குருவுக்கு 'ஜீவன்' என்று ஒரு பெயர் உண்டு. ரிக்வேதத்தில் இவர் புஷ்டியை விருத்தி செய்பவர் என்ற விவரம் வருகிறது. குரு மூலிகைகளுக்குப் பிறப்பிடம். தேவாசுர யுத்தங்களில் இறந்த தேவர்களை இவர் திவ்விய மூலிகைகளைக் கொண்டு பிழைக்க வைத்ததால் இந்தப் பெயர் பெற்றார். 'வாக்பதி' என்று ஒரு பெயரும் இவருக்கு உண்டு.

குருவின் நிறம் பொன்னிறம். உருவம் ஒரு வகை வாள்போன்றது. நட்சத்திரம் உத்தரம்.

சுக்கிரன்: வெண்ணிறத்தினால் இந்தப் பெயர் இவனுக்கு வந்தது. இவனுக்குத் தண்ணீர் மயமான உடம்பு. நீர் வடிவமான பிருகு

வின் மகளுக்கும் உசகனுக்கும் பிறந்தவன்.

'சுக்கிரன் சிவாராதனை செய்து குன்றாத செல்வத்துக்குத் தலைமை பெற்றான். அமர சரீரமும் பெற்றான்' என்று பராசரர் சொல்லுகிறார். தாயின் அம்சமாக நீர் மயமான உடம்பையும் தந்தையின் அம்சமாக அமரவாழ்வையும் பெற்றான். ரிக் வேதத்தில் வரும் 'வேனன்' என்னும் தேவதையே மேல்நாட்டாரின் 'வீனஸ்' என்றும், அதுவே சுக்கிரன் என்றும் பாலகங்காதரர் எழுதியிருக்கிறார்.

கிருத்திகை, மிருகசீர்ஷம், பூசம், மகம், பூரம், உத்தரம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், பூரட்டாதி நட்சத்திரங்களில் இவன் சம்பந்தப்பட்டால் மழை பொழியும். கிருஷ்ண பட்ச சதுர்த்தசி, பஞ்சமி, அஷ்டமிகளில் சுக்கிர உதயம் ஆனாலும் சுக்கிர அஸ்தமனம் ஆனாலும் பூமி ஜலத்தில் மூழ்கும் என்று ஸம்ஹிதைகள் சொல்லுகின்றன. இவனுக்குக் கவி என்றும் காவியன் என்றும் பெயர்கள் உண்டு. 'பல ஜோதிஷ'த்தில் சுக்கிரனுக்குச் சிற்பத்திலும் கவித்துவத்திலும் சம்பந்தம் உண்டு என்று சொல்லியிருக்கிறது. சுக்கிரன் அசுர மந்திரி; பிருகஸ்பதி தேவமந்திரி. இதையொட்டிச் சுக்கிர நீதியும் பிருகஸ்பதி நீதியும் பிறந்தன.

சனி: "சிருஷ்டியின் தொடக்கத்தில் சூரியவெப்பம் தாங்காமல் சராசரங்கள் தவித்தன. பிரம்ம தேவர் சூரியனைப் பார்த்து, 'உன் வெப்பத்தைத் தேவர்களே தாங்காமல் வதங்கிவிட்டார்கள்; மனிதர்களைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?' என்றாராம். சூரியனுக்குப் பின்னும் உக்கிரம் அதிகம் ஆயிற்றாம். அந்தச் சந்தர்ப்பமே சனி பிறக்கக் காரணமாயிற்று" என்கிறார் பராசரர்.

புராணங்களில் சாயா, சூரியன் இவர்களின் பிள்ளை சனி என்று சொல்லியிருக்கிறது. சனியின் நிறம் கறுப்பு. "சனி குற்றம் இல்லாத வைடூரியம்போல் தோன்றும் போதும், பாணபுஷ்பம் போல் காணும்போதும் மக்களுக்கு நன்மையே" என்கிறார் வராக மிகிரர்.

சாயாதேவி குமாரன், கறுப்பன், கறுப்பு உடைக்காரன் என்று குறிப்பிடும்போது அவனுடைய கருமையின் கொடுமை தெரிகிறது.

நொண்டி, சனைச்சரன், மந்தன் என்ற பெயர்கள் சனியின் மந்த கதியை விளக்குகின்றன.

ராகு கேதுக்கள்: வேதத்தில் "பானுவை ஸ்வர்பானு மறைத்தான்" என்றும், "அத்திரி கிரகணத்தைக் கண்டார்" என்றும் இருக்கிறது.

சூரியனை ராகு பிடிக்கவே இருள் கவிந்து, சூரியன் கீழ் நோக்கி விழுந்தான். அப்போது அத்திரி, "ஒளிக்கிடமாகிய சூரியனே, உனக்கு மங்களம்" என்றதும் பிரம்ம ரிஷியின் வாக்குப்படி சூரியன் கீழே விழாமல் நின்றான் என்று லிங்க புராணம் சொல்லுகிறது. ராகு சூரியனுக்குக் கீழே இருப்பதாக ரிக்வேதம் சொல்லுகிறது. இந்த ஸ்வர்பானுவே ராகு. தேவாசுரர்கள் அமிர்தம் கடைந்து அதைப் பங்கிடும்போது, ராகுவின் தலையைப் பகவான் வெட்டியதாகச் சொல்லும் புராணக் கதை பிரசித்தம்.

தேவாசுரர்கள் ஆகாய கங்கையை அடைந்தார்கள் என்பது, நட்சத்திரப் பாதையை வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் நட்சத்திரங்கள்

சந்திப்பதுதான். மிருகசீர்ஷத்தில் கிரகப் புரட்சி நடந்தது. சந்திரனே அமிர்தம். மிருகசீர்ஷத்தின் அதிபதி சந்திரன்.

"நட்சத்திரப் பாதையில் கிரகப் புரட்சி ஏற்பட்டு அப்போது ஒரு சூரிய கிரகணம் உண்டாயிருந்திருக்கும்" என்று மகாபாரதம் சொல்லுகிறது. இப்படிக் கிரகப் புரட்சியோ சந்திர வீழ்ச்சியோ சுலபமாக நடக்கக் கூடியதன்று. ஒரே இடத்திலும் நடக்காது. மிருகசீர்ஷம், பிரஜாபதி நட்சத்திரம் இவைகளில் கிரகப் புரட்சி ஏற்படுவது நினைக்கக் கூடாத விஷயம். கிறிஸ்துவுக்கு 4,000 வருஷங்களுக்கு முன் ஆகாய கங்கையின் அருகில் கிரகப் புரட்சி ஏற்பட்டது. அப்போது உண்டான சூரிய கிரகணமே முதலில் மனிதன் கண்ணில் பட்டது என்பது பலருடைய கொள்கை.

ராகுவின் ரதம் மங்கலானது. குதிரைகள் வண்டு போல் கருநிறமானவை. கேதுவின் குதிரைகள் சிவப்பும் கறுப்பும் கலந்தவை. இந்த ஒளிகளைக் கொண்டு கவனித்தால் ராகு கேதுக்கள் என்பவை சந்திரனின் இரண்டு வீழ்ச்சிகளே. அதாவது, சூரிய சந்திரர்களுடைய வழியில் விழுந்த இரண்டு புள்ளிகளே என்று தெரியும். இரண்டு வட்டங்களும் நகருபவை. அதனால் சந்திர, சூரிய கிரகண சமயங்களில் இந்த நிழல் கிரகங்களின் நிறத்தைக் குதிரைகளாகவும் ரதங்களாகவும் கற்பனை செய்திருக்கிறார்கள்.

சூரிய சந்திரர்களைவிட ராகு பெரிய வட்டம். சூரிய சந்திர மண்டலங்களின் அளவில் பூமியின் நிழலை ஆதாரமாகக் கொண்டு அவர்களை ராகு மறைத்துத் திரிவதாக வாயு புராணம் சொல்லுகிறது. இதில் ராகு கேதுக்கள் ரோகிணியில் பிறந்ததாக வருகிறது.

இந்தக் கிரகங்களும் நட்சத்திரங்களும் கண்ணுக்குத் தெரியாத ஒரு சூத்திரத்தினால் துருவனுடன் இணைக்கப்பெற்றவை. நதி படகுகளை இழுத்துச் செல்வதுபோல் துருவன் இந்தக் கிரகங்களை இழுத்துச் செல்கிறான்.

அங்காரகன், பிருகஸ்பதி, சனி இவர்கள் தூரத்தில் இருக்கிறார்கள். இவர்களுடைய நடை மந்தமானது. புதசுக்கிரர்கள் நெருங்கி இருக்கிறார்கள். இவர்கள் சீக்கிரகதியில் செல்பவர்கள். அயனமாற்றத்தில் சூரியன் மற்றக் கிரகங்களுக்குக் கீழும் மேலுமாய்த் தோன்றுவான்.

பிரயாண முஸ்தீப்பு

லார்டு டில்னீ என்ற ஆங்கிலேயர் படுத்த படுக்கையாய்ச் சாகக் கிடந்தார். இரண்டு நாளாய் க்ஷவரம் செய்யாமல் அவர் முகத்திலே ரோமம் வளர்ந்திருந்தது. பிரபு திடீரென்று தம் வேலைக்காரனைப் பார்த்துத் திரும்பினார். கண்ணீர் சொரிந்து கொண்டே, "அடே, என்னை இப்படிக் கைவிட உனக்கு வெட்கமாயில்லையா? இந்த முகத்தோடே ஆண்டவன் சந்நிதியில் நான் எப்படிப் போய் நிற்பேன்?" என்று கேட்டார்.

உடனே அவன் அவருக்கு க்ஷவரம் செய்வித்து, ஆண்டவன் சந்நிதிக்கு ஒழுங்காய்ப் போய்ச்சேர அவரை முஸ்தீப்புப் பண்ணிவிட்டான்!

—'இந்தியன் ரெவ்யூ'

அன்றும் இன்றும்



—'சங்கர்ஸ் வீக்லி'

மந்திரம், தந்திரம், ஔஷதம் எல்லாவற்றுக்குமே சக்தி உண்டு என்கிறார் இவர்.

பாம்புக்கடி வைத்தியம்

யு. வி. சோப்ரா

பாம்பு என்றதுமே எல்லாரும் அஞ்சி நடுங்குவார்கள். ஆனால் ஆராய்ந்து பார்த்ததில் இது வீண் கிலிதான் என்று தெரிகிறது. முக்கால்வாசிப் பாம்பு கடிக்காது. மீதியுள்ள விஷப் பாம்புகளிலும் பெரும்பாலானவை ஆளைப் பார்த்தாலே ஓடிவிடும். ஏதோ இரண்டொன்றுதான் உண்மையிலேயே துஷ்டப் பாம்பு என்று சொல்ல வேண்டும்.

இந்தியாவில் 300 வகைப் பாம்புகள் உண்டு. இவைகளில் சுமார் 40, விஷப்பாம்பு வகையைச் சேர்ந்தவை. கடல் பாம்புகளை இதில் சேர்க்கவில்லை. அவை கொடிய விஷமுள்ளவை.

2 வகைச் சர்ப்பங்களும், பனை விரியன் இனத்தைச் சேர்ந்த 12 வகைப் பாம்புகளும், கட்டுவிரியன் இனத்தைச் சேர்ந்த 19 வகைப் பாம்புகளும் கொடியவை. இவைகளில்கூடக் கருநாகம், நல்ல பாம்பு, சாதாரணப் பனை விரியன், அரம் போல் முதுகுள்ள பூர்ஸா என்ற ஒரு வகை விரியன், ரஸ்ஸல்ஸ் வைப்பர் என்னும் அசல் கட்டுவிரியன் இவை கடித்தால்தான் மனிதனுக்கு ஆபத்து.

பாம்புக்குப் பல் நீண்டு வளைந்து கூர்மையாக இருக்கும். பாம்பின் கண்ணுக்குப் பின்னால் உமிழ்நீர்ப் பையில் ஒரு பகுதியே விஷப்பையாகவும் இருக்கிறது. இதிலிருந்து மேல்வாயின் இருபுறமும் குழாய் போல் நரம்பு செல்லுகிறது. அது எயிற்றின் நடுவில் போய்ச் சேரும் போது அங்கே முண்டுகட்டி நின்று விடுகிறது. பாம்பின் கண்ணோடு சம்பந்தப்பட்ட பற்கள் கீழ்வாய்க்குள் முன்புறம் ஜதையாக இருக்கின்றன. அவைகளுக்குக் கீழே ஒரு சிறு துவாரம் இருக்கிறது. இந்த மாதிரி பாம்புகளுக்கு மேல்வாயில் முன்னம் பல் இராதாம். இந்தத் துவாரம் முன்னம் பல்லின் கூர்மையான நுனி வரையில் போகிறது. கீழ்வாயில் விஷப்பையைச் சுற்றிப் பலமான ஒருவிதத் தசை நார் இருக்கிறது. இது சுருங்கும்போது தாடை தானாகவே மூடிக்கொள்ளும்; அந்தத் தசை நார் அழுத்துவதால் இந்த விஷம் அதே சமயம் முன்னம் பல் குழாய் வழியாக எதுக்கி வருகிறது. இதனால் பாம்பு கடித்ததுமே விஷம் நேராகக் கடிவாய்க்குள் பாய்ந்து விடுகிறது. கொழுத்த சர்ப்பமாக இருந்தால் கடிபட்ட ஆள் தேறுவது அபூர்வந்தான்.

கட்டுவிரியன்களின் விஷப்பல் அமைப்பில், நல்ல பாம்புக்கு இராத விசேஷம் ஒன்று உண்டு. உபயோகத்தில் இராதபோது உறை போன்ற ஒரு பையில் அவை மடங்கி விடும். கடிக்க வாயைத் திறக்கும் போது அந்த உறையும் தானாகவே

மூலம்: பம்பாய்க் கிரானிக்கிள் (ஆங்கிலம்: 24-12-'50), பம்பாய்.

திறந்து கொள்ளுகிறது. மடங்கியிருந்த விஷப்பல்லும் உடனே நிமிர்ந்து நிற்கிறது. இந்தப் பல் கெட்டுவிட்டாலும் அதே இடத்தில் தயாராக வேறு விஷப்பல் இருக்கிறது.

பாம்பு நம்மேல் பாய்ந்து நம்மைப் பிடுங்கும் என்று சொல்லுகிறார்களே, அது சரியல்ல; தலைப்பாகத்தை - ஏறக்குறைய உடலில் கால் பாகத்தை - நிமிர்த்தியே கடிக்க வரும்.

பாம்புக் கடிக்கு நாட்டு வைத்தியம், மந்திரம், தந்திரம் இப்படி எத்தனையோ உண்டு. மலையாளத்தில் பல காலத்துக்கு முன்னேயே இதற்கு ஏற்ற மாற்றுக் கண்டுபிடித்து அதை உபயோகித்தும் வருகிறார்கள். "இலங்கையில் குடியேறியுள்ள மலையாளிகள் சிலர், 'வழக்கமாக எட்டிக்கொட்டை சாப்பிட்டு வந்தால் நல்ல பாம்புக் கடிக்கு அது சரியான முறிப்பு' என்கிறார்கள்" என்று ஸர் எமர்ஸன் டெனன்ட் என்பவர் எழுதியிருக்கிறார். மலையாளக் கரையோரம் எட்டி மரம் புதர் மாதிரி ஏராளமாக இருக்கிறது. இதைத் தவிர இன்னும் பல மாற்றுக்களும் மலையாளிகளுக்குத் தெரியும்.

பாரதநாட்டுப் பழங்கால முனிவர்கள் இதைப்பற்றி எத்தனையோ கிரந்தங்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த மாதிரி நூல்கள் மலையாளத்தில் பனையோலைச் சுவடிகளில் அரைகுறையாகக் கிடைக்கின்றன. சுந்தர பட்டாசாரியர் என்பவர் எழுதிய 'லக்ஷணாம்ருதம்' என்ற அரிய நூலில் பாம்புக்கடிக்கு என்ன என்ன மாற்று என்று விரிவாகச் சொல்லியிருக்கிறது. பாம்பில் நாகம், மண்டலி, தகிலம், வெக்திறன் என்ற நாலுவகை பற்றிய விவரத்தை இதில் காணலாம். தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர், பாம்புகளின் உடலமைப்பு முறைப்படி வேறு விதமாக வகைப்படுத்திச் சொல்கிறார்கள். நம் முன்னோர் விஷத்தின் தரத்தைக் கொண்டு வகைப்படுத்தியிருக்கிறார்கள்.

நல்ல பாம்பு கடித்தால் முக்கால் வாசி பிழைக்கமாட்டார்கள். 'பைஸாலிஸ் பிளெரனோஸா' என்ற தக்காளி இனத்தைச் சேர்ந்த மூலிகையில் தயாரித்த மாத்திரை கொடுத்தால் சில சமயம் உடனே கேட்கும். இதன் இலை, வேர் இவைகளைச் சாதாரண நிலையில் சாப்பிட்டால் போதை ஏற்படும். மண்டலியும் கட்டுவிரியனும் கடித்தால் சந்தனக் கட்டையை இன்னும் சில மருந்துகளோடு சேர்த்து இழைத்து ஒருவகைக் கஷாயம் செய்து குடிக்க வேண்டும்.

பனைவிரியன் கடிக்குச் சுக்கைப் போட்டு ஒரு லேகியம் செய்து சாப்பிட்டால் குணமாகும். இப்படி எத்தனையோ வைத்திய முறைகளை மலையாளத்தில் குடும்ப ரகசியமாக வைத்திருக்கிறார்கள்.

பாம்பு கடித்த ஆளுக்குப் பிரக்ஞை இருக்கிறதா, இல்லையா என்று பார்க்கக் கொஞ்சம் மிளகு உள்ளுக்குக் கொடுத்துப் பார்ப்பார்கள். பாம்பு கடித்தவுடனே விஷம் ரத்தத்தில் கலப்பதற்குள் அதை உறிஞ்சி எடுத்துவிட்டால் குணம் ஏற்படும்.

பாம்புக் கல் என்று ஒன்று இருக்கிறது. அதைக் கடிவாயின்மேல் வைத்துத் தேய்த்தால் விஷத்தை அது உறிஞ்சி விடுகிறது. அந்தக் கல்லுக்கு 'பீட்ரா டி கோப்ரா' என்று போர்ச்சுகீசியர் பெயரிட்டிருக்கிறார்கள். இது நாகப் பாம்பின் தலையிலிருந்து கிடைப்பதாகச்

சொல்லுகிறார்கள். இந்தக் கல் சாம்பல் நிறமாக நடு நடுவே கறுப்பு ரேகை போட்டு இலேசாயும் மழமழவென்றும் இருக்கும். மாட்டுக் கொம்புபோல் உறுதியாகவும் இருக்கும். ஆனால் பாம்பாட்டிகளிடம் இருக்கும் இந்த மாதிரி கற்களில் முக்கால்வாசி போலிகள்.

விஷம் ஏறினதும் நரம்பின் மூலஸ்தானத்தைப் பாதிக்கிறது. இப்படி வலுவிழந்த நரம்புக்கு உணர்வு ஊட்ட வேண்டியது அவசியம். பழைய முறைப்படி நரம்புக்கு உணர்வு ஊட்டுவதற்கும் விஷத்தின் வேகத்தைத் தணிப்பதற்கும் அடிபட்ட ஆளின் கண்ணில் ஒருவகைப் பச்சிலை பிழிவார்கள்; லேபனமோ மாத்திரை இழைத்தோ போடுவார்கள்.

அநேகம் பேர் பாம்புக் கடிக்குச் சுக்கு, மிளகு, வெள்ளைவெங்காயம், பெருங்காயம் இவைகளைச் சேர்த்து இடித்து மாத்திரையாக உருட்டி நிழல் உலர்த்தலாக உலர்த்தி உபயோகிக்கிறார்கள். வெற்றிலைச் சாற்றில் இதை இழைத்துக் கண்ணில் போட்டால் நரம்புகள் அப்படியே மரத்துப் போய் விடுகின்றன. இதனால் தசைநார்களில் விஷத்தின் விறுவிறுப்பு ஏறுவதில்லை.

பழைய நூல் ஒன்றில் பாம்புக் கடிக்குக் கீழ்க்கண்ட சிகிச்சை முறை சொல்லியிருக்கிறது: மூஞ்சூறைக் கொன்று அதன் வாயில் 72 குன்றிமணி எடை பாதரசம் விட்டு வாயைத் தைத்துவிட வேண்டும். அதை நிழல் உலர்த்தலாக நன்றாக உலர்த்த வேண்டும். சன்னமாகப் பொடிசெய்த பின் கருஊமத்தை இலையின் சாற்றை அதில் விட்டுக் குழைத்து மாத்திரையாக உருட்டி வைக்கலாம். மிகவும் ஆபத்தான சந்தர்ப்பங்களில்தான் இதை உபயோகிக்க வேண்டும்.

இன்னும் எத்தனையோ சிகிச்சை முறைகளையும் எளிதில் கிடைக்கும் பல பச்சிலை மருந்துவகைகளையும் பற்றி நம் பழைய நூல்களில் காணலாம். ஆனால் இவைகளை நம் நாட்டு வைத்தியர்கள் தங்களுக்குள்ளே ரகசியமாக வைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய வாயிலிருந்து இவைகளை அறிவது சிரமந்தான்.

இந்தமாதிரி சிகிச்சையின்போது கூடவே மந்திரங்களும் ஜபிப்பது வழக்கம். 'இதெல்லாம் குருட்டு வைத்தியம்; விஞ்ஞான ரீதிக்குப் பொருந்தாது' என்று தட்டிக் கழித்து விடுவதற்கில்லை. இந்த மந்திரங்கள் பரமசிவனையும் கருடனையும்பற்றிய ஸ்துதிகள்தான். இவைகளை ஆயிரத்தொருதரம் விடாமல் ஜபிப்பார்கள். பாம்புகளுக்குப் பரமசிவனென்றால் அன்பு; ஆனால் கருடனைக் கண்டால் அஞ்சி நடுங்கும்.

இப்படி மந்திரம், ஔஷதம் இரண்டின் துணைக்கொண்டும் பாம்புக்கடிக்குச் சிகிச்சை செய்து வருகிறார்கள் நம் இந்து வைத்தியர்கள்.

ஐந்து நிமிஷம் பொறுத்தால்—

கணவன்: (கோபமாய்) என்ன! இன்னும் சமையல் ஆகவில்லையா? நான் இதோ ஓட்டலுக்குக் கிளம்புகிறேன்.

மனைவி: இருங்கள். ஐந்து நிமிஷம் பொறுங்கள்.

கணவன்: அப்படியா? அதற்குள் சமையல் ஆகிவிடுமா?

மனைவி: இல்லை, அதற்குள் நல்ல புடவை உடுத்துக் கொண்டு நானும் உங்களோடு புறப்படச் சௌகரியமாயிருக்கும்.

நேபாளக் கல்யாணம்

கே. குமார்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காதலும் கல்யாணமும் நவீன நாகரிகத்தின் விளைவல்ல; புராதன மக்களிடம் தோன்றிய கட்டுப்பாடுகளே. அவை பற்பல பூர்விகக் குடிகளிடமும் பழைய ரீதியிலேயே இருப்பதை ஆராய்ந்தால், சமூக வளர்ச்சியின் பல உண்மைகள் புலப்படும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நேபாளத்தில் வசிக்கும் குர்க்கா, நேவார், மாகர், குருங், கிராதி, விம்பு, லேப்சா, ராய், பூடியா முதலிய பலவகை ஜாதிகளைச் சேர்ந்த மக்களுக்குளே நேவார்களின் பழக்க வழக்கங்கள் தான் மிகவும் ரசமானவை. இந்த ஜனங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் நேபாளப் பள்ளத்தாக்கிலுள்ள முக்கியப் பட்டணங்களான காட்மாண்டு, பேட்டன், பட்கேயன் இவற்றில் ஏதாவது ஒன்றில் இவர்களைக் கவனித்துத் தெரிந்துகொள்ளலாம்.

நேவார் ஜாதியில் ஒரு பெண் பிறந்தால், அவளுக்கு ஐந்து வயதுக்கு மேல் பன்னிரண்டு வயதுக்குள் - அதாவது அவள் ருதுவாவதற்கு முன்பு - அவளுக்கும் பரமசிவனுக்கு மிகவும் பிரியமான வில்வப் பழத்துக்கும் வைதிகச் சடங்குகளுடன் மணம் முடித்து வைப்பார்கள். பரமசிவனுக்கும் பார்வதிக்கும் மணம் நடப்பதாக இதற்குக் கருத்து. நேவார் பெண்ணின் வாழ்க்கையில் சாஸ்திரீயமாய் நடக்கும் மணம் இது ஒன்றுதான். இதற்குப் பிறகு அவள் செய்துகொள்ளும் கல்யாணங்கள் எல்லாம் கேவலம் சட்ட பூர்வமான ஒப்பந்தங்களேயொழிய வேறல்ல. வைதிக முறைப்படி மணந்த வில்வப் பழம் நித்தியமானதே என்பது அவர்களின் நம்பிக்கை. ஆகவே, அந்தப் பழத்தை அவர்கள் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வருவார்கள்.

பெண்களைவிட ஆண்கள் குறைவாயிருந்து பெண்களுக்கேற்ற கணவர்கள் கிடைக்காமல், பெற்றோர்கள் ஒரு காலத்தில் கஷ்டப்பட்டிருப்பார்கள். அதனாலேயே ஒருவேளை இந்த வழக்கம் நேவார்களிடையே உண்டாகியிருக்கலாம். ருதுவாவதற்கு முன் பெண்ணுக்கு மணம் முடித்து விட வேண்டும் என்ற சாஸ்திரத்தை மீறும் பாவம் எங்கே சம்பவித்துவிடுமோ என்று அவர்கள் பயந்திருக்கலாம். ஆகவே, முன் ஏழு தலைமுறைகளும் பின் ஏழு தலைமுறைகளும் நரகத்தில் கிடந்து உழலாமல் இருக்கும் பொருட்டு, முதலிலே வில்வப் பழத்துக்கு மணம் செய்து கொடுக்

காப்பிரைட் : இந்தியா (ஆங்கிலம் : 25-12-'50), பம்பாய்.

நேபாளப் பெண்

கும் இந்த நூதன வழக்கத்தை அவர்கள் கைக்கொண்டிருக்கலாம்.

நேவார்கள் தங்கள் பெண்ணுக்கு நிஜமான புருஷனைத் தேடிக் கல்யாணம் செய்வதெல்லாம், மேலே சொன்ன வில்வப்பழத் திருமணத்துக்குப் பிறகுதான். வரதட்சிணை ஒன்றும் கிடையாது. பிள்ளை வீட்டாருடன் பேரம் செய்வது போன்ற விவகாரமும் இல்லை. ஒரு நல்ல நாளில் கல்யாணத்தை நிச்சயம் செய்வார்கள். ஆளுக்குப் பத்து வெற்றிலையும் பாக்கும் என்று கணக்கிட்டு அதோடு அதிகப்படியாகப் பன்னிரண்டு வெற்றிலை சேர்த்துப் பெண் வீட்டாருக்குப் பிள்ளையின் தகப்பனார் தாம்பூலம் அனுப்புவார். அந்த அதிகப்படி வெற்றிலைகளில் இரண்டை மணமகள் எடுத்து வைத்துக்கொண்டு பாக்கிப் பத்து வெற்றிலையை மணமகனிடம் கொடுத்து விடுவாள். பிறகு ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்குத் தயிரும் பட்சணங்களும் போகும். இதன் பிறகு மணமகனின் தந்தை பல வகைச் சீர் வரிசைகளுடன் பெண் வீட்டுக்குச் செல்வார். தாம் கொண்டுவந்த வெள்ளிக் காப்புகளைப் பெண்ணின் கால்களில் போட்டு மேள தாளத்துடன் ஊர்வலமாய் அவளைத் தம் வீட்டுக்கு அழைத்து வருவார். உறவினர்கள் சூழ்ந்து நிற்க, மணமகள் மணமகனின் நெற்றியில் குங்குமம் இடுவாள். விருந்து, பாட்டு ஆகியவற்றுடன் கல்யாணம் இனிது முடிவு பெறும். வில்வப் பழக் கல்யாணத்தில் நடந்த ஹோமம் முதலிய வைதிகச் சடங்கு ஒன்றும் இந்தக் கல்யாணத்தில் கிடையாது. ஆகவே, இதை அவர்கள் அவ்வளவு விசேஷமாக மதிப்பதில்லை.

நேவார் ஜாதிப் பெண் ஒருத்திக்குப் புருஷனிடமிருந்து விவாக ரத்துத் தேவையாக இருந்தால், புருஷனின் தலையணைக்கடியில் இரண்டு வெற்றிலையையும் பாக்கையும் வைத்துவிட்டுத் தனக்குப் பிடித்த புருஷனிடம் அவள் சென்றுவிடலாம். முதல்முதலில் வில்வப் பழத்துக்குக் கல்யாணம் ஆகிவிடுவதனால், அவள் கைம்பெண் ஆவதே இல்லை; பிடிக்காத கணவனை விட்டுச் செல்லுவதற்கோ அவளுக்கு இரண்டு வெற்றிலையும் பாக்குந்தான் செலவு!

இதற்கு நேர்மாறானவர் குர்க்கா ஜாதியினர். அவர்களுடைய விவாகக் கோட்பாடுகள் மிகவும் கண்டிப்பானவை. மனைவி கணவனை விட்டுச் செல்வது என்பது அவர்கள் மனத்தாலும் நினைக்கக் கூடாத விஷயம். அற்பக் காரணங்களுக்காக விவாக ரத்துச் செய்து கொள்வதை நேவார் ஜாதியிலுங் கூட இந்தக் காலத்தில் சட்டம் அனுமதிப்பதில்லை. நேவார் ஜாதி

நேபாளக் கணவன்

உயர் வகுப்புக் குடும்பங்களில் விவாக ரத்து இப்போது மிகவும் அபூர்வமாய்த்தான் ஏற்படுகிறது.

குர்க்கா ஜாதியின் கல்யாணச் சம்பிரதாயம் ராஜபுத்திரரின் சம்பிரதாயத்தைப் போன்றதே. ஆனால் அதிலே சில மாறுதல்கள் உண்டு. குர்க்காக்களுக்குள்ளே சுயம்வரம் என்பது உண்டு. அது பேருக்குத்தான் நடக்கிறது. ஏனென்றால், தகப்பனார் தேர்ந்தெடுத்த கணவனைத்தான் பெண் மணக்க வேண்டுமேயொழிய, தனக்கு இஷ்டமான கணவனைத் தேர்ந்தெடுக்க அவளுக்கு அதிகாரம் இல்லை.

கல்யாணம் நிச்சயமாகி முகூர்த்தம் வைத்தவுடன் சுப லக்கினத்தில் மணப்பெண் மணமகனின் நெற்றியில் சந்தன குங்குமம் இட்டுக் கழுத்தில் மாலை போடுவாள். பெண்ணுக்குக் கொடுக்கும் சீதனத்துக்கும் திலகம் என்றுதான் பெயர். விலையுயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள், ரொக்கம் முதலியவைகளைப் பணக்காரர்கள் சீதனமாக அளிக்கிறார்கள். சாதாரண மக்கள் சீதனம் அளிப்பதே இல்லை.

குர்க்கா ஜாதியைச் சேர்ந்த ஒருவனுக்கு மற்றொருவன் மனைவியுடன் கள்ளத்தனமான சம்பந்தம் ஏற்பட்டால் அவளைக் கணவன் தன் கால்களுக்கிடையே விழுந்து பணியச் செய்து, பிறகு தன் கைகளாலேயே கொல்வதற்குப் பழங்காலத்தில் உரிமை இருந்தது. ஆனால் இந்தக் காலத்தில் அந்த வழக்கம் அடியோடு நின்றுபோய் விட்டது. விவாக சம்பந்தமான கோட்பாடுகளின் கடுமையை இப்போது மிகவும் குறைத்துவிட்டார்கள். என்றாலும் சோரம் செய்கிறவர்களுக்குப் போதிய தண்டனை உண்டு.

குர்க்கா ஜாதியில் ஜாதி, மதம் இவற்றின் கட்டுப்பாடுகள் அதிகம். பசு, பிராம்மணன், ஸ்திரீ இவர்களைக் கொல்லக் கூடாது. கொல்கிறவருக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கும். முன்பெல்லாம் திருடனின் கைகளை வெட்டிவிடுவது வழக்கம். இப்போதோ திருட்டுக்குச் சில வருஷக் கடுங்காவலை விதிக்கிறார்கள். குர்க்கா ஜாதியில் பல தாரங்களை மணந்துகொள்ளும் சம்பிரதாயம் உண்டு. அதுவும் இந்தக் காலத்தில் அவ்வளவு அதிகமாகப் பழக்கத்தில் இல்லை. ஆண்களுக்கும் பெண்களுக்கும் விவாக வயதை நிர்ணயிக்கும் சட்டங்களைச் சமீபத்தில் நிறைவேற்றியிருக்கிறார்கள். பால்ய விவாகம், கிழவர்களின் கல்யாணம் இரண்டையும் தடை செய்திருக்கிறார்கள். விதவா விவாகத்தையும் விவாக ரத்தையும் குர்க்கா ஜாதியினர் அநுமதிப்பதில்லை.

மாகர் ஜாதியினரின் வழக்கங்களும் குர்க்கா ஜாதியினரின் வழக்கங்களைப் போன்றவையே. ஆயினும் 'மங்க்னு' (கல்யாணப் பிச்சை) என்ற ஒரு விநோத வழக்கம் அவர்களிடம் இருக்கிறது. பிள்ளை வீட்டைச் சேர்ந்த ஒருவன் ஒரு பாத்திரத்தில் தயிருஞ் சாதத்தை எடுத்துக்கொண்டு பெண் வீட்டுக்குச் சென்று வாசலில் நின்றுகொண்டு கிராம நாட்டாண்மைக்காரனுக்குச் சொல்லியனுப்புவான். அவன் வந்து தன் சம்மதத்தைத் தெரிவித்துப் பிள்ளையைப் பெண் வீட்டுக்குள் அழைத்துச் செல்வான். உடனே பெண்ணின் தகப்பன், தான் கல்யாணத்துக்கு ஒப்புக்கொண்டதைத் தெரிவிக்கும் அடையாளமாகச் சில நாணயங்களைப் பாத்திரத்திலுள்ள தயிருஞ்சாதத்தின்மேல் வைப்பான். பிறகு பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் காசு, பட்சணம் இவற்றை மாற்றிக் கொள்வார்கள். இதன் பின் ஒரு நல்ல முகூர்த்தத்தில் மணமகன் மேளதாளத்துடன் ஊர்வலமாய் மணமகளின் வீட்டுக்கு வருவான். முறைப்படி விவாகச் சடங்கு நடைபெறும்.

குரும் ஜாதியில் விவாகக் கோட்பாடுகள் அவ்வளவு கண்டிப்பானவை அல்ல. கணவனுக்கும் மனைவிக்குமிடையே மணம் என்பது அறுக்க முடியாத பந்தமாக இல்லை. கிராமத்தில் சந்தை கூடும்போது அங்கே வந்திருக்கும் பெண்களுக்குள்ளே தனக்குப் பிடித்த ஒருத்தியை ஓர் இளைஞன் தேர்ந்தெடுத்துக்கொள்வான். 'ரோடிகர்' என்ற நாட்டிய மண்டபங்களில் இளைஞர்களும் யுவதிகளும் சகஜமாய் ஒன்று சேர்ந்து உல்லாசமாய்ப் பொழுது போக்குவார்கள். கல்யாணத்தின் போது மது மாமிசங்களுடன் பெரிய விருந்து நடக்கும்.

கிழக்கு நேபாளத்திலுள்ள ராய் என்ற ஜாதியாரின் சம்பிரதாயங்கள் மிகவும் ரசமானவை. பாட்டுப் பாடித் தங்கள் காதலைத் தெரிவிப்பது என்பது அவைகளில் ஒன்று. ஒரு வாலிபன் தனக்குப் பிடித்த ஒரு பெண் மேல் ஒரு பாட்டுக் கட்டி அவள் காது கேட்க அதைப் பாடிக் கொண்டே இருப்பான். அந்தப் பாட்டு அந்தப் பெண்ணின் கவனத்தைக் கவர்ந்து அவள் உள்ளத்தையும் தொட்டுவிட்டால், அதற்கேற்ற பதிலை அவள் பாட்டாகப் பாடுவாள். சில நாள்வரைக்கும் இப்படியே அவர்களுக்குள் பாட்டுப் போட்டி நடைபெறும். இருவரில் ஒருவர் சளைத்துத் தோற்றுப்போன பிறகுதான் அவர்களுக்குள் கல்யாணத்தைப்பற்றிச் சம்மதம் கிடைக்கும்.

புராதன நாடான நேபாளத்தின் வாழ்க்கைக்கு இவையும் இவை போன்ற வேறு பல வழக்கங்களும் தனி வசீகரம் ஒன்றை அளிக்கின்றன. என்றாலும், தற்கால நாகரிகம் வந்து மோதுவதால், இவையெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக அங்கும் மங்கிவருகின்றன.

அசடனை ஆள்வது யார்?

புத்திசாலிக் கணவனை அப்பாவிப் பெண்கூட ஆண்டுவிட முடியும். அசட்டுக் கணவனையோ மிகவும் புத்திசாலியான பெண்தான் ஆளமுடியும்.

—கிப்ளிங்

சிறு கதை:

ஞானிகள் பரிசு

ஓ' ஹென்ரி

★★★

உலகப் பிரசித்தி பெற்ற அமெரிக்கச் சிறு கதை எழுத்தாளர் இந்த ஆசிரியர். அவருடைய கதைகளுக்குள்ளே மிகவும் பிரபலமான ஒன்று இது. ஏழைக் குடும்பம்; எளிய பாத்திரங்கள்; சர்வ சாதாரணமான சூழ்நிலை - இவைகளை வைத்துக்கொண்டு, உணர்ச்சி குழையச் செய்யும்படி இதைச் சித்திரித்திருப்பதில்தான் என்ன லாகவம்?

★★★

ஒரு டாலர், எண்பத்தேழு ஸெண்டு. அவ்வளவுதான். அதில் அறுபது ஸெண்டு அப்படியே செப்புக் காசுகள். மளிகைக் கடைக்காரன், கறிகாய்க் கடைக்காரன் எல்லாரிடமும் பிசுகிப் பிசுகிச் சல்லி சல்லியாய்ச் சேர்த்த காசு.

அதை டெல்லா மூன்று முறை திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தாள். ஒரு டாலர், எண்பத்தேழு ஸெண்டு. போது விடிந்தால், கிறிஸ்துமஸ் பண்டிகை.

இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? கீழே புரண்டு அழவேண்டியதுதான். டெல்லா அப்படியே செய்தாள். வாழ்க்கை என்பதே அழுகையும் முனகலும் புன்சிரிப்பும் கலந்ததுதானே! இவைகளுள்ளும் முனகல்தான் ஜாஸ்தி.

டெல்லா வசித்த ஜாகைக்கு வாரம் எட்டு டாலர் வாடகை. மேஜை, நாற்காலி முதலிய தளவாடங்களுக்கும் சேர்த்தே அந்த வாடகை. அவர்களுடைய வார வருமானம் ஏற்கனவே முப்பது டாலர். அது இப்போது இருபது டாலராகக் குறைந்துவிட்டது. அறைக் கதவிலிருந்த மின்சார மணி இப்போது பழுதுபட்டிருந்தது. அதற்கு மேலே 'ஜேம்ஸ் டில்லிங்ஹாம்' என்ற பெயர் பொறித்திருந்தது.

ஜேம்ஸ் டில்லிங்ஹாம் யங் வீட்டுக்குத் திரும்பி வரும்போதெல்லாம், அவன் மனைவி டெல்லா ஆர்வம் ததும்ப, "ஜிம்" என்று அழைத்துக் கட்டித் தழுவிக் கொள்வாள்.

டெல்லா அழுது முடித்தாள். பிறகு, தன் கன்னத்திலே வாசனைப் பவுடர் பூசிக்கொண்டாள். ஜன்னல் அருகே போய் நின்றாள். சாம்பல் நிறப் பூனை ஒன்று



கொல்லைப் பக்கத்து வேலியைத் தாண்டுவதை எங்கேயோ ஞாபகமாகப் பராக்குப் பார்த்துக்கொண்டிருந்தாள். போது விடிந்தால் கிறிஸ்துமஸ் பண்டிகை. ஒரு டாலர், எண்பத்தேழு ஸெண்டில் காதற் கணவன் ஜிம்முக்கு என்ன பரிசு வாங்கிக் கொடுப்பது?

மாதக் கணக்காய், தன்னால் முடிந்த ஒவ்வொரு சல்லிக் காசையும் மிச்சப்படுத்திக்கூட அவள் சேர்க்க முடிந்தது இவ்வளவுதான்.

வாரம் இருபது டாலர் வரும் படியைக் கொண்டு எப்படி ஜீவிப்பது? செலவு அவள் கணக்கை மீறிப் போய்விட்டது. எப்போதுமே செலவு இப்படித்தான் வரவை மிஞ்சிவிடுகிறது.

ஜிம்முக்கு ஒரு பரிசு வாங்க, ஒரு டாலர், எண்பத்தேழு ஸெண்டுதான் கையிலே இருக்கிறது. ஆசைக் கணவன் ஜிம்முக்கு அருமையான வஸ்து ஒன்றை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று எத்தனை நாளாய் அவள் கோடித்துக்கொண்டிருந்தாள்!

ஜன்னலிலே கண்ணாடிக் கதவு போட்டிருந்தது. அந்தக் கதவையே நிலைக் கண்ணாடியாக டெல்லா உபயோகித்து விடுவாள். இப்போதும் சட்டென்று அதைப் பார்க்கத் திரும்பினாள். அவள் கண்கள் மலர்ந்து பிரகாசித்தன. இருபது விநாடிக்குள் அவள் முகம் மட்டும் சுண்டிப் போயிருந்தது. அவசர அவசரமாகத் தன் கூந்தலை அவிழ்த்து, அதன் முழு நீளமும் தெரியும்படி தொங்கவிட்டாள்.

டில்லிங்ஹாம் தம்பதிகள் இருவரும் பெருமையுடன் போற்றும் பொருள்கள் இரண்டு: ஒன்று, ஜிம்மின் தங்கக் கடிகாரம். அது அவன்



தாத்தாவின் தாத்தா காலத்திலிருந்து வந்தது. மற்றது, டெல்லாவின் கூந்தல். உலகத்திலேயே பெரும் பணக்காரியான ஒரு ராஜகுமாரி எதிர் வீட்டிலே இருந்தால் அவள் செல்வமெல்லாம் துச்சம் என்று பழித்துக்காட்ட ஜன்னலுக்கு வெளியே தன் கூந்தலை டெல்லா பறக்க விட்டிருப்பாள்.

டெல்லாவின் கூந்தல், செம்பழுப்பு வண்டல் படிந்த நீர் வீழ்ச்சி போல் சுருள்சுருளாய் அவள் மேனியைச் சுற்றி அலைந்தது. டெல்லா பரபரப்புடன் அதிவேகமாய் அந்தக் கூந்தலை மீண்டும் சுருட்டிக் கட்டினாள். பழகிப் பழுத்துப்போன ஜாக்கட்டையும் தொப்பியையும் எடுத்து அணிந்துகொண்டாள். அங்கி அலைந்தாட, கண்களிலே ஒளி துள்ள, கதவைத் திறந்துகொண்டு வெளியே விரைந்தாள்.

'மாடம் ஸொப்ரானி: பலவிதமான சவரிகள் விற்குமிடம்' என்ற விளம்பரப் பலகை தொங்கிய ஒரு கடையின் முன்னே போய் ஒரு நிமிஷம் நின்றாள். பிறகு, மேல் மூச்சு வாங்க அதற்குள்ளே நுழைந்தாள். பருத்துக் கட்டைக் குட்டை

யாய்ச் சிடுமூஞ்சிப் பார்வையுடன் அங்கே உட்கார்ந்திருந்தாள் மாடம் ஸொப்ரானி.

"என் கூந்தலை வாங்கிக்கொள் வாயோ?" என்று அவளை டெல்லா கேட்டாள்.

"கூந்தலை வாங்குவதுதான் என் வேலை. எங்கே, உன் தொப்பியை எடு. கூந்தலைப் பார்ப்போம்" என்றாள் கடைக்காரி.

உடனே டெல்லாவின் தலையி லிருந்து அந்தச் செம்பழுப்பு நீர் வீழ்ச்சி பெருக்கெடுத்தது.

"இருபது டாலர் தருகிறேன். சம்மதமா?" என்று தன் பூதாகார மான உடலை அசைத்துக்கொண்டே கேட்டாள் கடைக்காரி.

"கொடு; அதைச் சீக்கிரம் கொடு" என்றாள் டெல்லா.

அடுத்த இரண்டுமணி நேரந் தான் எவ்வளவு ஆனந்த பரவசத் திலே கழிந்தது! ஜிம்முக்கு ஏற்ற பரிசைக் கடை கடையாய் டெல்லா தேடினாள். கடைசியிலே அதை அவள் கண்டுபிடித்து விட்டாள். அது ஒரு பிளாட்டினம் கடிகாரச் சங்கிலி. ஜிம் அணிவதற்கென்றே தயாரித்தது போல் தோன்றியது. வீண் சித்திர வேலைப்பாடெல்லாம் இல்லாமல் சுத்தமாய் இருந்தது. ஜிம்மின் தங்கக் கடிகாரத்துக்கு ஏற்ற சங்கிலி.

சங்கிலியைப் பார்த்தவுடனேயே அது ஜிம்மிடந்தான் சேரவேண்டும் என்று அவள் தீர்மானித்துவிட் டாள். அது ஜிம்மைப் போலவே இருந்தது; அமைதியும் குணமும் பொருந்தியிருந்தது. இருபத்தொரு டாலர் கொடுத்து அதை டெல்லா வாங்கிக்கொண்டாள். மிச்சம் எண் பத்தேழு ஸெண்டுகளோடு வீட்டுக்கு விரைந்தோடினாள். அந்தச் சங்கிலி யைக் கடிகாரத்திலே போட்டுக் கொண்டு தோழர்களிடையே போனால், ஜிம் அடிக்கடி மணி பார்க்கத் தொடங்குவது நிச்சயம். கடிகாரம் அருமையானதுதான். ஆனால், அதற்கு ஜிம் கட்டியிருந்த தோல் வார் எவ்வளவு நைந்து கிடந் தது! தோழர்கள் கண்ணில் படா மல் ரகசியமாய் இப்போது ஜிம் மணி பார்த்துக்கொள்வதன் கார ணம் அந்தத் தோல் வார்தானே?

டெல்லா வீட்டுக்கு வந்து சேர்ந் தாள். அவளுடைய ஆனந்த லாகிரி சற்றுத் தணிந்தது. சாமர்த்தியமாய் நடந்துகொள்ள வேண்டாமா? கூந்தலைச் சுருளாக்கும் கருவியைக் கையில் எடுத்துக்கொண்டாள். 'காஸ்' அடுப்பை ஏற்றினாள். தன் தலையின் அலங்கோலத்தைச் சரிக் கட்டுவதில் முனைந்தாள். ஆனால், அது என்ன சுலபமான காரியமா? பிரமாதமான சிரமம் கொடுத்து விட்டது.

நாற்பது நிமிஷத்தில், டெல்லா வின் தலை ஓர் ஒழுங்குக்கு வந்தது. சின்னஞ்சிறு கூந்தல் சுருள்கள் தலையோடு தலையாய் ஒட்டிக்கொண் டிருந்தன. பள்ளிக்கூடத்தை விட் டுக் கள்ளத்தனமாய் ஓடி வந்த சிறு வனைப்போல் அவள் காட்சியளித் தாள். நிலைக் கண்ணாடியில் வெகு நேரம் தன் உருவத்தைக் கூர்ந்து கவனமாய் டெல்லா பார்த்துக் கொண்டாள்!

"ஜிம் என்னைப் பார்த்தால், கொன்றுவிடக் கூடும்; இல்லையோ, 'இது என்ன கூத்தாடிச்சி மாதிரி வேஷம்!' என்று கேலி செய்வது நிச் சயம். அதற்கு நான் என்ன செய் வது? ஒரு டாலர் எண்பத்தேழு ஸெண்டுகளை வைத்துக்கொண்டு என்னதான் செய்ய முடியும்?" என்று தனக்குத்தானே சொல்லிக்

கொண்டாள். ஏழு மணி அடித்தது. காபி தயாராகி விட்டது. அடுப்பிலே இருப்புச் சட்டியில் வறுவலுக்குத் தயாராய் எண்ணெய் காய்ந்துகொண்டிருந்தது.

ஜிம் ஒருபோதும் நேரம் கழித்து வரமாட்டான். கடிகாரச் சங்கிலியை டெல்லா கையிலே மடித்து வைத்துக்கொண்டாள். கதவண்டை உள்ள மேஜையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டாள். ஜிம் படியேறி வரும் காலடிச் சத்தம் கேட்டது. ஒரு கணம் அவளுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது.

மௌனமாய்த் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்யும் வழக்கம் அவளுக்கு உண்டு. அற்ப விஷயங்களுக்கெல்லாம் பிரார்த்தனை தொடங்கி விடுவாள். "ஆண்டவனே, நான் இன்னும் அழகாயிருப்பதாகவே ஜிம் நினைக்கச் செய்" என்று முணுமுணுத்தாள்.

கதவு திறந்தது. ஜிம் உள்ளே நுழைந்து, அதை மீண்டும் சாத்தினான். அவன் இளைத்துத் துரும்பாக இருந்தான். முகத்தில் கவலை தோய்ந்திருந்தது. பாவம்! வயது இருபத்திரண்டு. இதற்குள்ளே அவன் தலையில் குடும்ப பாரம் சுமந்துவிட்டது. அவனுக்கு ஒரு கோட்டு வாங்கக் காசில்லை. போட்டுக்கொள்ளக் கையுறை இல்லை.

வேட்டைக்கு வந்த விலங்கைப் போல், அசையாமல் ஆடாமல் ஜிம் உள்ளே புகுந்தான். அவன் கண்கள் இமைக்காமல் டெல்லாவையே வெறிக்க வெறிக்கப் பார்த்தன. அப்போது அவன் மனத்தில் என்ன தான் எண்ணம் எழுந்ததோ? அதை டெல்லா ஊகிக்க முடியவில்லை. ஆனால், அந்தப் பார்வையைக் கண்டு அவள் நடுநடுங்கிப் போனாள்.

அந்தப் பார்வையிலே, கோபமில்லை; வியப்பில்லை; கண்டனமில்லை; அருவருப்பில்லை; அவள் எதிர்பார்த்த வேறெந்த உணர்ச்சியுமே இல்லை. அவன் சும்மா வெறித்துப் பார்த்தான்; வைத்த கண் வாங்காமல் பார்த்தான். அது என்னவோ ஒரு விதமாயிருந்தது; அதை இன்னதென்றே சொல்ல முடியவில்லை.

டெல்லா மேஜையை விட்டு நழுவி, ஜிம்மிடம் ஓடினாள்.

"ஜிம், என் அன்பே! என்னை இப்படி வெறித்துப் பார்க்க வேண்டாம். என் கூந்தலை வெட்டி விற்று விட்டேன். கிறிஸ்துமஸ் பண்டிகையிலே உங்களுக்கு ஒரு பரிசு வழங்காமல் நான் எப்படி உயிர் வாழ முடியும்? கூந்தல் மறுபடியும் வளர்ந்து விடும். அதற்குக் கவலைப்படுவார்களா? அதை வெட்டி விற்பதைத் தவிர, எனக்கு வேறு வழியில்லை. என் கூந்தல் மகாவேகமாய் வளரக் கூடியது. 'மெர்ரி கிறிஸ்துமஸ்!' என்று சொல்லுங்கள், ஜிம். நாம் சந்தோஷமாயிருப்போம். உங்களுக்குக் கொடுக்க எவ்வளவு அபூர்வமான பரிசு வாங்கி வைத்திருக்கிறேன், தெரியுமா?" என்றாள் டெல்லா.

"உன் கூந்தலை வெட்டி விட்டாயா?" என்று நீட்டி முழக்கிக் கொண்டு ஜிம் கேட்டான். வெகு சிரமப்பட்டு அந்த விஷயத்தை இப்போதுதான் அறிந்துகொண்டவன் போல் அவன் தோன்றினான்.

"வெட்டி விற்றுவிட்டேன். இப்போதும் என்னை உங்களுக்குப் பிடிக்கிறதா, இல்லையா? கூந்தல் இருந்தால் என்ன, போனால் என்ன? நான் நான்தானே? இல்லையா?" என்றாள் டெல்லா.

ஜிம் என்னவோ ஒரு விதமாகத் திருப்பி அறையைப் பார்த்தான்.

"அப்படியானால் உன் கூந்தல் போய்விட்டதென்கிறாய்!" என்றான். அவன் முகத்திலே அசடு வழிந்தது.

"அதையா நீங்கள் தேடுகிறீர்கள்? இங்கே தேடிப் பயனில்லை. அதை நான் விற்றுவிட்டேன்; அது போய்விட்டது. போது விடிந்தால் கிறிஸ்துமஸ் பண்டிகை, ஜிம். என்னிடம் கருணை காட்டுங்கள். அதை உங்களுக்காகவே விற்றேன். என் தலைக் கூந்தல் என்ன சாசுவதமா? என்றோ ஒரு நாள் உதிரப் போவதுதானே? ஆனால், உங்களிடம் எனக்குள்ள பிரியமோ என்றும் அழியாதது. வறுவல் வறுக்கப் போகட்டுமா, ஜிம்?" என்று அன்பு குழையக் கேட்டாள் டெல்லா.

தன் திக்பிரமையிலிருந்து திடீரென்று தெளிவடைந்தவன் போல் ஜிம் தோன்றினான். தன் காதல் மனைவி டெல்லாவைக் கட்டி அணைத்துக்கொண்டான். பத்து விநாடி இப்படியே சென்றது. வாரம் எட்டு டாலர் வந்தால் என்ன? வருஷம் ஒரு கோடி கிடைத்தால் என்ன? இரண்டும் ஒன்றுதானே! கணித சாஸ்திரியும் விதூஷகனும் வேண்டுமானால் 'அல்ல' என்று சொல்லக்கூடும். அது சுத்த அபத்தம். கீழ் நாட்டு ஞானிகள், குழந்தை ஏசுவுக்கு விலை மதிப்பற்ற காணிக்கைகளைக் கொண்டு போனார்கள். அவர்கள் கணக்குப் போட்டுப் பார்க்கவில்லை.

ஜிம் தன் கோட் ஜேபியிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து மேஜைமீது போட்டான்.

"டெல், என்னைப் பற்றித் தப்பாய் நினைத்துக்கொள்ளாதே. கூந்தல் போனால் என்ன, பரிமள தைலம் பூசினால் என்ன? எல்லாம் எனக்கு ஒன்றுதான். என் கண்ணாட்டியிடம் எனக்குள்ள அன்பு எதனாலும் குறையாது. ஆனால், அதோ அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார். முதலில் நான் திகைப்படைந்த காரணம் உனக்குத் தெரியும்" என்றான்.

வெள்ளை வெளேரென்றிருந்த தன் மெல்லிய விரல்களால் டெல்லா அந்தப் பொட்டலத்தின் நூலை அறுத்துக் காகிதத்தைக் கிழித்தாள். உள்ளே இருந்த வஸ்துவைக் கண்டதும், தன்னையே மறந்து பேரானந்தம் பொங்கிக் கூச்சலிட்டாள். ஆனால், அடுத்த கணம் விசித்து விசித்து அழத் தொடங்கிவிட்டாள். தன் முழுத் திறமையையும் செலுத்தி, ஜிம் அவளைத் தேற்ற வேண்டியதாயிற்று.

ஏனென்றால், அந்தப் பொட்டலத்துக்குள்ளே, தலைக்கணியும் சீப்பு ஸெட் ஒன்று இருந்தது. பிராட்வே கடை ஒன்றில் கண்ணாடிப் பெட்டிக்குள் அவள் எப்போதும் பார்த்து வியந்த ஸெட் இதுதான். அழகான தலையலங்காரச் சீப்புகள்; சுத்தமான ஆமையோட்டில் செய்தவை; ஓரத்திலே கல்லிழைத்தவை; மறைந்துபோன அந்த அழகான கூந்தலுக்குப் பொருத்தமான நிறம்!

இவை மிகவும் விலை உயர்ந்த சீப்புகள் என்று டெல்லாவுக்குத் தெரியும். இவற்றைக் கண்டு ஆசைப்பட்டு ஏங்கினாளேயொழிய, இவை தனக்குக் கிட்டும் என்று ஒரு நாளும் அவள் நினைக்கவேயில்லை. இப்போதோ இவை அவளுக்குக்

கிடைத்துவிட்டன; ஆனால், எந்தக் கூந்தலை இவை அலங்கரிக்க வேண்டுமோ அது போய் விட்டது!

என்றாலும், சீப்புகளை டெல்லா மார்புறக் கட்டி அணைத்துக்கொண்டாள். வெகுநேரம் கழித்துத் தலை நிமிர்ந்தாள். நீர் மல்கி மங்கிய கண்களை உயர்த்தி, முகத்திலே புன்சிரிப்புத் தவழ, "என் கூந்தல் வெகு விரைவாய் வளரக்கூடியது, ஜிம்" என்றாள்.

பின்பு அவள் சூடுகண்ட பூனை போலத் துள்ளி எழுந்து, "ஓஹோ ஹோ!" என்று கூச்சலிட்டாள்.

ஜிம்முக்குக் காத்திருக்கும் பரிசை அவன் இன்னும் பார்க்கவில்லையே. அதை டெல்லா தன் உள்ளங்கையிலே பிரித்து வைத்துக் கொண்டு அவனிடம் காட்டினாள். பளபளவென்றிருந்த அந்தச் சங்கிலி, டெல்லாவின் உள்ளன்பையே பிரதிபலித்து ஒளிவீசுவது போல் தோன்றியது.

"இது ஜோராயில்லையா, ஜிம்? இதற்காக நகரெங்கும் நான் தேடித் திரிந்தேன். நீங்கள் இனிமேல் தினந்தோறும் நூறுதடவை மணி பார்க்கத் தொடங்கிவிடுவீர்கள். எங்கே, உங்கள் கடிகாரத்தைச் சற்றுக் கொடுங்கள்; இதை அதில் போட்டு, எப்படியிருக்கிறது என்று பார்க்கிறேன்" என்றாள் டெல்லா.

அவள் சொன்னதைக் கேட்காமல், ஜிம் அங்கிருந்த சோபாவிலே சாய்ந்தான். தன் தலையைத் தடவிக் கொண்டே புன்சிரிப்புடன், "டெல், கொஞ்ச நேரம் நம் கிறிஸ்துமஸ் பரிசுகளை ஒரு புறமாய் வைத்து வைக்கலாம். அவற்றை இப்போது உபயோகித்தல் ஆகாது; அவை மிகவும் அருமையானவை. உனக்குச் சீப்புஸெட் வாங்குவதற்காக, என் கடிகாரத்தை நான் விற்றுவிட்டேன். அது கிடக்கட்டும்; போய் வறுவலைத் தயாரி" என்றான்.

மாட்டுத்தொழுவத்திலே பிறந்த பாலகன் ஏசுவுக்குப் பரிசு கொண்டு வந்தார்களே அந்தக் கீழ்நாட்டு ஞானிகள், மகா அற்புத புருஷர்கள். கிறிஸ்துமஸ் பரிசு வழங்கும் கலையை ஆரம்பித்து வைத்தவர்கள் அவர்கள்தான். அவர்கள் ஞானிகள்; அதனால்தான் அவர்களுடைய பரிசுகளும் ஞானம் பொதிந்திருந்தன. ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்துகொள்ளக் கூடிய பொருள்களையே அவர்கள் பரிசாகக் கொண்டுவந்தார்கள்.

இதோ பாருங்களேன்: வீட்டின் மதிப்பரிய பொக்கிஷங்களை ஒருவர் மற்றவருக்காகத் தியாகம் செய்த இந்த இரண்டு அசட்டுக் குழந்தைகளின் காரியத்தை!

ஆனால், ஒன்று: இதை இந்தக் காலத்து ஞானிகளுக்கெல்லாம் சொல்லுகிறேன். பரிசுகள் வழங்கும் அனைவரிலும் இந்த இரண்டு பேருந்தான் பரம ஞானிகள்; இவர்களைப்போல் பரிசு வழங்குவோர் எவர்களோ அவர்களெல்லாம் பரம ஞானிகள். எங்கெங்கும் அவர்களே பரம ஞானிகள். பாலகன் ஏசுவுக்குப் பரிசு வழங்கிய கீழ்நாட்டு ஞானிகளுக்கு இணையானவர் இவர்களே.

மாறுத அபிப்பிராயம்

தங்கள் அபிப்பிராயத்தை ஒருபோதும் மாற்றிக்கொள்ளாதவர் இருவர்: ஒருவர் மூடர்; மற்றவர் மாண்டவர். —லவல்



அற்புத மருந்து பெனிஸிலின்

காப்டன் என். சேஷாத்ரிநாதன்

இந்தப் புத்தகச் சுருக்கத்தை, ஆசிரியர், பிரசுரகர்த்தர் இருவருடைய அநுமதியும் பெற்று இங்கே தந்திருக்கிறோம். "புத்தகம் பிரசுரமான பிறகு, ஆரோமைஸின், க்ரோமைசெட்டின் என்ற பூஞ்சண மருந்துகள் தயாராயிருக்கின்றன. அவை டைபாயிட் போன்ற ஜுரங்களுக்கும் வைரஸுகளால் விளையும் வேறு ஜுரங்களுக்கும் ஆற்றல் மிக்க மருந்துகளாய்ப் பயன்படுகின்றன" என்பதைப் புத்தகாசிரியர் குறிப்பிட விரும்புகிறார்.

(படம்: பெனிஸிலின் கண்டுபிடித்த ப்ளெமிங்)

காப்பிரைட் : 'பெனிஸிலின்' (தமிழ்ப் புத்தகம். விலை ரூ. 1-4-0). பிரசுரித்தவர் : கிறிஸ்தியன் லிட்டரச்சர் சொஸைட்டி (இந்தியா), பார்க் டவுன், சென்னை 3.

அற்புத மருந்து பெனிஸிலின்

அணுவுயிர் மண்டலம்: சில உயிர்கள் கண்ணுக்குப் புலனாகும்; சில புலனாவதில்லை; சில சடப் பொருள்களைத் தின்கின்றன; சில மற்ற உயிர்களைத் தின்கின்றன. கண்ணுக்குப் புலனாகும் உயிர்களிலே தலைவன் மனிதன்.

மனிதனுக்கு ஏன் நோய்கள் வருகின்றன? வாத பித்த கபங்களின் ஏற்றத் தாழ்வு, பொருத்தமற்ற உணவு முதலிய பல காரணங்களை முன்பெல்லாம் வைத்தியர்கள் சொல்லி வந்தார்கள். "கண்ணால் காண முடியாத அணுவுயிர்களே நோய்க்குக் காரணம்" என்று ப்ராகஸ்டோரியஸ் என்ற இதாலிய வைத்தியர்தான் 16 - ஆம் நூற்றாண்டில் முதல் முதலாகச் சொன்னார். இவர் இப்படிச் சொன்னதுகூட ஆராய்ச்சியால் அல்ல; அநுமானத்தாலேயே. அதற்குப் பின் இரண்டு நூற்றாண்டுகள் சென்றன. 1632 - இல் ஹாலந்தில் பிறந்த லூவன்ஹாக் என்பவர் அணுதரிசினி ((Microscope) என்ற பூதக் கண்ணாடியைக் கண்டுபிடித்தார். அது மிகவும் சாதாரணமானது. அதைவிடப் பல மடங்கு சக்தி வாய்ந்த அணுதரிசினிகள் பின்னால் தோன்றின. அவையே இன்று அணுவுயிர் ஆராய்ச்சியாளருக்குப் பெருந்துணையாய் இருக்கின்றன.

அணுவுயிர் (Microbes) மண்டல ஆராய்ச்சியின் தந்தை என்று சொல்லத்தக்கவர் லூயி பாஸ்டர் என்ற பிரெஞ்சுப் பெரியார். இவர் 1822 - இல் பிறந்தவர். ரசாயனம் (Chemistry) கற்றுப் பண்டிதரானார். அந்தக் காலத்தில் பிரெஞ்சு மதுபான வியாபாரிகளின் சரக்கு அடிக்கடி கேடுற்றது. அதனால் இவரைத் தங்களுக்கு உதவி செய்யும்படி அந்த வியாபாரிகள் கேட்டுக் கொண்டார்கள். அது சம்பந்தமாக, பாஸ்டர் ஆராயத் தொடங்கினார். சர்க்கரைப் பானங்களிலிருந்து நல்ல ஈஸ்ட் அணுக்களை (Yeast cells) எப்படிப் பிரிப்பது என்று கண்டுபிடித்தார். நீர்ப்பொருள்களில் (Liquid substances) பலவித அணுவுயிர்கள் உள்ளன என்பது இந்த ஆராய்ச்சிகளின்போது பாஸ்டருக்கு விளங்கியது.

ஆனால், காற்றிலே அணுவுயிர்கள் உலவுகின்றன என்று முதல் முதலில் சொன்னவர் இங்கிலாந்து விஞ்ஞானி டிண்டல். அவர் ஒரு பாத்திரத்தில் நீர்ப்பொருளைக் கொதிக்க வைத்தார்; அதற்குள் செல்லுகிற காற்றை எரித்ததுடன், மேலும் காற்றுச் செல்லவொட்டாமல் தடுத்தார். இந்த நீர்ப்பொருள் நெடுங் காலம் கெடாதிருந்தது. ஆனால், சில சமயம் கேடுற்றது. அதன் காரணத்தை டிண்டல் ஆராய்ந்தார். 'கேடுற்ற காரணம் எரித்த காற்றல்ல; நீர்ப் பொருளுக்குள்ளேயே சாகாமல் மிஞ்சிய அணுவுயிர்கள்தான்' என்று அறிந்துகொண்டார். அவைகளைக் கொல்ல என்ன வழி என்று சிந்தித்தார். நீர்ப்பொருளை மறுபடி மறுபடி மூன்று நாள் கொதிக்க வைத்தார். அந்த நீர்ப் பொருள் வெகு காலம் கெடாதிருந்தது. இந்தக் காப்பு முறைக்கு 'டிண்டல்

ஸிஸ்டம்' என்று பெயர் வழங்கு கிறது. நீர்ப் பொருள் முதல் முறை கொதிக்கும்போது இறப்பவை சாதாரண அணுவுயிர் கள்; இறவாதவை ஸ்போர் (Spore) என்ற (உலர்ந்த விதை போன்ற) உயிர் நிலைகள். நீர்ப் பொருள் கொதிக்கக் கூடிய வெப் பத்தைத் தாங்கவும் வறட்சி யைத் தாக்குப் பிடிக்கவும் ஸ்போர்களுக்குச் சக்தி உண்டு. நீரின் கொதிப்பு நிலை மாறி, பொருத்தமான வெப்ப நிலை அமையும்போது, ஸ்போர்கள் மலர்ந்து அணுவுயிர்களாகப் பெரு கத் தொடங்கும். ஸ்போர்களி லிருந்து பிறந்த இந்த அணுவுயிர் கள் இரண்டாம் முறை நீர்க்கொதிப் பில் இறந்துவிடுகின்றன. இன்னும் மிஞ்சியிருந்த ஸ்போர்களிலிருந்து மலர்ந்த அணுவுயிர்கள் மூன்றும் நாள் கொதிப்பில் சாகின்றன. டிண்டல் என்ற விஞ்ஞானி கண்ட இந்த உண்மை, பாஸ்டருக்கும் புலப்பட்டிருக்க வேண்டும்.

பிரான்ஸ் தேசத்தில் கோழி களைக் காலரா போன்ற ஒருவகை நோய் பெருவாரியாகத் தாக்கியது. அந்த நோய்க்குக் காரணமான அணுவுயிர்களைக் கோழிகளிட மிருந்து பாஸ்டர் பிரித்தெடுத்து, ஒரு தட்டில் பயிர் (Culture) செய்தார். அப்போது அந்த அணு வுயிர்களின் ஆற்றல் குன்றுவதை அவர் கண்டார். நோய் பீடிக்காத கோழிகளின் உடலில் இந்த அணு வுயிர்களைப் புகுத்தினர். கோழி கள் சாகவில்லை; தவிர இந்தக் காலரா போன்ற நோய் பின்னுல் அந்தக் கோழிகளுக்கு உண்டா கவே இல்லை. இந்த முறையைக் கைக்கொண்டு, நோய் வராமல் தடுக் கத் தொடங்கினர்கள். நோய் அணுக் களை வலிமை குறைத்துத் தயா ரித்துக்கொள்ளும் மருந்துக்கு 'வாக் ஸின்' (Vaccine) என்றும் அதை உடலில் புகுத்துவதற்கு 'வாக்ஸினே ஷன்' (Vaccination) என்றும் பெயர். ஒரு பிராணி அல்லது மனிதனின் உடலில் வாக்ஸினே ஷன் செய்வதால் ஏற்படுகிற நிலைக்கு 'நோய் அணுகா நிலை' (Immunity) என்று பெயர்.

இன்னும் சில நோய்களுக்கும் அவற்றின் அணுவுயிர்களைக் கொண்டு இந்தமாதிரி 'வாக்ஸின்' களைப் பாஸ்டர் தயாரித்தார். வெறிநாய்க் கடியால் உண்டாகும் 'ரேபீஸ்' (Rabies), 'ஆந்த் ராக்ஸ்' (Anthrax) என்ற இரண்டு நோய்களுக்கும் அவர் தயாரித்த வாக்ஸின்கள் மிகவும் போற்றத் தகுந்தவை.

உயிருள்ள அணுவுயிர்களை வாக்ஸினுகச் செய்து உடலுக்குள் புகுத்தும் முறையே 1886 வரை இருந்தது. அந்த வருஷத்தில் தியோபால்டு ஸ்மித் என்பவர் புதிய முறை ஒன்றை வகுத்தார். வலி குன்றிய அணுவுயிர்கள் உடலில் புகுந்ததும் இறக்கின்றன. அப்போதும் உடலுக்கு நோய் அணுகாநிலை உண்டாகிறது. ஆகவே, இறந்த அணுவுயிர்களையே வாக்ஸினுகச் செய்து, உடலில் புகுத்தி நோயணுகாநிலையை உண்டாக்கலாம் என்று தியோ பால்டு ஸ்மித் அறிந்தார். இப்படி வாக்ஸின் தயாரிக்கும் முறைகளை அவர் வகுத்தார். இந்த முறைப்படி காலரா (Cholera), டைபாயிட் (Typhoid), பிளேக் (Plague) முதலிய நோய்களுக்கு வாக்ஸின் குத்துவதால் உடலுக்குக் கேடில் லாமலே சௌகரியம் ஏற்படுகிறது.

நீர்ப் பொருள்களைக் கொதிக்க வைப்பதால் மட்டும் அல்ல, கார்பாலிக் அமிலம் (Carbolic acid) என்ற மருந்தைக் கொண்டும் அணுவுயிர்களைக் கொல்லலாம் என்று லிமார் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். அணுவுயிர்களைக் கொல்லும் இந்த முறைகளை ரண சிகிச்சை (Surgery) செய்வதில் லிஸ்டர் பிரபு பயன்படுத்தினார். இவர் காலத்துக்குப் பின்புதான் ரண சிகிச்சை முறை வளர்ந்தது. இவருக்கு முன்பே குளோரபாரம் (Chloroform) என்ற மயக்க மருந்தை ஜேம்ஸ் ஸிம்ஸன் என்பவர் கண்டுபிடித்திருந்தார். ரண சிகிச்சையின்போது குளோரபாரத்தையும் அணுவுயிர்க் கொல்லி (Disinfectant) முறைகளையும் லிஸ்டர் பிரபு உபயோகித்ததால், அபாயம் குறைந்தது. அதனால் இவரை ரண சிகிச்சையின் தந்தை என்று போற்றுகிறார்கள்.

பின்னால், அணுவுயிர்க் கொல்லி மருந்துகள் இன்னும் பல தோன்றின. சவ்வீரம் (Mercuric Chloride) என்பதை நீரிலே ஆயிரத்தில் ஒரு பங்கு கலந்து, அணுவுயிர்க்கொல்லியாக உபயோகிப்பதும் வழக்கமாயிற்று.

வைசூரி என்ற பெரியம்மை (Small-pox) நோய் வராமல் தடுக்க ஜென்னர் என்பவர் வாக்ஸின் தயாரித்தார்.

தொத்து நோய்கள் ஒரு முறை தோன்றினால் மறுமுறை தோன்றுவது அரிது என்று நெடுங்காலத்துக்கு முன்பே ஜனங்கள் அறிந்திருந்தார்கள். அதனால்தான், தொத்து நோய்கள் தமக்கு இயல்பான கொடுமையுடன் மனிதரை வாட்டாமல் தடுப்பதற்காக அவற்றைப் போலியாகத் தோற்றுவிக்கும் முறைகளை ஜென்னரும் பாஸ்டரும் பிறரும் வகுத்துக் கொடுத்தார்கள்.

அணுவுயிர் விஞ்ஞானத்தைப் போற்றி வளர்த்தவர் 1843-இல் பிறந்த ராபர்ட் காச் என்ற ஜெர்மானியர். இவர் பல அணுவுயிர்களின் இயல்புகளை விளக்கினார்; அணுவுயிர்களைப் பயிர் செய்யும் முறைகளை வகுத்தார்; அணுவுயிர் ஆராய்ச்சிக்குத் தேவையான கருவிகளை அமைத்தார்.

கண்ணுக்குத் தெரியாத அணுவுயிர்களைத் தொள்ளாயிரம் மடங்கு பெரிதாக்கிக் காட்டத் தக்க அணுதரிசினியை, 19-ஆம் நூற்றாண்டில் ஆபே என்பவரும் கார்ல் ஸீஸ் என்பவரும் செய்துமுடித்தார்கள்.

இதை ராபர்ட் காச் உபயோகித்துக்கொண்டார். இறந்தவரின் உறுப்புக்களை நுண்ணிய கூறுகளாக்கி, அவைகளுக்குச் சாயமேற்றி அணுதரிசினி மூலம் ஆராயும் முறையை வெய்கார்ட் என்பவர் கடைப்பிடித்தார். இதைக் கேட்டு, அணுவுயிர்களுக்குச் சாயமேற்றி ஆராயும் முறையைக் காச்சும் கைக்கொண்டார்.

அணுவுயிர்கள் நீர்ப் பொருளில் பயிராகும் என்றாலும், நீர்ப் பொருளிலே அணுதரிசினி மூலம் அவைகளை ஆராய்வது எளிதல்ல. நீரின் தன்மையுடன் கனப் பொருளின் இயல்பும் ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய இயல்பும் உள்ள சரக்கு ஏதாவது இருந்தால், அதில் அணுவுயிர்களைப் பயிர் செய்வது எளிது. காச்சின் ஆராய்ச்சிக்குத் துணை புரிந்த ஹெஸ் என்பவரின் மனைவி இப்படிப்பட்ட ஒரு பொருளைப்பற்றி

ஒரு நாள் காச்சிடம் பேசத் தொடங்கினுள். ஆகார்-ஆகார் (Agar-agar) என்று அதற்குப் பெயர். அது ஒருவகைக் கடற்பாசி. அதைக் கொண்டு ஒருவித ஹல்வா செய்வதுண்டு. அது எளிதில் இளகும்; நீரில் கரைந்து கூழாகும். அதில் ஒளி ஊடுருவும். உப்பு, புளிப்பு, தித்திப்பு எந்தச் சுவையையும் அதில் சேர்க்கலாம். ஆகார் என்பதைப்பற்றிக் காச் கேள்விப் பட்டதும், அதை நீரில் கரைத்துக் கட்டிக் கூழாக்கி, அதில் அணுவுயிர்களைப் பயிர் செய்யத் தொடங்கினர். இந்தக் கூழே அன்று முதல் இன்றுவரை அணுவுயிர் ஆராய்ச்சியாளருக்கு உதவி வருகிறது. அணுவுயிர்கள் நிரப்பிய ஆகார்க்கூழ்க் கண்ணடித் தட்டின் மூடியைத் திறக்காமலே, அவைகளைப் பார்த்து ஆராயலாம். அணுவுயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான வெப்ப நிலையில் ஆகார்-ஆகார் இளகாது.

க்ஷயம் (Tuberculosis), காலரா, சீழ்பிடித்தல் (Sepsis) முதலிய நோய்களை விளைக்கும் அணுவுயிர்களை இந்த நோய்களுக்கு ஆளானவர்களின் உடலினின்று பிரித்தெடுத்து, எலி, சீமைப் பெருச்சாளி (Guinea Pig) முதலிய பிராணிகளின் உடலில் செலுத்தி, அவைகளுக்கு இந்த நோய்களை உண்டாக்கி, இன்ன இன்ன அணுவுயிர்களால் இன்ன இன்ன நோய்கள் உண்டாகின்றன என்பதைக் காச் நிலைநாட்டினர்.

அணுவுயிர் விஞ்ஞானம்: பல இனங்களைச் சேர்ந்த அணுவுயிர்கள் அடங்கிய நீர்ப்பொருளை அணுதரிசினிமூலம் ஆராயும்போது, ஒன்றுக்கொன்றுள்ள வேற்றுமை தெரியாது. அணுவுயிர்கள் நிறவேற்றுமை இல்லாதவை. ஆராய்ச்சிக்காக அவற்றுக்குச் சாயம் ஏற்றவேண்டும். சில அணுவுயிர்கள் எளிதில் நிறம் ஏற்றுக்கொள்ளும். ஸ்போர் நிலையில் இருப்பவை இயற்கை வர்ணங்களுக்கு உடன்படுவதில்லை; அவைகளுக்கு இளஞ்சூடு ஏற்றிப் பதமாக்கினால்தான், அவை இணங்கி வரும். நிறம் ஏற்றப் பல முறைகள் உண்டு. நிறம் ஏற்றிப் பல வகுப்புக்களாயிருக்கும் அணுவுயிர்களைப் பாகுபடுத்தி ஆராயலாம்.

அணுவுயிர்களின் உடலை அளக்கத் தனி முறை இருக்கிறது. ஒரு மீட்டர் என்பது $39\frac{1}{2}$ அங்குலத்துக்குச் சிறிது குறைவு. ஒரு மீட்டரைப் பத்து லட்சம் கூறுக்கி அதில் ஒரு கூறு எடுத்துக்கொண்டால் அதற்கு 'மைக்ரான்' (Micron) என்று பெயர். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று மைக்ரான் கணக்கில் அளக்கக் கூடிய அணுவுயிர்கள் இருக்கின்றன. மைக்ரான் அளவுக்கு எட்டாமல், ஆற்றல் மிகுந்த அணுதரிசினியால்கூடப் பார்க்க முடியாமல், அநுமானத்தாலேயே அறியப்படும் அணுவுயிர்களும் உண்டு. இவை வைரஸ் (Virus) என்ற வகுப்பைச் சேர்ந்தவை. இவை மனித உடம்பின் திசுக்களில் (Tissues) புகுந்து விளைக்கிற நோய் இலக்கணங்களை நோக்கியும், எலெக்ட்ரான் அணுதரிசினி (Electron Microscope) என்ற கருவியின் உதவி கொண்டும் இவைகளின் உருவ அமைப்பைத் தெரிந்துகொள்ளலாம். இவைகளைத் தவிர, மைக்ரான் அளவில் பெரிய அணுவுயிர்களும் உண்டு. அவை சுமார் நூறு மைக்ரான் வரை நீளமுள்ளவை.

நீளத்தைப் போலவே பரிமாணத்



ப்ளெமிங் என்ற விஞ்ஞானியின் ஆராய்ச்சித் தட்டில் விழுந்த பெனிஸிலின் பூஞ்சணம் ஒருபுறம் தனித்து இருந்தது; ஸ்டெபி லோகாக்கஸ் அணுக்கள் விலகியிருந்தன.

திலும் அணுவுயிர்கள் வேற்றுமைப் பட்டிருக்கின்றன. பரிமாணம் பற்றி அணுவுயிர்களை விஞ்ஞானிகள் பெரும்படியாக மூன்று பிரிவு செய்திருக்கிருர்கள்.

முதல் பிரிவு: நுண்மையான பந்து வடிவம் உள்ள காக்கை (Cocci). இந்த இனத்தில் மனித உடலின் திசுவைத் தன்னந்தனியே தாக்கு பவை ஸிங்கிள் காக்கை (Single Cocci). இரட்டையாக வாழ் பவை டிப்ளோ காக்கை (Diplo Cocci). கபஜ்வரம் (Pneumonia), மூளைக் காய்ச்சல் (Meningitis), வெள்ளை விளைக்கும் மேக நோய் (Gonorrhoea) இந்த நோய்களை விளைக்கும் அணுவுயிர்கள் டிப்ளோகாக்கை வகுப்பைச் சேர்ந்தவை. திராட்சைக் குலை போல் கொத்தாக இருப்பவை ஸ்டெபிலோகாக்கஸ் (Staphylococcus). முத்துமாலை போல் தொடுத்திருப்பவை ஸ்ட்ரெப்டொ காக்கஸ் (Streptococcus).

இரண்டாவது பிரிவு: மெல்லிய கப்பித் தண்டு போன்ற பாசில்லஸ் (Bacillus). க்ஷய ரோகம் (Tuberculosis), குஷ்டம் (Leprosy) இரண்டையும் தோற்றுபவை இந்தப் பிரிவைச் சேர்ந்தவை. இந்த இனத்திலும் பலவகுப்புகள் உண்டு. நிறம் ஏற்பது, உருவ அமைப்பு, உணவு ஏற்பது, பிராண வாயுவின் தேவை இந்த விஷயங்களில் இந்த வகுப்புகள் ஒன்றுக்கொன்று வேற்றுமைப் படுகின்றன.

மூன்ருவது பிரிவு: தலை இல்லாத திருகாணி போன்ற 'ஸ்பைரில்லா' (Spirilla). இந்தப் பிரிவைச் சேர்ந்ததே கிரந்தி (Syphilis) நோய்க்குக் காரணம். வேறு பல நோய்களின் அணுவுயிர்களும் இதில் உண்டு.

அணுவுயிர்களின் உடல், ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியது (Transparent). ஆகவே, எளிதில் ஆராயும்பொருட்டு அணுவுயிர்களுக்குச் சாயம் ஏற்ற வேண்டும். நீரில் உள்ள அணுவுயிர்கள் அசையும். ஆராய்ச்சிக்கென்று தயாரித்த சிறு கண்ணாடித் தகடுகளில் நீரைத் தடவிக் காற்றிலே உலர்த்திக்கொள்ள வேண்டும். பிறகு இளஞ் சூட்டில் காட்டி, சாயம் ஏற்றினல், சாயம் பற்றிக் கொள்ளும். மெதிலின் ப்ளூ (Methylene blue),) நியூட்ரல் ரெட் (Neutral red) இரண்டையுமே சாயங்களாக உபயோகிக்கிருர்கள். ஒரு முறை சாயம் ஏற்றிய சில அணுவுயிர்களுக்கு அயோடின் (Iodine) பூசினல், சாயம் நிலைத்துவிடுகிறது. வேறு சில அணுவுயிர்களுக்கு அயோடின் பூசினலும் சாயம் நிலைப்பதில்லை. இந்த விந்தையைக் கண்டவர் கிராம் என்ற விஞ்ஞானி. இதனல்



இந்த ஆறு வட்டங்களிலும் நடுவே உள்ள பகுதிதான் பெனிஸிலின். முதல் வட்டத்தில் உள்ள பொட்டு, பத்து வார காலத்தில் கடைசி வட்டத்தில் உள்ள அளவுக்கு வளர்ந்து பரவி விடுகிறது.

சாயம் கலைபவை, சாயம் கலையாதவை என்று அணுவுயிர்களை அவர் இரண்டு வகையாக வகுத்தார்.

நோய் விளைப்பவை மாத்திரம் அல்ல, நன்மை செய்யும் அணுவுயிர்களும் இருக்கின்றன. நிலத்தில் நைட்ரஜன் (Nitrogen) உப்பை உண்டுபண்ணுகின்றன சில. பாலைத் தயிராக்குகின்றன சில. பாலைச் சீஸ் (cheese) ஆக்குபவை சில. சர்க்கரைப் பானம், திராட்சைப் பழரசம், பிற கனிரசம் இவைகளைச் சாராயமாக மாற்றுகின்றன சில. நம் உடலில் பல காரியங்கள் அணுவுயிர்களின் இயக்கத்தாலேயே நடக்கின்றன. உலகத்தில் கோடிக்கணக்கான உயிர்கள் பிறந்து மடிகின்றன. செத்தவற்றின் உடலைச் சில அணுவுயிர்கள் தாக்கி அதில் தங்களுக்கு வேண்டிய பொருள்களை உணவாக்கிக்கொண்டு மிச்சத்தை மண், நீர், காற்று முதலிய பஞ்சபூதங்களோடு கலக்கச் செய்கின்றன. இப்படி மாறுகிற சரக்குகளைத் தாவரங்கள் பயன்படுத்திக்கொள்கின்றன. மனித உடம்பின் கழிவுப் பொருள்களை ரசாயனச் சரக்குகளாக மாற்றுகின்றன சில அணுவுயிர்கள். நம் உடலிலும் பல அணுவுயிர்கள் வாழ்ந்து நன்மை செய்கின்றன. ஆகவே, அணுவுயிர் என்றதுமே கேடு விளைப்பது என்று நாம் எண்ணலாகாது.

இனி அணுவுயிருக்கும் அணுவுயிராக விளங்குகிற உயிர் மண்டலத்தைப்பற்றிச் சிறிது அறிந்துகொள்வது நலம். நீர்ப் பொருளில் தங்கியிருக்கும் அணுவுயிர்களை வடிகட்டி எடுப்பதற்கு பில்டர் காண்டில் (Filter-Candle) என்று ஒரு கருவி உண்டு. இது வெண்மையான மண்ணில் செய்தது; மெழுகுவர்த்தி போல் இருக்கும். இந்தக் கருவியால்

வடிகட்டிய பிறகும் நீரில் தங்கி விடக்கூடிய மிக நுண்ணிய அணு வுயிர்கள் உண்டு. அவற்றை வைரஸ் (Virus) என்கிருர்கள். க்ஷய ரோகம், காலரா, பெரியம்மை இவை களைத் தோற்றும் அணுவுயிர்கள், வடிகட்டியின் துளையில் நுழைந்து வெளிப்பட்டுவிடும். வைரஸுகளைத் தாவரவகையில் சேர்ப்பதா, உயி ரினத்தில் சேர்ப்பதா என்று இன்று வரைக்கும் தெரியவில்லை. உணவு நீர்ப் பொருளில் தனியாக பாக்டீ ரியா பயிராகும். வைரஸுக்கு இந்த ஆற்றல் இல்லை. தாவரம் அல்லது பிராணியைச் சார்ந்தே வைரஸ் வாழும். உடலில் புகுந்து ஜீவ அணுக்களை (Living tissues) வைரஸ் தாக்கும்போது, உறுத்தல்-பொருள்கள் (Inclusion-Bodies) தோன்றுகின்றன. இவை வைர விலிருந்து தோன்றுகின்றனவா, ஜீவ அணுவிலிருந்து தோன்றுகின் றனவா என்று தெரியவில்லை. சில வைரஸுகளின் கூட்டுறவால், ஜீவ அணுக்கள் அதிவேகமாக வளர் கின்றன. என்ருலும், வைரஸு களால் ஜீவ அணுக்கள் அழிவதே பொதுவிதி.

பெனிஸிலின் வரலாறு: அணு வுயிர்களைப் பகை யணுவுயிர்கள், அநுகூல அணுவுயிர்கள் என்று பிரிப் பது உண்டு. இது நம் நோக்கத்தைப் பொறுத்த செயல். மனிதனுக்கு உதவவேண்டும் என்ருே, பகை யாய் இருக்கவேண்டும் என்ருே, அணுவுயிர்கள் உணர்ச்சி கொள்வ தில்லை. தம் இயல்புப்படி அவை நடக்கின்றன. அது சில சமயம் நமக்கு அநுகூலமாயிருக்கிறது; சில சமயம் பிரதிகூலமாயிருக்கிறது. அநுகூல அணுவுயிரைக்கூட நம் அறிவீனத்தால் பிரதிகூலமாக்கி விடலாம். அதேபோல் பிரதிகூல அணுவுயிரை விஞ்ஞான அறிவால் நமக்கு அநுகூலமாக்கிக்கொள்ள லாம். இதைப் பெனிஸிலின் (Penicillin) வரலாறு நன்கு விளக்குகிறது.

அணுவுயிர் ஆராய்ச்சியில் ஈடுபட் டிருந்த அலெக்ஸாண்டர் ப்ளெமிங் என்பவர் தற்செயலாகவே பெனி ஸிலினைக் கண்டுபிடித்தார். அணு வுயிர்களைப் பயிர் செய்த பலஆகார்க் கூழ்த்தட்டுகளை அவர் வைத்திருந் தார். அந்தத் தட்டுகளைத் திறந்து மூடும்போது வாயு மண்டலத்தி லிருந்து எந்த அணுவுயிரின் விதை யும் அவைகளில் வந்து விழுந்து விடாதபடி வெகு எச்சரிக்கையாய் அவைகளை ப்ளெமிங் காப்பாற்றி வந்தார். அப்படியிருந்தும் ஏதோ ஒரு பூஞ்சணவிதை (Mould) அவ ருடைய தட்டு ஒன்றில் புகுந்து அங்கிருந்த உணவை ஏற்றுக் கொண்டு கொம்பும் கிளையுமாய் வளர்ந்து பல்கிவிட்டது. அணு வுயிர்க்கொல்லி ஆராய்ச்சிக்காக இந் தத் தட்டில் ஸ்டெபிலோகாக்கஸ் என்பதை, ப்ளெமிங் பயிர் செய் திருந்தார். அந்த ஸ்டெபிலோகாக் கஸை எடுத்து, இன்னெரு தட்டில் பூஞ்சணக் கலவையில்லாமல் பயி ரிட முயன்ருர். அது வீணுயிற்று; ஸ்டெபிலோகாக்கஸ் பிழைத்து வளரவில்லை.

வீணுய்ப் போனதைப் புறக்கணிப் பதே இயல்பு. ப்ளெமிங் அப்படிச் செய்யவில்லை. பயிர்த்தட்டில் பூஞ் சணம் ஒரு புறத்தில் பயிராகியிருந் தது. ஸ்டெபிலோகாக்கஸ் அணு வுயிர்கள் சற்று விலகித் தனியே பயிராகியிருந்தன; என்ருலும், உயிரற்றிருந்தன. இதன் காரணம் என்ன என்று ப்ளெமிங் யோசிக்கத் தொடங்கினர்.

உடம்பில் ரணம் உண்டானால், சீழ் பிடிக்கும். சீழுக்குக் காரணமான ஸ்டெபிலோகாக்கஸைத் தாக்க என்ன செய்வது என்ற ஆராய்ச்சிக்காகவே அதை ப்ளெமிங் பயிர் செய்திருந்தார். அந்தத் தட்டில் தற்செயலாகப் பெனிஸிலின் பூஞ்சணம் வந்து விழுந்ததைக் கண்டு, அவருக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஸ்டெபிலோகாக்கஸைத் திரும்பத் திரும்பப் பல தட்டுகளில் பயிரிட்டு, இந்தப் பூஞ்சணத்தையும் அவற்றில் போட்டார். பூஞ்சணமில்லாத தட்டுகளில் தடையின்றி வளர்ந்த ஸ்டெபிலோகாக்கஸ், பூஞ்சணமுள்ள தட்டுகளில் வளம் பெறவில்லை. பூஞ்சணம் வளரும்போது ஏதோ ஒரு வகை ரசம் சுரந்து, ஸ்டெபிலோகாக்கஸுக்குக் கேடு செய்வதாக ப்ளெமிங் ஊகித்தார்.

இந்தப் பூஞ்சணம் சுரக்கும் சாரத்தைப் பிரிக்கவேண்டுமென்று அவர் நிச்சயித்தார். பூஞ்சணத்தைத் தக்க முறையிலே பயிரிட்டார். வேறு பூஞ்சணம் கலவாதபடி பாதுகாத்து வைத்துக்கொண்டார். பில்டர் காண்டிவில் வடிகட்டினார். வடிகட்டிய சாரத்தை ஸ்டெபிலோகாக்கஸ் போன்ற கொடிய அணுவுயிர்கள் மீது பிரயோகித்தபோது அவை செத்தன; அல்லது தடைப்பட்டு நின்றன. கார்பாலிக் ஆஸிட்டிலே நச்சுக்குணம் உண்டு; இந்தப் பூஞ்சண சாரத்தில் அந்தத் தீமையில்லை.

பெனிஸிலியம்-பூஞ்சணத்தில் பல வகைகள் இருந்தன. அவைகளில் ஒன்று பெனிஸிலியம் - நொட்டேட்டம் (Pencillium notatum). இது மாத்திரமே பிராணிகளுக்கு ஒரு தீமையும் விளைக்கவில்லை. ப்ளெமிங் வைத்திருந்த தட்டில் இந்தப் பூஞ்சணம் விழாமல் வேறொன்று விழுந்திருந்தால், பெனிஸிலின் மருந்தை அவர் கண்டுபிடித்துப் புகழடைந்திருக்க மாட்டார். இது 1929-ஆம் வருஷம் நடந்தது.

அணுவுயிர்களிலிருந்தே அணுவுயிர்க் கொல்லிகளைப் பெறலாம் என்ற கருத்து, ப்ளெமிங்குக்கு முந்தியே இருந்து வந்தது. ஆனால் அதுபற்றி நடந்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை. சீழ் பிடிக்காமல் இருக்க ப்ராண்டஸில் (Prontosil) என்ற ரசாயன மருந்தை ஜெர்மன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். ப்ராண்டஸில் என்ற மருந்தின் முக்கிய அம்சமான சல்பானமைடு (Sulphanamide) என்பதுதான் அதன் சக்திக்குக் காரணம் என்று அறிந்து, அதைப் பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஏராளமாகத் தயாரித்துக் குறைந்த விலையில் விற்கத் தொடங்கினார்கள். சல்பானமைடு மருந்துகளை மாற்றிப் புது மருந்துகளும் செய்தார்கள். அவை மேலும் சக்தி பெற்றிருந்தன. இந்த நிலையில் புதிய அணுவுயிர்க் கொல்லிகளைத் தேடும் முயற்சி இல்லாது போயிற்று. இதனால் பெனிஸிலினைப்பற்றி யாரும் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை.

என்றாலும், சல்பானமைடு மருந்துகளை அதிக அளவில் கொடுத்தால், உடலுக்குச் சில தீங்குகள் விளைந்தன. தவிர ஸ்டெபிலோகாக்கஸை எதிர்க்க, சல்பானமைடு மருந்துகளுக்குச் சக்தி இல்லை. எனவே, 1939-இல் ப்ளோரி என்பவரும் அவருடைய கூட்டாளியான செயின் என்பவரும் பெனிஸிலினை மீண்டும் ஆராயத் தொடங்கினார்கள். பெனிஸிலியம் வளர்ந்த உணவுநீரைப் பிரிப்பதற்கு ஏற்ற

கருவிகளைச் செய்தார்கள்; அதற்குரிய ரசாயன முறைகளையும் கையாண்டார்கள். நீரில் அமில (Acid) நிலையில் இருந்த பெனிஸிலினைப் பிரித்துச் சுத்தமாக்கியபோது, அது மஞ்சள்நிறப் பொடியாயிற்று. அதில் ஒரு துளியை, பத்து லட்சம் மடங்கு உணவு நீரில் கலந்து, அந்த நீரில் ஸ்டெபிலோகாக்கஸைப் பயிரிட்டால், அப்போதும் அந்த அணுவுயிர் வளரவில்லை. பெனிஸிலினை முதலில் வெள்ளைச் சுண்டெலிகளுக்குப் புகுத்தி ஆராய்ந்தார்கள். அதில் நல்ல பலன் கிடைத்தது.

பெனிஸிலினுக்கு வசமாகும் அணுவுயிர்கள் எவை என்று பிறகு ஆராய்ந்தார்கள். சீழ் விளைக்கும் ஸ்டெபிலோகாக்கஸ், ஜன்னி விளைக்கும் ஸ்ட்ரெப்டோகாக்கஸ், கபஜ்வரம் விளைக்கும் நிமோகாக்கஸ், மேகநோய் விளைக்கும் கானோகாக்கஸ், மூளைக் காய்ச்சல் விளைக்கும் மெனிஞ்சோகாக்கஸ், ஊழலை விளைக்கும் க்ளாஸ்ட்ரிடியம் ஸெப்டிக் (Claustridium Septique) இந்த அணுவுயிர்களெல்லாம் பெனிஸிலினால் அழியும் என்று கண்டார்கள். பெனிஸிலினில் அடங்கிய முக்கியமான தாதுப் பொருள் 'ஸி' என்று குறிக்கப்படும் கரி. ஹைட்ரஜன், நைட்ரஜன், கந்தகம், பிராண வாயு இவற்றின் அணுக்கள் ரசாயன ரீதியில் கரி அணுக்களோடு சேர்ந்து பெனிஸிலின் உண்டாகிறது. பூஞ்சணத்திலிருந்து உற்பத்தியாகும்போது நுண்ணிய அமைப்பு-வேற்றுமை ஏற்பட்டு, பெனிஸிலினில் பல ரகங்கள் தோன்றுகின்றன. பெனிஸிலின் F, பெனிஸிலின் X, பெனிஸிலின் G, பெனிஸிலின் K என்று அவைகளைப் பிரித்திருக்கிறார்கள். அவைகளுக்குள்ளே பெனிஸிலின் G தான் வைத்தியத்துக்கு இன்றியமையாதது. ஸ்டெபிலோகாக்கஸ் அணுவுயிர்களைக் கொல்ல இந்த ரகத்துக்கு உள்ள சக்தி மற்ற ரகங்களுக்கு இருப்பதில்லை.

பெனிஸிலினைத் தவிர, வேறு பூஞ்சண மருந்துகளும் தோன்றியிருக்கின்றன. கிராமிஸிடின் (Gramicidin), டைரொஸிடின் (Tyrocidin) என்ற இரண்டும் பூஞ்சண மருந்துகள்; நல்ல ஆற்றல் உடையவை. ஆனால் இவைகளைப் போதிய அளவு உற்பத்தி செய்ய முடியவில்லை. இவை நோயாளியின் உடலில் புகுந்த பின் சில சமயம் தீங்கு விளைக்கும்; நச்சுக் குணம் உள்ளவை. இந்த நிலையில் ஸ்ட்ரெப்டொமைசின் (Streptomicin) என்ற மற்றொரு பூஞ்சண மருந்து சஞ்சீவிபோல் தோன்றியது. அது க்ஷயரோகத்தைக் குணம் செய்கிறது. டைபாயிட் முதலிய வேறு சில அணுவுயிர்களையும் தாக்குகிறது.

இந்தப் பூஞ்சண மருந்துகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்ததில் இன்றுவரைக்கும் பெனிஸிலினுக்கு ஈடாக எதுவும் இல்லை. ஆனால், இந்த மாதிரி ஆராய்ச்சிகளின் பலனாக, பெனிஸிலினைவிட ஆற்றல் மிக்க அருமருந்தும் ஒன்று தோன்றக்கூடும்; சமீபத்திலேயே தோன்றவும் கூடும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

ஆத்ம சுத்தி



கடவுளின் திருக்கோலத்தில் வளர்ந்து, அவனுடைய ஆனந்தமும் சக்தியும் பாயும் கால்வாயாகவும், அவன் திருவிளையாடல்களுக்குக் கருவியாகவும் இருக்க வேண்டுமென்ற ஆணை நமக்குக் கிடைத்திருக்கிறது.

அசுபங்களினின்று நீங்கித் தூய்மைபெற்று உலகில் அந்தத் தெய்விக சக்தியை வாங்கி வழங்கும் மின்சாரக் கருவியாக நாம் பணி புரிய வேண்டும்; அந்தச் சக்தியை அனுப்பி மனித ஜாதியினிடம் உணர்ச்சி எழவும் பரவவும் செய்ய வேண்டும்; அதனால் நமக்குள் யாரேனும் எங்கேனும் நின்றால் சுற்றிலுமுள்ள நூற்றுக்கணக்கானவர்கள் ஒளியும் சக்தியும் உடையவர்களாகித் தெய்வமயமாகவும் ஆனந்தமயமாகவும் ஆகிவிட வேண்டும்.

கோயில்கள், மதங்கள், வேதாந்தம் ஆகியவைகளெல்லாம் அறிவுக் கோட்பாடு, சட்டதிட்டங்கள், ஸ்தாபனங்கள் இவற்றில் புதையுண்டு போயின. அவை மனித ஜாதியைப் பாதுகாக்கத் தவறின. அவசியமாக இருக்கவேண்டிய ஆத்ம சக்தியையும் ஆத்ம சுத்தியையும் அவை புறக்கணித்துவிட்டன.

—மகான் அரவிந்தர்

Feb '51 Regd. No. M. 4975

மஞ்சரி

விக்ருதி — மாசி

சீனாவின் புது வாழ்வு	ப்ளிட்ஸ்	1
கிரிக்கட்டில் குருட்டு நம்பிக்கை		6
கலை மலிந்த மலை	ஆந்திர பத்திரிகா	7
மொத்தை உருவப் படம்	சங்கர்ஸ் வீக்லி	10
புதிய அட்லாண்டிஸ்	ரா. ஸ்ரீ. தேசிகன்	14
சீமைத் தக்காளி	தி லைப் நேச்சுரல்	21
திருவிழாவில்	கலில் கிப்ரான்	24
சினிமா தங்கச் சுரங்கமா?	ஆன்லுக்கர்ஸ் மன்த்லி	25
ஆந்திர நாட்டியங்கள்	கிரகலட்சுமி	29
கௌடில்யர் காட்டும் வழி	மாத்ருபூமி	37
கணிதமேதை சகுந்தலா	ப்ரீ இந்தியா	41
அலங்காரச் சுதந்தரம்	ஸ்வதந்த்ரா	50
புதிய சரித்திர ஆராய்ச்சி	மாடர்ன் ரெவ்யூ	53
எகிப்திலே பல முகம்	பேகம்	58
கிரகமும் கிரகணமும்	பாரதி	61
பாம்புக்கடி வைத்தியம்	பம்பாய்க் கிரானிக்கிள்	66
நேபாளக் கல்யாணம்	இந்தியா	69
சிறுகதை: ஞானிகள் பரிசு	ஓ' ஹென்ரி	73
புத்தகச் சுருக்கம்: பெனிஸிலின்	என். சேஷாத்ரிநாதன்	79

விசேஷப் பகுதிகள்

க்விஸ்		13
குழந்தைகள் குறும்பு		19
விவேகானந்தர்: வாழ்வும் வாக்கும்		34
பரசுராம கர்வபங்கம்		45
கார்ட்டூன் கதம்பம் (படம்)		48
அன்றும் இன்றும் (படம்)	சங்கர்ஸ் வீக்லி	65